**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பணிமனை அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலமும், மேலும் குறைந்தபட்சம் 88 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதியும் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிர்காலத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவைப் பெற்று பேருந்துகளின் எண்ணிக்கை மக்களுடைய வசதிகளுக்கேற்ப கூடுதலாக்கப்பட்டு, ஒட்டப்பிடாரம் பகுதியில் பணிமனை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 செப்டம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஏக்கர் நிலம் என்பதை எளிதாகக் கொடுக்க முடியும். அதேபோல 88 இலட்சம் ரூபாய் என்பதும் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்துகூட கொடுக்கப்படும். எனவே, விரைந்து இந்த ஆண்டே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதி பெற்று, தனிச் சிறப்பாக இந்த ஆண்டே அந்தப் பணிமனையைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளினுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்கள் போற்றும் ஒப்பற்ற தமிழ்த் தாயே! அழகு மொழி உவமானப் பரம்பொருளே! வள்ளல் தலைவரின் வாசகத்து உட்பொருளே! கள்ளமற்ற தொண்டர்கள் நாளும் ஓதும் வேத வடிவே! உத்தமத் தலைவருடன் உழன்று திரிந்தோரை உரிய பெரியோராக்கி ஒன்று கூட்டி வைத்தவரே! சுற்றமெல்லாம் தமிழரென அடைக்கலம் ஆனவரே! பெற்றவர் பேர் சொல்லும் பிள்ளையாய் இருப்பவரே! கவலைகளைத் தீர்த்துவிடும் கருணைத் தாயே! காரிருளின் தீச்சுடராய் ஒளி வீசும் ஜோதிச் சுடரே! அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல அண்ணா பெயரைத் தாங்கி நிற்கும் கழகத்தை, அடையாளம் காட்டும்—அதன் இரட்டை இலைச் சின்னத்தை சிந்தாமல், சிதறாமல், மங்காமல், எந்நாளும் காத்து நிற்கும் கழகக் காவல் தெய்வமே! புரட்சித் தாயே! இருண்டிருந்த தமிழகத்தில் ஏழைகளின் வான் நிலவாய், மண் குடிசைவாசிகளின் தென்றலாய், ஆதி திராவிடர் மக்களின் காவல் தெய்வமாய், தோன்றி வரும் தங்கத் தாரகையே! தமிழைச்



2011 செப்டம்பர் 13]

சொல்லி, தமிழர்களைச் சொல்லி—எதற்கும் அரசியல் ஆதாயம் தேடும் அசுரர்களைச் சூறையாடும் சிங்க நிகர்த் தாயே! எண்ணால், எழுத்தால், செயலால் எண்ணற்ற ஏழைகளின் பயன்பட பண்பட்ட உள்ளத்தில் எண்ணங்களைத் திட்டமாக்கி, ஆக்கப் பணிகளுக்கு அனுதினமும் ஊக்கம் கொடுக்கும் உத்தமத் தலைவியே!

*முற்பகல் 10—15*

மாண்புமிகு அம்மா அவர்களே, இந்த அவனியில் வெற்றிப் பயணம் தொடரட்டும். புதிய சரித்திரம் படைக்கட்டும். இன்றும் நமதே, நாளையும் நமதே, என்றும் நமதே என்று நாள்தோறும் புரட்சித் தலைவரின் புகழ்பாடும் மாண்புமிகு அம்மாவே! உங்களைக் கும்பிடவோ கையிரண்டும் எனக்குப் போதவில்லை, அம்மா என்று கூப்பிடவோ நா ஒன்றால் எனக்கு முடியவில்லை. அடிபணியும் ஆசைக்கோர் எனக்கு அளவுமில்லை, அம்பு அளவு விழியாலே என்னை ஆட்கொண்டவரே! உயிர் மூச்சிலிருந்து உரத்த குரலாய் வெளிவரும் அம்மா என்பதுதான் என் கீதம். திட்டம் போட்டு திருடுகிற கூட்டம் திருடிக்கொண்டே போவதை, சட்டம் போட்டு தடுத்து நிறுத்தும் நீதி தேவதையே! அடிமட்ட மக்களை மேல்மட்ட மக்களாக்க உயரிய திட்டங்களை நூறு நாட்களுக்குள் தந்த திட்ட மேதையே! மக்கள் திலகத்தின் அரசியல் மறு வடிவே, சோழவந்தான் தொகுதியின் தேவைகளைச் சோர்வின்றி நான் செய்ய நல்லருள் தர வேண்டி வணங்குகிறேன் தாயே! சோழவந்தான் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியினைக் கூறி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூ.வீ. கருப்பையா அவர்கள், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மூ.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்படுமா என்பதனை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் கிளையின்மூலம் 57 பேருந்துகள்

[2011 செப்டம்பர் 13

*தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இடத்தில் பேருந்துகளினுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது. 40 கிலோ மீட்டர் தொலைவு, அந்த நீண்ட தூரமும் அங்கு ஏற்கெனவே பணிமனை இருக்கின்ற காரணத்தினால் வருங்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வள்ளலாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கடந்த 2001–2006 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்போது அங்கே இருக்கின்ற சிப்காட் வளாகத்தில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்பட்டது. அதைக் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் திறந்து வைக்க பலமுறை இம்மன்றத்தில் வலியுறுத்தியும், அதைக் காலம் கடத்தினார்கள். அதற்குப் பின்னும், மீண்டும், மீண்டும் வலியுறுத்த அதை பெயரளவிற்குத் திறந்து வைத்துவிட்டு அது செயல்படாமல் இருக்கின்றது. அந்தப் பணிமனைக்கு கூடுதலாக நகரப் பேருந்துகளும், புறநகர்ப் பேருந்துகளும் கொடுத்து அந்தப் பணிமனை விரிவுபடுத்தி நவீனப்படுத்தித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு அம்மா அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் பகுதியிலே இயங்குகின்ற பணிமனையின் பேருந்துகளுடைய எண்ணிக்கைக்கேற்ப அந்தப் பணிமனையினுடைய விரிவாக்கத்திற்கு*



2011 செப்டம்பர் 13]

*மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள். (குறுக்கீடு) நிறைய முறை நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். அவர் இப்போதுதான் ஒன்று கேட்கிறார்.*

**திரு. ச. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இன்றைய தமிழகம், நாளைய இந்தியா" மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கேட்டதைக் கொடுப்பவனே கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று கிருஷ்ண பக்தர்கள் பாடுகிறார்கள். ஆனால், கேட்காததையும் கொடுப்பவர்தான் எங்கள் அம்மா! அம்மா! என்று தமிழக மக்கள் கொண்டாடுகின்றார்கள். அந்தவகையிலே, என்னுடைய வேடசந்தூர் தொகுதிக்கு நாங்கள் சற்றும் எதிர்பார்க்காத வகையிலே வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்தை வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வேடசந்தூர் தொகுதியில் இருக்கக்கூடிய பணிமனை விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூரில் இயங்கிக்கொண்டிருக்கின்ற பணிமனைகளின்மூலம் 32 பேருந்துகள் மட்டுமே தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன. 32 பேருந்துகளுக்குத் தேவையான இடவசதிகள் அங்கு உள்ளன. தேவையான பிற வசதிகளும் அங்கே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பேருந்துகளுடைய எண்ணிக்கை கூடும்பொழுது வேடசந்தூர் பணிமனை விரிவாக்கத்திற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2011 செப்டம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள், நீங்கள் மூலக் கேள்வி இரண்டு கேட்டிருக்கிறீர்கள்; துணைக் கேள்வி ஒன்று கேட்டிருக்கிறீர்கள். இப்பொழுது additional–ஆக ஒரு துணைக் கேள்வி கேட்கிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்த ஓட்டை, உடைசல் பேருந்துகளையெல்லாம் களைந்துவிட்டு, இன்று 3,000 பேருந்துகள் தமிழகத்திற்குப் புதிதாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலும், எங்களுடைய மாவட்டத்திற்கு, திருநெல்வேலிக்கு 250 பேருந்துகள் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போல், தென்காசி பணிமனையில், அனைத்து பேருந்துகளும் இரவு நேரத்தில் வெளியில் நிறுத்தப்படுகின்றன. தென்காசியிலிருந்து ஆலங்குளம் 20 கி.மீ. தொலைவில் இருக்கிறது. ஆகையினால், எங்கள் பகுதியிலும், ஆலங்குளத்திலும் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 300 தடவைக்குமேல் அரசுப் பேருந்துகள் இயங்கி வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** ஆகவே, ஆலங்குளத்தில் புதிதாகப் பணிமனை அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய தென்காசி பணிமனை 1.86 ஏக்கர் நிலப் பரப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. தென்காசி பணிமனையின்மூலம் 89 பேருந்துகளில், 83 பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க ஆலங்குளத்தில் புதிய பணிமனைக்கு தேவை ஏற்படும்பட்சத்தில் ஆய்வு செய்து



2011 செப்டம்பர் 13]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையிலுள்ள பேருந்து நிலையம் 1991 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. சாலையோரத்தில் இருக்கக்கூடிய அந்தப் பேருந்து நிலையத்திற்கு திருத்துறைப்பூண்டி, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, மன்னார்குடியிலிருந்து வரக்கூடிய பேருந்துகள், பேருந்து நிலையத்திற்குச் செல்லாமல், முத்துப்பேட்டை பேரூராட்சியிலே திருப்பிவிடுகிறார்கள். ஆகவே, அதன் காரணமாக, அந்தப் பேருந்து நிலையம் ஆம்னி பேருந்துகள் நிற்பதற்கும், மினி லாரிகள் நிறுத்தும் இடமாகவும், தேவையற்றவர்கள் கூடுகிற இடமாகவும் இருக்கிறது. ஆகவே, அனைத்து பேருந்துகளும் அங்கே சென்று திரும்பக்கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் சென்று வருவதற்குக் கண்டிப்பாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் அதிகப்படியான வாகனங்கள் வந்து செல்கின்ற காலத்தில், தரை குண்டும், குழியுமாக இருக்கின்றது. மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. ஆகவே, பணிமனைகளை அமைக்கின்றபொழுது, பணிமனைகளில் சிமென்ட் தளம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதி நிலைமை, கடந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வாறு சீரழிக்கப்பட்டது, சின்னாப்பின்னமாக்கப்பட்டது என்பது பற்றி போக்குவரத்துத் துறையினுடைய மானியக் கோரிக்கையில் இங்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. பரமக்குடி தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அவருடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற பணிமனை மேம்படுத்தப்பட வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இரண்டு கோடி ரூபாய் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தப் பணிமனையில் சிமென்ட் தளம் அமைப்பதற்கு நிதி வழங்கும்பட்சத்தில், அந்தப் பணிமனை மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதியில், 16—க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாலாற்றின் ஓரப் பகுதியில் அமைந்திருக்கின்றன. அதற்கு, முன்பு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டு, சாலை வசதிகள் நன்றாக இருக்கின்றன. ஆனால், இதுவரை அந்த 16 கிராமங்கள் போக்குவரத்து வசதியின்றி, குறைந்தது 10 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றுதான் பஸ் ஏறுகின்ற நிலைமை இருக்கிறது. கல்பாக்கத்திலிருந்து செய்யூர் செல்வதற்கு அந்தச் சாலை நன்றாக இருக்கிறது. செய்யூரில் ஒரு வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. அது தலைமையிடமாக இருப்பதால் மற்றும் புதிய தொகுதி என்பதால் மக்கள் அனைவரும் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அம்மா ஆட்சிக்காலத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளது, இதுவரை அங்கு போக்குவரத்து வசதி இல்லை. அந்தப் பகுதியிலே ஒரு பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த கிராமங்களிலெல்லாம் பேருந்து வசதி இல்லையோ அந்தக் கிராமங்களுக்கெல்லாம், பொதுமக்களுடைய தேவைக்கு ஏற்ப பேருந்துகளை இயக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு பேருந்துகள் இயக்குவதற்கு, படிப்படியாக நடவடிக்கை எடுத்து, இந்த ஆண்டு மட்டும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், போக்குவரத்துக் கழகத்திற்கு 3,000 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு, பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு, பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**110—**

## கால்நடை மருத்துவமனை

***107—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை பேரூராட்சி, இலுப்பபாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகையில் இயங்கி வந்த கால்நடைக் கிளை நிலையம், சிறுமுகை பேரூராட்சிக்குட்பட்ட இலுப்பபாளையத்தில் 18—9—2009 முதல் இயங்கி வருகிறது. மேற்படி கிளை நிலையப் பகுதிகளில் 6,790 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. ஆதலால், கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. என்றாலும், இலுப்பபாளையம் கிராமத்தில் மருத்துவப் பட்டதாரியைக் கொண்டு இயங்கும் தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையமாகத் தரம் உயர்த்திட கால்நடை பராமரிப்புத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை பேரூராட்சிக்குட்பட்ட, இலுப்பபாளையத்தில், தற்போது கால்நடைக் கிளை நிலையம் உள்ளது. இந்தப் பேரூராட்சி, 20—க்கும் மேற்பட்ட குக்கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பேரூராட்சி. இது பெரும்பாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதி. விவசாயிகள் தற்போது கால்நடை வளர்ப்பதை உபதொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்திலேயிருந்து இயங்கி வந்த கால்நடைக் கிளை நிலையம், ஓர் ஆய்வாளர் மட்டுமே பணியாற்றுகின்ற நிலையமாக இயங்கி வருகிறது. ஆகவே, அனைத்து வசதிகளோடு கூடிய உட்கட்டமைப்பு கொண்ட, மருந்தகமாகத் தரம் உயர்த்தினால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற கால்நடை வளர்ப்பை உபதொழிலாகக் கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பேருதவியாக இருக்கும். ஆகவே, இதனைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலே, ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. அதன் அடிப்படையில், இந்த மேட்டுப்பாளையம் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட பகுதியில், கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமானால், அப்பகுதிக்கும், அருகில் செயல்பட்டு வருகின்ற கால்நடைக் கிளை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் இருக்கவேண்டும். கால்நடை மருத்துவமனை தொடங்கப்பட வேண்டுமானால், தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை, 40—க்கும் கூடுதலாக இருக்கவேண்டும். கால்நடைக் கிளை நிலையம் முதலில் தொடங்கப்படுகிறது. பின்னர் தகுதிக்கு ஏற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படுகிறது. அதன் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஒன்றியத்தில், 4 கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை மருத்துவமனையும் மற்றும் 4 கால்நடைக் கிளை நிலையங்களும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில், சிறுமுகையில் இயங்கிவந்த கால்நடைக் கிளை நிலையம் தற்போது சிறுமுகை பேரூராட்சிக்கு உட்பட்ட இலுப்பபாளையத்தில் 18—9—2009 முதல் இயங்கி வருகிறது. இந்தக் கிளை நிலைய எல்லைப் பகுதியில் 6,790 கால்நடைகள் மட்டுமே உள்ளன. ஆதலால், கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. இருந்தாலும், இலுப்பபாளையத்தில் கால்நடை மருத்துவப் பட்டதாரியைக் கொண்டு இயங்கும் தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையமாக மாற்ற கால்நடை பராமரிப்புத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

[2011 செப்டம்பர் 13

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட இலுப்பபாளையத்தில், பட்டதாரியைக் கொண்டு இயங்கும் ஒரு கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு நன்றி. ஆனால், எதிர்வரும் காலத்திலே அந்தப் பகுதியிலே அந்த மருந்தகம் அமைக்கும்பட்சத்தில், கால்நடைகள் அதிகமாக வளர்க்கின்ற வாய்ப்பு உள்ளது. ஏனென்று சொன்னால் அந்தப் பகுதி அதிகமாக மலைப் பகுதியாக இருக்கிற காரணத்தினாலே இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும்பட்சத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பகுதியிலே மருந்தகம் அமைப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—30*

*மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட மருதூர் ஊராட்சியில் கடந்த காலத்தில் ஒரு கிளை நிலையம் இயங்கி வந்தது. கடந்தகால ஆட்சியாளர்கள் அந்தக் கிளை நிலையத்தை மூடிவிட்டார்கள். அந்தப் பகுதியிலிருந்து அடுத்த கால்நடை நிலையத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் 6 கி.மீ. தூரத்திலிருக்கிற காரமடைக்கு வரவேண்டும் அல்லது தாயனூருக்குச் செல்லவேண்டும். இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நிலையத்திற்கு 8 கி.மீ. இடைவெளி தூரம் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஓ.கே. சின்னராஜ்,* top gear–*க்குப் போங்கள்,* first gear–*லேயே இருக்கிறீர்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *8 கி.மீ. தூரத்திலே இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பகுதி, கிராமப் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும் அந்த 8 கி.மீ. தூரத்தைத் தளர்த்தி, 6 கி.மீ. தூரத்திலிருக்கிற அந்த மருதூர் ஊராட்சியிலே ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*



2011 செப்டம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்காலத்திலே, கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக வரக்கூடும் என்று சொன்னார்கள். அதன்பட்சத்தில் அந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதியிலே ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு பரிசீலனையில் எடுத்துக்கொள்வார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அதேநேரத்திலே கடந்த ஆட்சிகாலத்திலே ஒரு கால்நடை மருத்துவமனை, கிளை நிலையம் மூடப்பட்டது என்று சொன்னார்கள். அந்த நிலையம் எந்தப் பகுதியிலிருக்கிறது, எதனால் மூடப்பட்டது என்பதையெல்லாம் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதியில் உடனடியாக அந்தக் கால்நடை கிளை நிலையம் செயல்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி எஸ். கணிதா சம்பத், திரு. ஆ. நாராயணன், திரு. இரா. இராஜேந்திரன், திரு. என்.ஆர். ரெங்கராஜன், திரு. எஸ்.எஸ். ரமணீதரன், திரு. சு. ரவி, திரு. இரா. தமிழ்ச்செல்வன், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் தங்களது தொகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரிடத்திலே எழுதிக் கொடுத்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், நீங்கள்கூட, எழுதிக் கொடுத்துவிடுங்கள்.*

*வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**106—**

## கிராபைட் தொழில்

***2788—திரு. சு. குணசேகரன்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை அருகில் கிராபைட் தொழிலை விரிவுபடுத்தி அதனைச் சார்ந்த துணைத் தொழில் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களின் வாழ்க்கையில் ஏற்றம் தந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.*

*விடை—*

*(அ) மற்றும் (ஆ) கண்டிப்பாக இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கான கருத்துரு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை அருகில் கிராபைட் என்ற அரிய கனிமம் கிடைத்துக்கொண்டிருக்கின்றது. அங்கே தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வாயிலாக மூலப்பொருளைச் சுத்திகரித்து மூலப்பொருளாகவே விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதி மக்களுக்கு வருமானமோ அல்லது வேலைவாய்ப்போ இல்லாத ஒரு நிலை நீடித்துக்கொண்டிருக்கின்றது. கிராபைட் மூலமாக 200—க்கும் மேற்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கான வாய்ப்பு இருக்கிற நிலையில் அங்கே ஒரு உபதொழிற்சாலை தொடங்கவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் கடந்த ஆண்டும், தனியார் நிறுவனங்கள் உபதொழில் தொடங்குவதற்கான அனுமதியைக் கேட்டு அரசுக்கு விண்ணப்பித்திருக்கின்றன.*





*ஆனால், கடந்த கால தி.மு.க. அரசு அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத ஒரு நிலை நீடித்துக்கொண்டிருந்தது. எனவே, அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு அந்த விண்ணப்பங்களையெல்லாம் பரிசீலனை செய்து உடனடியாக உபதொழில் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10—35*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனம் 'TAMIN', ஆர்.ஆர்.எல்., புவனேஸ்வர் (Regional Research Laboratory, Bhubaneswar) ஆய்வகத்தை சிவகங்கை கிராபைட் சுரங்க தாதுவின் நிலை மற்றும் சிவகங்கை தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 250 முதல் 300 டன் தாதுவைக் கொண்டு சுத்திகரிப்பு செய்யவல்ல தொழிற்சாலையை விரிவுபடுத்த சாத்தியக்கூறு உள்ளதாக 20—6—2011 தேதியிட்ட கடிதம்மூலம் தெரிவிக்கப்பட்டது.*

*தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சிவகங்கையிலுள்ள கிராபைட் தொழிற்சாலையை, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கி மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 20 கோடி ரூபாய் செலவிலே நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்*

[2011 செப்டம்பர் 13

அறிவித்ததற்காகவும், சிவகங்கை மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கேள்வி உபதொழில்கள் தொடங்கப்படுமா என்பதுதான். எனவே, உபதொழில்கள் தொடங்குவதற்கு தனியார்கள் முன்வந்திருக்கிற இந்த நேரத்தில், அதைப் பரிசீலித்து உபதொழில்கள் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன், சமீபத்தில் சில தனியார்கள் தொலைக்காட்சிகளில், பத்திரிகைகளில் ஏதோ 3 மாதத்திற்குள்ளாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பின்தங்கியிருப்பது போன்றதொரு கருத்துகளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அதன்மீது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராபைட் உபதொழில் அமைப்பதற்கு தொழில்முனைவோர் வந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கண்டிப்பாக கிட்டத்தட்ட 2 தொழிற்சாலைகள் 75 கோடி ரூபாய் செலவில் சட்டத்திற்குட்பட்டு அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 3 மாத காலத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால், தொழில் துறை வளர்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி நானும் கேள்விப்பட்டேன். முன்னாள் மைனாரிட்டி முதலமைச்சர் கருணாநிதி அவர்களுடைய தொலைக்காட்சி/பத்திரிகையிலே, அவர்கள் காலத்தில் அதிகமான தொழில் வளர்ந்த மாதிரி பேட்டி கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலைச் சொல்கிறேன். கருணாநிதியைப் பொறுத்தவரை, யாரோ எழுதித் தருவதை அப்படியே பேசுவதும், பேட்டி கொடுப்பதும் வாடிக்கையாகிவிட்டது. அதுவும் எழுதித் தருபவர் கருணாநிதியைவிட மோசமானவர். 7 மணிக்குமேல் பொன்முடி போன்று டாஸ்மாக் கடைக்குப் போகிறவராக இருப்பார் என்று நினைக்கின்றேன். 5 ஆண்டுகாலமாகச் சட்டமன்றத்திலே எந்தத் துறையைப்பற்றி பேசினார் கருணாநிதி



2011 செப்டம்பர் 13]

என்று அனைவருக்கும் தெரியும். அப்படியே பேசினாலும், மறைந்த தலைவர்களைக் கிண்டல் செய்வதும், கேலி செய்வதும், பத்திரிகையாளர்கள், மகனைப் பற்றி கேள்வி கேட்டால், 'நீதாண்டா கொலைகாரன்!' என்று மிரட்டுவதும் கருணாநிதியின் இயல்பான நடவடிக்கை. மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து துறைகளிலும், யார் எந்தக் கேள்வி கேட்டாலும் உடனடியாக, புள்ளிவிவரத்துடன் தகுந்த பதிலை அளிப்பது நமக்கெல்லாம் பெருமையாகவும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் வியப்பாகவும் இருக்கிறது. எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கருணாநிதி அவர்களுடைய குடும்பத்தினர் எப்படி, எப்படியெல்லாம் கொள்ளையடித்தார்கள் என்பதை எல்லா அமைச்சர்களும் தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், 1991-1996 மற்றும் 2001-2006-ல் இருந்த கட்சிகளில் மாண்புமிகு அம்மா அவர்களால் 1992 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட தொழில் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தமிழகத்திலே மோட்டார் வாகனங்கள், உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் செல்ஃபோன், அதன் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் போன்ற எண்ணற்ற தொழிற்சாலைகள் தமிழகத்திலே வந்திருக்கின்றனவென்றால், அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் காரணம்; யாரும் அதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் கிட்டத்தட்ட 7 இலட்சம் பேர் இந்த நிறுவனங்களிலே வேலை செய்கிறார்கள் என்றால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் காரணம். வேலைவாய்ப்பை அந்த அளவிற்கு உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10—40

இன்றைக்கு திரு. கருணாநிதி அவர்கள்—'Wall Street' என்ற பத்திரிகை செய்தியைக் கோடிட்டுக் காண்பித்துள்ளார்கள். நான் அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் அறிக்கையின்படி 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில் தொழில் உற்பத்தியிலே முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம்

முதலிடத்தில் இருந்தது. அதேசமயம், மேற்கண்ட கண்காணிப்பு மையத்தின் தற்போதைய அறிக்கையின்படி மார்ச் 2011 ஆம் ஆண்டு முடிவில், தி.மு.க.—வின் ஐந்தாண்டு கால ஆட்சி முடிவில் தமிழகம் 7 ஆம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. முந்தைய அரசு 2006 முதல் 2011 வரை தாங்கள் ஈர்த்ததாகக் கூறிக்கொள்ளும் சில திட்டங்கள் இன்றுவரையில் செயலாக்கப்படாமல் இருக்கின்றன.

இன்றைக்குத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் காரணம் என்பதற்கான சில விளக்கங்களைக் கூறிக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து தொழில்மயமாக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது என்றால் அதற்கு அம்மா அவர்கள்தான் காரணம். அம்மா அவர்களின் தொழிற்கொள்கைதான் மோட்டார் வாகனம், நோக்கியா செல்ஃபோன் நிறுவனம் போன்றவற்றிற்கு முக்கிய காரணம். இன்றைக்கு உலகத்தினர் அனைவருக்கும் நோக்கியா செல்ஃபோன் கம்பெனி பற்றித் தெரியும். இன்றைக்கு மத்திய அரசின் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை (Department of Industrial Policy and Promotion) தெரிவித்துள்ளதன்படி ஏப்ரல் 2011 முடிவில் இந்திய அளவில் தொழில்முனைவோர் குறிப்பு மற்றும் தொழில் அனுமதி கோரிய விண்ணப்பங்கள் ஐ.இ.எம். மற்றும் எல்.ஓ.ஐ. என்ற வகையில் ரூ.3,33,010 கோடி முதலீட்டுடன் கருத்திலுள்ள திட்டங்களைக் கொண்டு தமிழகம் 10-வது இடத்தில் இருந்தது. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் ஆன்லைன் மூலதனச் செலவு குறித்த தகவல் தளத்தில் குறிப்பிட்டபடி மார்ச் 2011-ன்படி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 3 மாதத்தில்மட்டும் நிறைய தொழிலதிபர்கள் அம்மா அவர்களை நேரடியாகச் சந்திக்கின்றார்கள்.

திரு. பாண்டியராஜன் அவர்கள் அன்று கேட்டதற்குக்கூட, 18 வருடங்களுக்கு முன்புவந்த தொழிற்சாலைகளை அம்மா அவர்கள் பட்டியலிட்டு பதில் சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியைப் பொறுத்தவரையில் 3 மாதங்களில் அதிகமான நிறுவனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. திரு. கருணாநிதி பற்றி உங்களுக்கே நன்கு தெரியும். கண்டிப்பாக அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில், இன்னும் வருங்காலத்தில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானமும் தவமும் ஒருங்கே பெற்ற தானைத் தலைவி, தமிழ்நாட்டு மக்களின் சேனைத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதம் வணங்குகிறேன். என்னுடைய பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்ற தனித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். தமிழ்நாட்டின் தீய சக்தி கருணாநிதியின் ஆட்சியிலே ரூபாய் 1,80,000 கோடியைக் கொள்ளையடித்த ஆண்டிமுத்து இராசாவால் வளைத்துப் போடப்பட்ட நிலங்களைத் தவிர பெரம்பலூர் தொகுதி எந்தவித வளத்தையும் கருணாநிதியின் ஆட்சியில் பெறவில்லை. கருணையோடு தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்ஜெட்டிலே விமான உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த விமான உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இந்த ஆண்டே அமையுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்கள் உடனடியாக, கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும் என்பது உறுப்பினருக்கே தெரியும். திரு. கருணாநிதியின் ஆட்சியைப் போலல்லாமல் மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சியில் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2011 செப்டம்பர் 13

## 2. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன. Please sit down. (குறுக்கீடு) குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) Please sit down, Doctor. உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. அதனால் நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.

***திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் குலதெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னைப் பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவராக நியமித்த இதய தெய்வத்திற்குக் கோடானுகோடி நன்றியினைத் தங்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான 1 முதல் 3 வரையிலான 3 அறிக்கைகளைப் பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், நீங்கள் அவையின் நடவடிக்கைகளுக்கு தயவுசெய்து குந்தகம் விளைவிக்காதீர்கள். Please sit down. No, I am not allowing.

முற்பகல் 10—45

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்



2011 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பேசுவதற்கு நான் mike கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள். நேற்று உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன், பேசினீர்கள். Please sit down. நேற்றே இதுகுறித்து விவாதிக்கப்பட்டது.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. விதி 110—ன்கீழ் அறிக்கை

### நாகப்பட்டினத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் நிறுவுதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. 591 கடல் மீனவக் கிராமங்களில் சுமார் 9 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 6,200 மீன்பிடி விசைப் படகுகளும் 50,000 பாரம்பரிய கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தி 4 இலட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

மீன் வளத் துறையினை நவீனப்படுத்துவதற்கும், கடல் பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக ஆக்கிடவும், எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மீன் பதன அலகுகள் அமைத்தல், மீன்பிடி விசைப் படகுகள் வாங்குதல், ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பு உதவிகள் அளித்தல், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீனவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், சிப்பம் கட்டுதல், விற்பனை மற்றும் போக்குவரத்து வசதிகள் அதிகரித்தல் ஆகியவற்றிற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் துவங்கப்பட்டுள்ளன.

மீனவ நண்பன், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 1977 ஆம் ஆண்டு இந்தியாவின் இரண்டாவது மீன் வளக் கல்லூரியை தூத்துக்குடியில் நிறுவினார். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் மீன் வளத்தை மேம்படுத்தவும், மீன் வளத்தைப் பெருக்குவதில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும், மீன் வளக் கல்வியை மேலும் ஊக்குவிப்பது அவசியம் ஆகிறது. மீன் வள மேம்பாட்டில் முன்னோடியாக உள்ள நாடுகளில் மீன் வளக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலும், நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில்,





கடந்த ஏப்ரல் மாதத்தில் மீன் வளம் மற்றும் பெருங்கடல் அறிவியல் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மீன் வளத்தைப் பெருக்குவதில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்துவரும் அதேவேளையில், அதற்குத் தேவையான கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த அடிப்படையில் மீன் வளத்திற்கென மீன் வளப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் மாவட்டம், 188 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மீன் பிடித்தல், உலர் மீன் உற்பத்தி மற்றும் இறால் வளர்ப்பு ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். இம்மாவட்டத்தில் 9,000 மீன்பிடிக் கலன்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மீன் வளப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு நாகப்பட்டினம் மிகவும் உகந்த இடமாக உள்ளதால், இந்த மீன் வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் தாலுகாவில் பனங்குடி மற்றும் நாகூர் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—50

முதற்கட்டமாக, தூத்துக்குடியில் உள்ள மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மீன் வளத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு, சென்னையில் உள்ள மீன் வளத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், சென்னையில் உள்ள மீன் வளப் பணியாளர் பயிற்சி நிலையம், தமிழ்நாடு கடல்சார் கழகம் ஆகியவை இந்தப் புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும். புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில் இறால் வளர்ப்பு, கெண்டை மீன் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, மீன்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 13

பதப்படுத்துதல் மற்றும் மீன் மதிப்புக் கூட்டிய பொருட்கள் உற்பத்தி, மீன்பிடிப் படகு மற்றும் இயந்திரப் பராமரிப்பு, கடலாள் பயிற்சி மற்றும் நீர்வழிப் பயிற்சி ஆகிய பாடப் பிரிவுகளில் பட்டங்கள் மற்றும் பட்டயங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழில்நுட்பப் பரிமாற்றம், விரிவாக்கக் கல்வி, மனித வளப் பயிற்சி மற்றும் மீன் வளப் பயன்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதில் இந்தப் பல்கலைக்கழகம் பெரும் பங்கு வகிக்கும். மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெறும் நபர்கள், உள்நாடு மற்றும் உலக அளவில் வேலைவாய்ப்பு பெறவும் இது வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களின் பிரதிநிதிகளாக இருந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கும், சமுதாயப் பேரொளி ஜீவரெத்தினத்திற்கும் அவர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைக்கப்படுமென நேற்றைய தினம் அறிவித்து மிகப் பெரிய பெருமையும் சிறப்பும் சேர்த்த புரட்சித் தலைவி, நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், இன்றைக்கு இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) மீன் வளப் பல்கலைக்கழகம் தொடங்கி, தமிழகத்திலே இருக்கிற மீனவ மக்களுடைய வாழ்விலே ஒளிவிளக்காக உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் வரவேற்கிறேன். ‘முடிந்தால் முடியும்; தொடர்ந்தால் தொடரும், என மீனவர்களுடைய வாழ்க்கை அவலத்தை ஒரே வரியிலே பாடினார் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ‘அவர்கள் வாழ்வு அப்படி அல்லலிலே முடியாது; எப்போதும் வளமாகத் தொடரும்; துணை நிற்க நான் இருக்கிறேன்’ (மேசையைத் தட்டும் ஒலி) என்று இன்றைக்கு அவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக மீன் வளப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.



2011 செப்டம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்காக தினமும் அறிக்கைகளை, பயனுள்ள அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட கிராமத்தில் பேசிக்கொண்டார்கள், ‘என்ன, அம்மா அறிவித்துக்கொண்டே இருக்கிறார்கள்; பணம் எங்கேயிருந்து வரும்’ என்று அவர்களே கேட்கிறார்கள். ஆனாலும், தமிழக முதல்வர், இங்கே உலகத் தலைவர்களெல்லாம் உற்றுப் பார்க்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். தமிழகத்தில் மீனவர்களுக்காக இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, இங்கே மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கிறார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே அந்த மீனவச் சமுதாயத்திற்கே பெரிய பாதுகாப்பை உண்டாக்கியிருக்கிறார்கள். மீனவ மக்களுக்கும் இது பெருத்த பாதுகாப்பாக இருக்கும் என்பதைச் சொல்லி, இந்த நேரத்தில் முதலமைச்சர் அம்மா அவர்களைப் பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனைக் கருதி பல நல்ல, நல்ல செயல்படுத்தக்கூடிய அறிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தினமும் அறிவித்து வருகிறார்கள். இன்று இந்த மீன் வளப் பல்கலைக்கழகம் பற்றி அறிவித்திருக்கிறார்கள். இதில் ஒரு தொலைநோக்குப் பார்வை தெரிகிறது. கெண்டை மீன், கலர் மீன் என்று சிந்தித்துப் பார்க்கும்போது, இதன் வளர்ச்சியைத்தான் உலக அளவிலே இப்போது பேசிக்கொண்டிருக்கிறார்கள். உலக அளவிலே இதற்கான மார்க்கெட் உள்ளதால் இதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது, அது அதிக வருமானம் கிடைக்கும் என முதலமைச்சர் அனைத்தையும் தெரிந்து வைத்திருக்கிற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்து இந்த மீன் வளப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருப்பது மீனவ நண்பனான, நாம் மதிக்கின்ற புரட்சித்

[திரு. ரா. சரத்குமார்] [2011 செப்டம்பர் 13

தலைவர் அவர்களுக்கு இது ஒரு **It is an** eulogy to the great man M.G.R., whose fan I am. அந்த மீனவச் சகோதரர்கள், மீனவ நண்பர்கள், பாதிக்கப்பட்டிருக்கின்ற கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற அந்த மீனவ நண்பர்கள் படித்துப் பட்டம் பெற்று, அந்தத் தொழிலைச் சிறப்பாக நடத்த இது உதவும் என்பதைச் சொல்லி, மீண்டும் ஒரு முறை முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேலே நடந்து, நாளை நிறைவடையப் போவது கவலைக்குரிய ஒன்றாக இருக்கின்றது. (சிரிப்பு) காரணம் என்னவென்றால், இந்தத் தொடர் நீடித்துக் கொண்டே போனால் தமிழகத்தினுடைய பல்வேறு தரப்பு மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அறிவித்ததுபோல, நேற்று அறிவித்ததுபோல, முந்தைய நாள் அறிவித்ததுபோல இன்னும் சிறப்பான திட்டங்களை அறிவித்துக் கொண்டே போய், நிச்சயமாக தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) உருவாவதற்கு வழிவகுத்திருப்பார்கள். ஒரு முன்னோடித் திட்டமாக தமிழகத்திலே மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். குறிப்பாக, சிறுபான்மை மக்கள் வாழக்கூடிய நாகூர் பகுதியிலே இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்பதை வரவேற்று, இந்தப் பல்கலைக்கழகத்திலே மீனவ சமுதாய மக்களினுடைய குடும்பத்தின் பிள்ளைகள் படிப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் முன்னுரிமை தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.



2011 செப்டம்பர் 13]

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தினந்தோறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய மக்கள் நலத் திட்டங்கள் மிகவும் சிறப்பான திட்டங்கள், அறிவிப்புகள். அந்த வகையில் இன்றைக்கு மீனவச் சமுதாயம் மேம்படுவதற்காக அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்ற அந்த அறிவிப்பை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருந்தால் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருப்போம் என்ற ஆதங்கம் இருந்தாலும்கூட, பழைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம்தான் நாகப்பட்டினமும்கூட. எனவே, அதையும் ஆய்வு செய்து நீங்கள் நல்ல முறையிலே இதை அமைப்பதற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். இன்றைக்கு நானும், என்னுடன் இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 3 சட்டமன்ற உறுப்பினர்களும் கடற்கரை ஓரத்தைச் சார்ந்தவர்கள்தான். எனவே, அவர்கள் அனைவர் சார்பாக உங்களுக்கு, எங்களுடைய மனமார்ந்த பாராட்டினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து நாளை முடிகிறவரை நாங்கள் திரும்பிச் செல்கிற நேரத்தில் யாருக்குப் புகழ் ஓங்குகிறதோ இல்லையோ, 110—க்கு புகழ் ஓங்கிக் கொண்டேயிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் இனிமேல் எல்லோரையும் 110, 110 என்றே அழைக்கப் போகிறார்கள். அந்த அளவிற்கு 110-வது விதியின்கீழ்

நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையிலே சொன்னதுபோல, தமிழ்நாடு நீண்ட கடற்கரையைக் கொண்டிருக்கிற பகுதி. 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், பல அரசுகள் அவர்களைப் பற்றி கவலைப்படாத நேரத்தில் இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மீனவர்களுக்கான ஒரு சிறப்பான திட்டத்தை 110-வது விதியின்கீழ் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, மீன் வளம் மற்றும் பெருங்கடல் வளப் பல்கலைக்கழகம் என்பது பாராட்டுக்குரியது, சிறப்புக்குரியது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் அதை வரவேற்கிறோம். ஏனென்று சொன்னால், மனித குலத்தினுடைய ஆதிகாலத் தொழில் என்று சொன்னால் அது விவசாயமும், மீன்பிடித் தொழிலும்தான். மீன்பிடித் தொழில்தான் முதன்முதலாக மனிதன் கற்றுக் கொண்டது. மீன் என்பது எல்லா மனிதர்களும் விரும்பி உண்ணக்கூடிய ஒரு பொருள். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு மருத்துவர்களே கொலஸ்ட்ரால் இருக்கக்கூடியவர்கள், நீரிழிவு நோய் இருக்கக்கூடியவர்கள் கறி சாப்பிடக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால், மீன் சாப்பிடலாம் என்று சொல்கிறார்கள். எனவே, மீன் உணவு என்பது எல்லோரும் சாப்பிடக்கூடியது, ஆரோக்கியமான உணவு. இப்படிப்பட்ட மிக நீண்ட கடற்கரையை வைத்துக் கொண்டு மீன் பற்றாக்குறை என்பது நமக்கு ஒரு மிக பெரிய பிரச்சினையாக இருந்தது. எனவே, இதனைத் தீர்க்கும் விதமாக மீன் வளப் பல்கலைக்கழகம் அமைத்து மீன் பெருக்கத்தால் அந்தக் கடலிலே இருக்கக்கூடிய மீனைப் பிடிப்பதால் நேரடியாக மீனவக் குடும்பங்களுக்கு நன்மை ஏற்படுகிறது. இங்கேயிருக்கிற ஏழரைக் கோடி தமிழ் மக்களுக்கு மீன் பிடிப்பதன் மூலமாக, உணவு கிடைப்பதன் மூலமாக நன்மை என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் என்பது மீனவ மக்களின் தேவை மட்டுமல்ல தமிழகத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி மற்றும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிற இந்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் பார்க்கிறோம்; எனவே, இந்தத் திட்டத்தை வரவேற்கிறோம்.

*முற்பகல் 11—00*

இன்றைக்கு எந்தத் துறையாக இருந்தாலும் நிறைய Technology-தேவைப்படுகின்றது. அதனடிப்படையில்தான் இந்தப் பல்கலைக்கழகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்று, பாராட்டி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மகாலிங்கம் அவர்கள்.

***திரு. பெ. மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் கொள்ளிடத்தில் துவங்கி கோடியக்கரை வரை நீண்ட கடல் எல்லையைக் கொண்ட மாவட்டம் ஆகும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஆயிரக்கணக்கான மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கிற மாவட்டம் நாகை மாவட்டம் ஆகும். நாகை மாவட்டத்தில் ஒரு மீன் வளப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான திட்டத்தை அறிவித்திருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் இருந்தாலும், மீன் வளத்தைப் பயன்படுத்துவதற்கென்று மீன் வளப் பல்கலைக்கழகம் ஒன்று தமிழக அரசின் சார்பிலே 30 கோடி ரூபாய் செலவில் நாகப்பட்டினத்தில் அமைக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்பு தொலைநோக்கு கொண்ட ஒரு சிறந்த திட்டமென்று நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, ஒரு நாட்டில் நில வளத்தைப் பற்றியும், நீர் வளத்தைப் பற்றியும்தான் சொல்வார்கள். ஆனால், கடல் வளம் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. பொருளாதார வளர்ச்சி என்று பார்க்கின்றபோதுகூட, கடற்கரை இல்லாத நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் மேம்பாடு அடைய முடிவதில்லை. ஆனால், கடற்கரையைக் கொண்ட நாடுகள் உலகத்திலேயே முன்னேறிய நாடுகளாக ஆகிவருகின்றன. கடல் வளத்தைப் பெருக்கவேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தப் பல்கலைக்கழகம்

அமைந்திருக்கின்றது. தமிழ்நாட்டில் இன்று 7 கோடி மக்கள் இருக்கிறார்களென்றால், சுமார் ஒரு கோடி மக்கள் கடல் வளத்தின்மூலம் தங்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளமுடியும். அதற்கான வாய்ப்பு கடல் வளத்திலே இருக்கிறது. கடல் வளத்தை முழுவதும் பயன்படுத்திக் கொள்ளுகின்றவகையில் மீன் வளத் துறையைச் செம்மைப்படுத்தி இந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்குகின்ற இந்த நல்ல ஆலோசனையை, நல்ல திட்டத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே நாங்கள் மனமார வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு காலத்தில் படிப்போ, திறமையோ தேவையில்லாத பல தொழில்கள் இருந்தன. விவசாயமானாலும், மீன்பிடித் தொழிலானாலும், தச்சுத் தொழிலானாலும், எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், படிப்பு தேவைப்படவில்லை. ஆனால், தற்போதைய உலகம் அறிவு யுகமாக மாறி வருகிறது. இப்பொழுது படிப்பு தேவைப்படுகிறது. சாதாரண விவசாயம் செய்வதற்குக்கூட, படிப்பு தேவைப்படுகிறது என்பதை நாம் பார்க்கின்றோம். விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்ந்து வருகின்ற இந்த அறிவு யுகத்தில் மீன் வளத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற மீனவர்களும்கூட, அவர்கள் கல்வியற்றவர்களாக, பாமரர்களாக இருப்பதைக்காட்டிலும், சிறந்த திறமை படைத்தவர்களாக உருவாகுவதற்கு இந்த மீன் வளப் பல்கலைக்கழகம் பெரிதும் பயன்படுமென்று கருதுகிறேன். எனவே, உண்மையிலேயே இந்தத் திட்டத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று கூறி வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தியடிகள் கல்வியைப் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். 'கல்வியின் நோக்கம் பணம் ஈட்டுவதற்கு இல்லை. ஆனால், ஒருவன் தன்னை மேம்படுத்திக்கொண்டு, சமுதாயத்திற்குத் தொண்டு செய்யவே கல்வி. சரியான கல்வியில்லாத சமூகம் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும் என்பது மட்டுமின்றி, மேலும் பின்தங்கியே போகும். அதாவது, 'The object of education is not to be able to earn money,



but to improve oneself and to serve the country. Without the right kind of education, the community will not only remain backward but become increasingly so'.

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூமித் தாயின்மீது விதை விழுந்து உடன் மழைப் பெய்தால்தான் செடி முளைக்கும். பெற்றத் தாயிடம் வேண்டினால் அவசியமானால்தான் அன்றே கிடைக்கும். ஆனால், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கோரிக்கை வைக்காமலேயே எங்களுக்குக் கிடைத்திருக்கிறது உலகத்தரம் வாய்ந்த உயரிய மீன் வளப் பல்கலைக்கழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது."

என்ற பொய்யாமொழிப் புலவரின் சொற்களை மெய்யாகவே உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களைப் போற்றி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நளாயினியின் வேண்டுகோளுக்கிணங்க இரவு நீண்டுகொண்டே இருந்ததாம். அதுபோல எங்களின் மீனவ மக்களின் வேண்டுகோள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆயுளும், இந்த நல்லாட்சியும் நீண்டுகொண்டேயிருக்க வேண்டுமென்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்மைக் கடலில் மீன் வளம் இல்லையென்று ஆழ்கடலில் மீன் பிடிக்க உழைப்போடு விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வி அறிவும் வேண்டுமென்று கருணை உள்ளத்தோடு மீன் வளப் பல்கலைக்கழகம் தந்த மேலாண்மைப் பல்கலைக்கழகமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே, தாங்கள் நோய்நொடியின்றி ஆயிரம் பிறை கண்டு இந்தத் தமிழகம் செழிக்க பெரும்பேற்றையெல்லாம் பெற்று பெருவாழ்வு வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் போற்றுகின்றேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "ஒரு நாள் போவார், ஒரு நாள் வருவார்; ஒவ்வொரு நாளும் துயரம்" என்ற பாடல் வரிகளுக்கேற்ப, கணவன், மகன், சகோதரன் என வீட்டிலுள்ளோரைக்

கடலுக்கு அனுப்பி, கண்களில் நீரைத் தேக்கிக் காத்திருந்து, மீன் பிடிக்கச் சென்ற சுற்றம் வந்த பின்னர், நிம்மதியோடு நாளின் மீதமுள்ள நேரத்தைச் செலவிடும் சமுதாயம் மீனவர் சமுதாயம்.

தினந்தோறும் வறுமையில் கஷ்டப்பட்டு வாழ்ந்த இந்தச் சமுதாயம் சிறக்க, கடல் அலைகள் மீண்டும், மீண்டும் வருவதுபோல, எண்ணற்ற திட்டங்களை, ஏழு கோடி இல்லங்களிலும் மகிழ்ச்சி ததும்ப, மாண்புமிகு அம்மா அவர்கள் தினந்தோறும் அறிவித்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன்படி, மீனவர் சமுதாயம் மேம்பாடு அடைய, "நேற்று, இன்று, நாளை" என தினந்தோறும் அறிவிப்புகள் செய்துவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் "நாகப்பட்டினத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்" என அறிவிப்பு செய்து, "கண்ணீரில் தத்தளித்த மீனவச் சமுதாயத்திற்கு விடிவெள்ளியாக நான் இருக்கிறேன்; நம்பிக்கை நட்சத்திரமாக நான் இருக்கிறேன்" என்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, மீனவ சமுதாய மக்களின் சார்பாகவும் அவை உறுப்பினர்களின் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் கருத்தின்படி இதுவரை, விதி 110—ன்கீழ் அம்மா அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் தொகுக்கப்பெற்று அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அளித்துள்ள அறிவிப்பும் உடனடியாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 19– மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பு தொடர்ச்சி. 12-9-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக்



கோரிக்கை மற்றும் அவற்றுக்கு முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் சார்பாகவும், மருத்துவச் சமுதாயத்தின் சார்பாகவும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு என்னுடைய பதிலுரையை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடும் மொழியும் நாம் பெற்ற கண்கள் என, கூடும் சபையில் குன்றத்து விளக்காகி, பாடும் பொழுதெல்லாம் பால் வார்க்கும் செந்தமிழே! எங்கள் அன்னையே! வணக்கம்.

விண்ணைப்போல் உயர்ந்த உள்ளம், உலகத் தமிழரை உயர்த்தும் நெஞ்சம், தென்னைபோல் நிமிர்ந்து நின்று தேர்ந்த நல்லறிவைக் கொண்டு தூய்மையால் உலகை ஈர்த்து அன்னையாய் தமிழகத்தை அணைக்கும் புரட்சித் தலைவி அம்மாவே வாழ்க! (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றுதான் தமிழினம் அங்கு அன்னையே என்றும் தலைவி. ஒன்றுதான் தமிழினம் எங்கள் அன்னையே என்றும் தலைவி. தென்றலும் நிலவும், வானும், தமிழினமும் உனையே ஏற்கும் எங்கள் அரசியே பல்லாண்டு வாழ்க! வாழ்கவே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடானுகோடி மக்களின் ஆதாரமாக, அன்பு விளக்காக ஆற்றல் சிகரமாக விளங்குகிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு பதவியேற்ற 100 நாட்களிலேயே சுகாதாரத் துறையில் மகத்தான மாற்றங்களைச் செய்துள்ளது.

*முற்பகல் 11–10*

'தமிழக மக்களின் வறுமையைக் களைந்திடவும், அவர்தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும், நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடனும் அவர்களின் இல்லங்களுக்கு அனைத்து சுகாதார

வசதிகளைத் தங்குதடையின்றி அளித்திடவும் உறுதிபூண்டுள்ளேன்' என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மொழியாகும்.

சித்திரைத் திங்கள் முதல் நாளை, தமிழ்ப் புத்தாண்டாக மீண்டும் அறிவித்து தமிழ்க் குடும்பங்களின் இல்லங்களில் விளக்கேற்றிய விடி வெள்ளியே, உலகத் தமிழர்களின் தலைவியே, இலங்கையில் தமிழ் மக்களுக்கு நிகழ்ந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க வல்லரசுகள் எல்லாம் வாய் மூடிக் கிடந்த காலத்தில், பொருளாதாரத் தடை கோரி ஓங்கிக் குரல் கொடுத்த தைரிய இலட்சுமியே! (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காத்த வீராங்கனையே! பூமிப்•பந்தெங்கும் பரவிக் கிடக்கும் 10 கோடி தமிழர்களின் காவல் தெய்வமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வில் என்றும் அக்கறை காட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள், நிதிப் பற்றாக்குறை நிலவுகிற சூழ்நிலையிலும் மக்கள் நலன் கருதி இந்த ஆண்டு, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூபாய் 4,761 கோடியை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது கடந்த ஆண்டைவிட ரூ.811 கோடி கூடுதலாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 20 விழுக்காடு அதிகமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க.–வின் இருண்ட ஆட்சியில் மக்கள் 'சிக்குன்குன்யா' போன்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்டனர். மக்கள் மட்டுமல்லாமல், சுகாதாரத் துறையும் 'சிக்குன்குன்யா'–வால் பாதிக்கப்பட்ட நோயாளிபோல் ஒடுங்கிக் கிடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிக்குன்குன்யா' என்பது வைரஸ் கிருமியால், கொசுக் கடியால் வருகின்ற ஒருவகை காய்ச்சலாகும். அந்தக் காய்ச்சல் வரும், போகும். ஆனால், அதனுடைய பின் விளைவுகளால் வரும் வலியும், முடக்குவாதமும் 3 மாதத்திலிருந்து 3 வருடங்கள் வரை இருக்கும். அதைப்போல, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்தது, செய்யாததனால் ஏற்பட்ட பின் விளைவுகளை 3 மாதங்களாகியும் சரி செய்ய முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைச் சொன்னேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசின் அலட்சியப் போக்கு மற்றும் அக்கறையின்மையால் மக்களுக்கு நேரடியாகப் போய் சேவை செய்ய வேண்டிய மிக அவசியமான பல பணியிடங்கள் அரசு மருத்துவமனைகளில் நிரப்பப்படவில்லை. எப்பொழுதும் நூற்றுக்கணக்கில் மருத்துவர் பணியிடங்கள் காலியாகவே இருந்தன. எலிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச்சல் போன்ற பலவிதமான தொற்று நோய்களால் மக்கள் அவதிப்பட்டனர். தடுப்பூசித் திட்டம்கூட தடுமாறிப்போனது. கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்க வேண்டிய பேறுகால நிதியுதவி உடனுக்குடன் அவர்களுக்கு வழங்கப்படாமல், பிறந்த குழந்தையுடன் தாய் நடந்து வந்து, நிதியுதவி பெற வேண்டிய நிலையில் காலதாமதமாக வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் மதுரை போன்ற இடங்களில் கட்டி முடிக்கப்படாத மருத்துவமனைகளை, முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட மருத்துவமனைகள் போன்று திறப்பு விழா செய்த மாயங்கள் பல நடந்தேறின.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் Multi–Speciality மருத்துவமனையைப் பொறுத்த அளவில், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து செய்கின்ற ஒரு Joint venture ஆகும். ஆனால், கட்டடம் கட்ட வேண்டிய வேலை மத்திய அரசினுடையது. ஆனால், மத்திய அரசு கட்டடம் கட்டிக் கொடுக்க முடியாத நிலைமையிலே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் முதல்வராக இருந்த கருணாநிதியும், இன்றைக்குச் சிறையிலே இருக்கின்ற வீரபாண்டி ஆறுமுகமும், கட்டி முடிக்காத நிலையிலே இருந்த கட்டடத்தைத் தேர்தலை மனதில் வைத்து அதற்குத் திறப்பு விழா நடத்தினார்கள். இப்போது, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நானும், அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் சேலம் சென்று, பொதுப் பணித் துறையிடம் கட்டடப் பணிகளை ஒப்படைத்து, இன்றைக்கு நல்ல முறையிலே பணிகள் நடைபெற ஏற்பாடு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மதுரையிலும் Trauma Care Centre கட்டி முடிக்காத நிலையிலே அதனைத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நானும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் நேரில் சென்று உடனடியாக மருத்துவமனை இயங்க நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே–தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீதே”

என்பது ஔவையாரின் பொன்மொழி. அதற்கேற்ப கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசின் தீமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, சட்டமன்றப் பேரவையின் பொன்னான நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள் தாய்—சேய் நலத்தில் காட்டிய பெரும் ஈடுபாட்டின் காரணமாக, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை, அதாவது Cemone மருத்துவமனையில்; (மேசையைத் தட்டும் ஒலி) மகப்பேறின்போது பெண் உறவினர் உடன் இருக்க அனுமதி; வட்டாரத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன் மேம்படுத்துதல்; பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற சிறப்பான பல முன்னோடித் திட்டங்கள் தொடங்கப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாகப் பொறுப்பேற்றவுடன் சுகாதாரத் துறையின் பணிகளைக் கூர்ந்தாய்வு செய்து, பல நல்ல திட்டங்களைத் தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கியிருக்கிறார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–லே சென்னை அரசு பொது மருத்துவமனையில் இரண்டடுக்குக் கோபுரங்களைக் கட்டித் திறந்து வைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நாள்தோறும் வளர்ந்துவரும் சென்னை மாநகரத்தில் ஏழை எளிய மக்களுக்கு உயர் தர மருத்துவ சிகிச்சை கிடைத்திடும் வகையில் உலகத் தரம் வாய்ந்த அதிநவீன சிறப்பு மருத்துவமனை மற்றும் புதிய அரசு மருத்துவக் கல்லூரி ஆகியவை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்படும் என்ற புகழ்மிக்க அறிவிப்பினை இம்மாமன்றத்திலே ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத் துறை வரலாற்றில் இது ஒரு மணிமகுடம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சிறப்பு மிக்க மருத்துவமனையை அறிவித்தவுடன், மருத்துவ வல்லுநர்கள், சமூக நல ஆர்வலர்கள், பொருளாதார நிபுணர்கள், ஏழை எளியவர்கள் அனைவரும் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

மனிதனுக்கு எப்போதுமே இரண்டு மனம் உண்டு. ஒன்று, உள்மனது, அது எப்போதும் உண்மையே பேசும். இரண்டாவது, வெளி மனது, வேஷம் போடும். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அறிவிப்பை அறிவித்தவுடன், முன்னாள் முதல்வர் கருணாநிதியை பத்திரிகையாளர்கள் சந்திக்கின்றார்கள். அப்பொழுது “இந்த மருத்துவமனை அமைவதில் ஆட்சேபணை இல்லை” என்று சொல்லுகின்றார். அது அவருடைய உள் மனது, தப்பித் தவறி உண்மையைப் பேசிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பிறகு இரண்டு நாட்கள் கழித்து, நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார். இது அவருடைய குதர்க்க, வெளி வேஷம் போடும் மனது. ஆனால், இன்றைக்கு அவர் பேச்சைக் கேட்க யாருமே இல்லை. தமிழக மக்களும் கேட்பதில்லை, அவர்தம் மக்களும் கேட்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உண்மை.

இந்தச் சிறப்பு மிக்க மருத்துவமனையிலே, Cardiology, Cardio Thoracic Surgery, Neurology, Neuro Surgery, Plastic Surgery, Vascular Surgery, Cancer treatment போன்ற உயர் சிகிச்சைகளெல்லாம் எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக அனைவருக்கும் கிடைக்கவிருக்கின்றது.

இந்தியாவிலே புகழ்பெற்ற இரண்டு மருத்துவமனைகள் உள்ளன. டில்லியிலுள்ள A.I.I.M.S. மருத்துவமனை, சண்டிகாரிலுள்ள P.G.I.M.E.R. இந்த இரண்டிலுமே நோயாளிகளிடம் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால், அம்மா அவர்கள் அறிவித்துள்ள இந்த மருத்துவமனையில் கட்டணம் எதுவும் வசூலிக்கப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பு மருத்துவமனையில் அனைத்து வகை உயர் சிகிச்சைகளும் எவ்வித கட்டணமும் இன்றி அனைவருக்கும் இலவசமாக வழங்க ஆணையிட்டுள்ள அம்மா அவர்களே, நீங்கள்தான் ஏழை எளிய மக்களின் தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் மருத்துவருக்கெல்லாம் மருத்துவர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் குறித்து நான் நேற்றே இங்கு விரிவாகவும், விளக்கமாகவும் பேசினேன். ஆனால், ஒருசில வார்த்தைகள் மட்டும் சொல்ல விரும்புகின்றேன். இந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு ஒரே நாளிலே ஐந்து மருத்துவக் கல்லூரிகளுக்கான அறிவிப்பை வெளியிட்டது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த மருத்துவக் கல்லூரி பல நோயாளிகளைக் காப்பாற்றக்கூடிய மருத்துவர்களை வர வைக்க வேண்டிய ஒரு கல்லூரி. அப்படிப்பட்ட ஒரு கல்லூரியை எந்தவிதமான முன் யோசனையும் இல்லாமல், தானாகவே, தான்தோன்றித் தனமாக அறிவித்தார்கள். இதைப் பார்க்கும்போது எது எனக்கு ஞாபகம் வருகிறது என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் திரைப்படமொன்றில் ஒரு பாட்டு பாடியிருப்பார்கள், அதாவது, என்ன சொல்லியிருப்பார் என்றால், எவனோ ஒருவன் செய்துவிட்டான், அதாவது தூங்கிவிட்டான், நான் என்ன செய்வேன் என்று. அதைப்போல, நான் இன்றைக்கு எந்தப் பதிலும் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கின்றேன். ஏனென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரிய இடத்துப் பெண்" என்ற படத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடல், "அவனுக்கென்ன தூங்கிவிட்டான், அகப்பட்டவன் நானல்லவா" என்ற பாடல். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. பாட்டு மறந்துவிட்டது. (சிரிப்பு) "அவனுக்கென்ன அறிவித்து விட்டான், அகப்பட்டவன் நானல்லவா?" (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–20*

நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்களும், அண்ணன் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களும் தங்களுடைய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் வரவேண்டுமென்று பேசினார்கள். முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் பேசும்போது புரட்சித் தலைவர் எங்கள் மாவட்டத்திற்கு அறிவித்தார். ஆகவே இராமநாதபுரத்திலே வரவேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் டாக்டர்களுக்கெல்லாம் டாக்டர்தான். அவருக்கு எப்போது, எங்கே டெலிவரி செய்யவேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அது எப்போதுமே கண்டிப்பாகக் குறைப் பிரசவமாக இருக்காது. சிசேரியன் ஆபரேஷனாகவும் இருக்காது. நன்றாக டெலிவரி ஆவதுடன், முழுக் குழந்தையும் சுகமாக உங்களுக்குக் கிடைக்கும் என்பதை மட்டும் இந்தத் தருணத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் ஆய்வு செய்து மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் கட்டட வசதிகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, ஆண்டுக்கு ஒரு புதிய மருத்துவக் கல்லூரி என்ற நடைமுறைச் சாத்தியமான கொள்கையை வகுத்துள்ளார்கள்.

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், காப்பீடு திட்டம் தனியார் மருத்துவமனைகள் இலாபம் அடையும் வகையில் கொண்டு வரப்பட்டது. இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை நுணுக்கமாக ஆராய்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முழுமையான பொதுக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது. 4 ஆண்டுகளுக்கு, ஒரு குடும்பத்திற்கு, ஒரு இலட்சம் ரூபாய் என்ற பற்றாக்குறை நிலையை மாற்றி, ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சில குறிப்பிட்ட நோய்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் வரையிலும் அனுமதிக்கப்படும். இந்தப் புதிய திட்டத்தில் 989 வகையான

சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், அறுவை சிகிச்சைகளுக்கு மட்டுமே காப்பீடு என்ற நிலையை மாற்றி, பரிசோதனை மற்றும் ஆய்வு செலவுகளுக்கும், பச்சிளங்குழந்தைப் பராமரிப்பு, மாரடைப்பு முதலிய மருத்துவ முறைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான பொதுப் பாதுகாப்புத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இத்திட்டத்தில் பங்கேற்கும் தனியார் மருத்துவமனைகள் கிராமப்புறங்களில் அரசு தேர்ந்தெடுக்கும் இடங்களில் இலவச சிறப்புப் பரிசோதனை முகாம்கள் நடத்தவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. தொடர் சிகிச்சைகள் தேவைப்படும் சில நோய்களுக்கு, தேவைப்படும் தொகை முறையாக நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும். தனியார் மருத்துவமனைக்கு இணையாக அரசு மருத்துவமனைகளை மேம்படுத்தும் நோக்கில், அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகள், புதிய காப்பீட்டுத் திட்டத்தில் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படும். சிகிச்சைக்கென வரையறுக்கப்பட்ட தொகை தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுவதுபோல், அரசு மருத்துவமனைகளுக்கும் முழுமையாக வழங்கப்படும். சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகள் அரசு மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்படும். இதன்மூலம் கிடைக்கும் வருவாயில் அரசு மருத்துவமனைகளைத் தூய்மையாகப் பராமரிக்கவும், தேவையான வசதிகளைச் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிய காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காப்பீட்டு நிறுவனத்தைத் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புதிய காப்பீட்டுத் திட்டம் தொடங்குவதற்குமுன், இடைப்பட்ட காலத்தில் உயிர் காப்பதற்கான சிகிச்சைகள், தேவைப்படும் நோயாளிகளுக்கு தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவக் கட்டணத்தை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு அரசே நேரடியாக வழங்கி வருகிறது. இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தைச் சீரமைத்து, ஏழைக் கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 6,000 ஆக இருந்த பேறுகால நிதியுதவியை, இருமடங்காக,



12,000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்ப்பிணிப் பெண்ணின் தந்தையும், கணவனும், தாயையும் சேயையும் கவனிக்க என்ன செய்வது? எங்கு போய்க் கடன் வாங்குவது என்று கவலைப்படும் நிலையை மாற்றி, தாயுள்ளத்துடன் ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட தாய்மார்கள் பயன்பெறும்வகையில் இந்த மாபெரும் மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்மூலம் antenatal என்று சொல்லப்படுகின்ற பிரசவ முன்காலத்தில்—ஏழாவது மாதத்திலே ரூபாய் 4,000 கொடுக்கப்படும். Natal என்று சொல்லப்படுகின்ற பிரசவ காலத்திலே ரூபாய் 4,000 கொடுக்கப்படும். Post Natal என்று சொல்லப்படுகின்ற குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடும் காலத்திலே, அந்த நான்காவது மாதத்திலே, ரூபாய் 4,000 கொடுக்கப்படும். ஆகவே, இந்தப் பேறுகாலம் ஆரம்பத்திலிருந்து, குழந்தைக்குத் தடுப்பூசி போடப்படும் காலம் வரை, ஏழையெளிய மக்களுக்கு சிரமம் ஏற்படக்கூடாது என்ற முறையிலே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த ஆணையினை வெளியிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் கடவுள் உணவு படைப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைப்போல, கருவில் உள்ள குழந்தைக்கும் அம்மா அவர்கள் ஊட்டம் தருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், கருவில் வளரும் குழந்தைகூட, அம்மாவின் நல்லரசுக்கு நன்றி கூறும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் ஏழையெளிய வளர் இளம் பெண்கள், பூப்பெய்திய காலத்திலிருந்து ஆரோக்கிமாக வளரவும், தன் சுத்தம் பேணவும் இலவச sanitary napkin வழங்கும் புதிய திட்டத்தை வகுத்துள்ளார்கள்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு adolescent girls என்று சொல்லப்படுகின்ற இளம் பெண்களுக்கு sanitary napkin வழங்கும் இந்தத் திட்டத்தின்மூலம், இந்தியாவிலேயே, ஏன், உலகிலேயே, இளம் பெண்களுக்கு sanitary napkin முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவது தமிழ்நாட்டில்தான் (மேசையைத்

தட்டும் ஒலி) என்பதைச் சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன். இந்தத் திட்டம் கேட்பதற்கு ஒரு சாதாரணத் திட்டம் போலத் தோன்றும். ஆனால், இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து Gynaecologist என்று சொல்லப்படுகின்ற பெண்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்களில் மாதவிடாய் காலத்திலே, அறியாமையின் காரணமாகவும், ஏழ்மையின் காரணமாகவும், பழைய துணிகளை உபயோகிக்கும் நிலை இன்றைக்குக்கூட இருந்து கொண்டிருக்கிறது. இதனால் chronic infection என்று சொல்லப்படுகின்ற தொடர் கிருமிகளால் பாதிப்பு ஏற்படும். இதனால் வெள்ளைபடுதல், அடிவயிறு வலித்தல் போன்றவற்றால் இளம் பெண்கள் பாதிக்கப்பட்டு, அவர்களால் கல்வியிலே கவனம் செலுத்த முடிவதில்லை. அதுமட்டுமல்லாமல்; கர்ப்பப் பை வாய் ரணம், குழந்தையின்மை, புற்றுநோய்கூட வர வாய்ப்பிருக்கிறது. அந்த இளம் பெண்கள் யாரிடமும் இதைச் சொல்ல முடியாத ஒரு நிலை; தன் தாயிடம்கூட இதைச் சொல்ல முடியாத ஒரு நிலை. ஆனால், இன்றைக்குத் தாய்க்கெல்லாம் தாயாக விளங்குகின்ற தெய்வத்தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையைக் கூர்ந்து ஆய்ந்து, நாடு போற்றும் இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இந்தத் திட்டம் இந்தியாவில், ஏன், உலகிலேயே வேறு எங்கும் இல்லை. இந்தத் திட்டத்தால் வருங்காலத் தலைமுறையே அம்மாவை வாழ்த்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்திய அளவில், 1 இலட்சம் பிரசவங்களில், 212 தாய்மார்கள் மகப்பேறு சிக்கல்களினால் இறக்க நேரிடுகிறது. தமிழகத்தில் தற்போது 1 இலட்சம் பிரசவங்களில், 80 தாய்மார்கள் மகப்பேறு சிக்கல்களினால் இறக்க நேரிடுகிறது. சிசு மரண விகிதம், இந்திய அளவில் 1,000 குழந்தைகளுக்கு 50 ஆகவும், தமிழகத்தில் 28 ஆகவும் உள்ளது. 2015–க்குள் தாய் மரண விகிதத்தை Maternal Mortality Rate (MMR) 30–க்கும் குறைவாகவும், சிசு மரண விகிதத்தை (Infant Mortality Rate) 15–க்கும் குறைவாகவும் குறைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார்கள். (மேசையைத்



தட்டும் ஒலி) இந்த இலக்கை விரைவில் அடைந்திடத்தான், 42 சுகாதார மாவட்டங்களிலே, சிசேரியன் அறுவை சிகிச்சை மற்றும் இரத்தம் செலுத்தும் வசதிகளுடன்கூடிய, 24 மணி நேரமும் செயல்படும் 42 தாய்–சேய் நல மையங்களை, கிராமப்புறத் தாய்மார்கள் பயன்பெறுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில், தொலைநோக்குப் பார்வையுடன் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற மையங்கள் இந்திய அளவில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத நிலையில், தமிழகத்தில்தான் அமைக்கப்படவுள்ளன என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப் பை வாய், மார்பகப் புற்றுநோய் போன்றவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், முழுமையாகக் குணமாக்க இயலும் என்பதை அறிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் நலத் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பப் பெண்கள் எப்பொழுதுமே தங்கள் உடல் நலத்தைப் பார்த்துக்கொள்வது கிடையாது. கணவன், குழந்தைகள் நலத்தை மட்டும் கவனிப்பதில்தான் அவர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள். தங்களுக்கு வருகின்ற கர்ப்பப் பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் பற்றிய அறியாமையாலும், வெட்கத்தினாலும் அவர்கள் வெளியே சொல்வதில்லை. இந்த இரண்டு புற்றுநோய்களையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், முழுமையாகக் குணப்படுத்த முடியும்; உயிரிழப்பையும் தடுக்க முடியும். இந்த கர்ப்பப் பை வாய் புற்றுநோய்க்கு pap smear என்ற ஒரு சாதாரண test இருக்கின்றது. அந்த test செய்தாலே, முதல் நிலையிலேயே அதைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால், இன்றைக்குப் பெண்களுக்குப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு இல்லாததாலும், ஆரம்ப நிலையிலே மருத்துவமனைக்கு வராமல் இருப்பதாலும், கடைசி நேரத்தில் வருவதாலும், அவர்களைக் காப்பாற்ற முடிவதில்லை. அதுமட்டுமல்லாமல், அந்தப் புற்றுநோய் பாதிப்பால் ஏற்படுகின்ற விளைவுகளால், எந்தக் குடும்பத்தை அவர்கள் காப்பாற்றினார்களோ, அந்தக் குடும்பமே அவர்களைப் புறக்கணிக்கிறது. இதுவொரு சமுதாயப் பிரச்சினை. இதையெல்லாம் மனதிலே வைத்துத்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் 'பெண்கள் நலத் திட்டம்' என்ற மகத்தான திட்டத்தை அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்னும் வாக்கிற்கு, இவ்வளவு நாட்கள் பொருள் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களால், இப்போது பெண்கள் தங்கள் பிறப்பின் பயனையே உணருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தை பிறப்பதற்கு முன்பிருந்து, அந்தக் குழந்தை பிறந்து, வளர்ந்து, கல்வி கற்க, திருமணம் செய்ய, குடும்பத்தை வளர்க்க, முதுமையைத் தொடும் காலம் வரை பெண்மை வாழ, மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்துள்ள திட்டங்கள் ஒன்றா, இரண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் கண்டு அகில உலகமே ஆனந்தம் கொள்கின்றது.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகப் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளுக்கு தற்போது மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் அனைவரும் சமம் என்ற அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கவும், ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இம்மாமன்றத்தில் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் தற்போதுள்ள ஆரம்ப சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லாததால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, இந்தியாவிலேயே முதன்முறையாக நகர்ப்புறங்களில் ஆரம்ப சுகதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போன்றே 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மூன்று செவிலியர்கள் நியமிக்கப்படுவர். இந்த ஆண்டு, தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 60 நகர்ப்புற ஆரம்ப சுகதார நிலையங்கள், பொது சுகாதாரத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு செயல்படுத்தப்படும். மேலும், 75 மையங்கள் சிறிய நகரங்களில் புதிதாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் பாம்புக் கடி, தேள் கடி மற்றும் விஷம் அருந்தியவர்களுக்கான முதலுதவி மையங்கள் தற்போது இல்லை. கிராமப்புற மக்கள் நகரத்தையே நாடிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. பாதிக்கப்பட்டோரின் உற்றார், உறவினர்கள் பரிதவிக்கும் நேரத்தில் உடனடி மருத்துவ சிகிச்சையின் அவசியத்தைக் கருதி, நடப்பாண்டில் ஒரு சுகாதார மாவட்டத்திற்கு ஒரு மையம் வீதம் 42 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகதார நிலையங்களில் முதலுதவி மருத்துவமனைகள் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்புக் கடி, தேள் கடி மற்றும் விஷம் அருந்தியவர்களுக்கு உடனடியாக வைத்தியம் செய்தால்தான் காப்பாற்ற முடியும். விபத்து ஏற்பட்டவர்களைப் பிழைக்க வைக்க Golden hour concept என்று சொல்கிறோம், ஒரு மணி நேரத்திற்குள்ளே சிகிச்சை அளித்தால்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும். அதேபோலத்தான் பாம்புக் கடிக்கும் மற்றும் விஷம் அருந்தியவர்களுக்கும் உடனடியாக சிகிச்சை அளித்தால்தான் காப்பாற்ற முடியும். இதில் time factor மிகவும் முக்கியமானதாகும்.

பாம்புக் கடியிலே இரண்டு விதமான விஷத் தன்மைகள் இருக்கின்றன. ஒன்று நம்முடைய உடம்பிலுள்ள இரத்தத்தையெல்லாம் உறைய வைத்துவிடும். மற்றொன்று நரம்பு மண்டலத்தையே பாதிக்கும். ஆகவே, பாம்புக் கடி எந்த வகையைச் சார்ந்தது என்பதை அறிந்து, உடனடியாக சிகிச்சை அளித்தால்தான் நோயாளியைக் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் Poison Centre என்ற திட்டத்தை ஆரம்ப சுகதார நிலையத்திலே ஆரம்பித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள தொலைதூரப் பகுதிகளில் வாழும் ஏழை, எளிய கிராம மக்களுக்குத் தற்போதுள்ள 385 நடமாடும் மருத்துவக் குழுக்களை மேம்படுத்தி, ஆய்வக வசதிகளுடன்கூடிய 385 நடமாடும் மருத்துவமனை என்ற புதிய திட்டத்தை உருவாக்க மாண்புமிகு அம்மாவின் நல்லரசு இசைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவர்களைத் தேடி மக்கள் வருகின்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி மருத்துவர்களே சென்று சேவை அளிக்கும் உன்னதத் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடந்த கால ஆட்சியில், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் 108 இலவச ஆம்புலன்ஸ் சேவையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்தபோது, ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்கு, மேல் சிகிச்சைக்காக வாகனங்களைப் பயன்படுத்த அனுமதிப்பது இல்லையெனக் கண்டறியப்பட்டது. இன்றைக்குக்கூட ஒரு பத்திரிகையில் நான் செய்தியைப் பார்த்தேன்.

தருமபுரி மாவட்டத்திலே, அரூரிலே ஒரு விபத்து நடந்தபோது, குழந்தைகளை அவர்கள் அரூர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதன்பிறகு, தருமபுரிக்குக் கொண்டு செல்ல 108 ஆம்புலன்ஸ் வழிவகுக்கவில்லை என்று அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் இனிமேல் மருத்துவமனைகளுக்கு இடையிலான அவசர காலப் போக்குவரத்து வசதிகளை அனுமதிக்க கூடுதல் வாகனங்களை வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Inter facility Transfer என்று அதைச் சொல்கின்றோம்.

அடுத்து, பச்சிளம் குழந்தைகளை உயர் சிகிச்சைக்குக் கொண்டு செல்லும் வகையில், அதிநவீன வசதிகளுடன் மாவட்டத்திற்கு ஒரு வாகனம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மலைப் பகுதிகளில் பயன்படுத்தும் வகையில், ஓடுதிறன் கொண்ட சிறப்பு ஊர்திகள் வாங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைப்பது குறித்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்கமாக அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மருத்துவத் துறை வரலாற்றிலேயே ஒரு மைல் கல்லாக விளங்கப்போகும் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வாங்க வேண்டியதையெல்லாம் வாங்கிக்கொண்டு,



வாங்கக்கூடாத மருத்துவக் கருவிகளையெல்லாம் வாங்கினார்கள். ஆனால் அந்தக் கருவிகளைப் பராமரிக்கத் தவறி விட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி நான் சில மருத்துவமனைகளை ஆய்வு செய்ய சென்றிருந்தேன். ஒரு பெரிய மருத்துவமனையிலே 30 E.C.G. Machines இருக்கின்றன. ஆனால், அவற்றில் 3 தான் வேலை செய்கின்றன. ஒரு மருத்துவமனையிலே 50 B.P. Apparatus இருக்கின்றன. 6 தான் வேலை செய்கின்றன. அது மட்டுமல்ல, உயிர் காக்கும் Ventilator, Multi-para Monitor எல்லாமே பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, மருத்துவ உபகரணங்கள் பழுதின்றி சரியான முறையில் செயல்பட்டால்தான் மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவ சேவைகளை வழங்க இயலும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அவற்றின் முக்கியத்துவத்தைக் கருதி, மருத்துவக் கருவிகளைப் பராமரிக்க, மாவட்டந்தோறும் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் Bio–medical Engineering என்ற ஒரு குழு அங்கே இருக்கும். அந்த மாவட்டத்திலே எந்தெந்த மருத்துவமனையிலே அந்த உபகரணங்கள் பழுதடைந்துள்ளதோ, 24 மணி நேரத்திலே அந்தப் பழுதை சரி செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அது பெரிய மிஷினாக இருந்தால், 48 மணி நேரத்திலே சரி செய்ய வேண்டும். அப்படி செய்ய முடியவில்லை என்றால், சென்னையிலே இருக்கின்ற Apex Center–க்கு அதை அனுப்பி வைத்து, ஒரு வாரத்திற்குள் சரி செய்ய வேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, இனி வருங்காலத்திலே நம்முடைய அரசு மருத்துவமனைகளிலே பழுதடைந்த மருத்துவக் கருவிகள் இல்லை என்ற ஒரு நிலை ஏற்படும் என்பதை நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் எல்லோருக்குமே தெரியும். மருத்துவமனைகளிலே ஒரு நாளைக்கு எத்தனை பேர் வருகிறார்கள்? உள் நோயாளிகள் இருக்கின்றார்கள், வெளி நோயாளிகள் இருக்கின்றார்கள். அவர்கள் கூடவே வருகின்றவர்கள் இருக்கின்றார்கள். ஆக, ஒரு சிறிய

மருத்துவமனையை எடுத்துக்கொண்டால்கூட, 1,500 பேர் வருகிறார்கள். பெரிய மருத்துவமனையிலே 5 ஆயிரம் பேர் வருகிறார்கள். ஆக, நாள்தோறும் பொது மக்களும், நோயாளிகளும் அரசு மருத்துவமனைகளை அதிக அளவிலே நாடி வருகின்றார்கள். அனைத்து மருத்துவமனைக் கட்டடங்களையும், கழிவறைகளையும் தூய்மையாகவும், சுகாதாரமான முறையிலும் பராமரிப்பது மிகவும் அவசியம். இதை நன்குணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறையிலுள்ள மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்க, மருத்துவத் துறைக்கென பொதுப் பணித் துறையில் தனிப் பிரிவு ஒன்றைத் துவக்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவத் துறையில் இன்று நிருவாகச் சீரமைப்பிற்காக மூன்று அறிவிப்புகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

மருத்துவப் பணியில் தேர்வாணையம் (Medical Services Recruitment Board) இந்தியாவில் எங்கேயுமே இல்லை. மாவட்டந்தோறும் மருத்துவக் கருவிகள் பராமரிப்புப் பிரிவுகள் (Medical Equipment Management System) இதுவும் இந்தியாவில் Defence Hospital ஒன்றில்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவதாக, சுகாதாரக் கட்டடங்களைப் பராமரிக்க தனிப் பிரிவு, கேரளாவிலும், அரியானாவிலும் மட்டும்தான் இருக்கிறது. இந்த மூன்றும் இருக்கின்ற மாநிலம் தமிழகம் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அம்மா அவர்களின் ஆசியுடன் இம்மாமன்றத்தில் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

மருத்துவ நிருவாகம் என்பதுதான் மருத்துவத் துறையின் மிகப் பெரிய சவால். நிருவாக சிக்கல் துறைக்கு நோயை உண்டாக்கி விடும். சவாலுக்கெல்லாம் சவால் விடுத்து, நோய்களின் நோய் தீர்க்க நல்ல பல திட்டங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் மருத்துவத் துறையின் பிணிகளைத் தீர்க்கவும், திருவுள்ளம் கொண்டுள்ளார்கள். இதன் விளைவாகவே இத்தகைய நிருவாகச் சீரமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். இதனால் மக்கள் நல்வாழ்வுத் துறையில் தமிழகம் முழுமை பெற்று முன்னணி மாநிலமாகத் திகழும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில்





உருவான இத்தகைய நிருவாகச் சீரமைப்பு நடவடிக்கைகள் (Administrative Reforms) இந்தியாவிற்கே முன்னோடியாக உள்ள தமிழகத்தில்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

“அரிது அரிது மானிடராதல் அரிது;
மானிடராயினும் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப்
பிறத்தல் அரிது”

என்ற ஔவைப் பிராட்டியாரின் கூற்று நாம் அனைவரும் அறிந்ததே. மானிடப் பிறவியில் 10 மாதம் சுமந்து பெற்ற குழந்தை குறையுடன் பிறக்கும்பொழுது, பெற்ற தாய்க்கு ஏற்படக்கூடிய சொல்லொணா மனத் துயரம் யாவரும் அறிந்தது. Consanguinous marriage என்று சொல்லப்படுகின்ற உறவு சார்ந்த முறையில் திருமணம் செய்வதாலும், பிரசவக் காலங்களில் தேவையில்லாத மருந்துகள் சாப்பிடுவதாலும், தேவையில்லாத X–ray போன்ற கதிர் வீச்சாலும் குழந்தைகள் பிறவிக் குறைபாடுடன் பிறக்கிறார்கள். முக்கியமாக அந்த Cleft lip என்று சொல்லப்படுகின்ற பிளவு உதடு, Cleft Palate என்று சொல்லப்படுகின்ற அன்னப் பிளவு போன்ற குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறக்கிறார்கள். இதனால், அவர்கள் சரியாகப் பேச முடியாது, சாப்பிடுவது கடினம், பெண் குழந்தை என்றால் திருமணம் செய்துகொள்வது சிரமம். ஆனால், அந்தக் குறைபாடுகளை சிறிய வயதிலேயே சிறிய அறுவை சிகிச்சைகள்மூலம் சரிப்படுத்திட முடியும். மனத்துயர் போக்கும் வண்ணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேய நோக்கில் 2004 ஆம் ஆண்டிலேயே பிறவிக் குறைபாடுகளைக் களையும் திட்டத்தை அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதிருந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 6,066 குழந்தைகளுக்கு cleft lip என்று சொல்லப்படுகின்ற பிளவு உதடு, cleft palate என்று சொல்லப்படுகின்ற அன்னப்பிளவு போன்ற குறைபாடுகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் சென்ற மைனாரிட்டி அரசால் கைவிடப்பட்டது. தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து விதமான பிறவிக் குறைபாடுகளையும் எளிய அறுவை சிகிச்சைமூலம் சரி செய்யும் வகையில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.”

என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருதய பரிசோதனை செய்யும் Echo Cardiogram, மார்பகப் புற்றுநோய் கண்டறிய Mammogram, தீவிர சிகிச்சைக்குத் தேவைப்படும் Multi-para Monitors–செயற்கை சுவாசக் கருவிகள் Ventilators விஷ மூலிகைச் சிகிச்சைக்கான உயிர் காக்கும் உபகரணங்கள், Digital X–ray கருவிகள், முக்கியமாக சிறுநீரக நோயாளிகளின் உயிர் காக்கும் கருவிகளான Dialysis கருவிகள் Operating Laparascopic கருவிகள் ஆகியவை மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு உடனடியாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மக்களிடையே ஏற்பட்டிருக்கும் life style modification–னால் சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், சாதாரணமாக அதிக அளவில் இருக்கின்றது. இந்த இரண்டு வியாதிகளில் இருப்பவர்களில் 10% பேர்கள் சிறுநீரக வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். சிறுநீரகப் பாதிப்பிற்கு உடனடியாக Dialysis செய்தால் சிறுநீரகம் பழையபடி வேலை செய்யும். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை Renal Transplant வெகுவாகக் குறைக்கப்படும். Dialysis முறை தனியார் மருத்துவமனையிலே ரூ.800/–லிருந்து ரூ.1,000/– வரை ஒரு நாளைக்கு வசூல் செய்கிறார்கள். இதை மனதில் வைத்துக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்டந்தோறும் Dialysis கருவி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், Keyhole Surgery என்று சொல்லப்படுகின்ற ஒரு சிறிய தூவரத்தின்மூலம் தழும்பு இல்லாமல் செய்யப்படுகின்ற operations தனியார் மருத்துவமனையில்தான் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், இதை மனதில் வைத்துக்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு operative Laparoscopy என்ற கருவியை 27 மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதி நவீன ஆய்வக வசதிகளுடன் அனைத்து மாவட்டத் தலைமை



மருத்துவமனைகள் கணினி வசதியுடன் ஏற்படுத்தப்படும். ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் 30 இலட்சம் வீதம் நவீன உபகரணங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் கைவிடப்பட்ட விழுப்புரம் நகரத்தின் மையத்திலுள்ள அரசு மருத்துவமனை 100 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன் மீண்டும் செயல்பட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின்மூலமாக தரமான மருந்துகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தட்டுப்பாடின்றி அனைத்து மருந்துகளும் கிடைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்க் கடிக்கு மட்டும், இந்த Injection ARE–க்கு மட்டும் ஐந்து கோடி ரூபாய்க்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே மருந்துகளும், மாத்திரைகளும், குடிசைத் தொழில்போல் செய்யப்பட்டதை நாம் அறிவோம். அதனால் spurious drug என்று சொல்லப்படுகின்ற தரமில்லாத, காலாவதியான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. இதனால் பல உயிர் இழப்புகள் ஏற்பட்டன. இதையெல்லாம் நன்கு உணர்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உணவுப் பாதுகாப்பு, மருந்து கட்டுப்பாட்டிற்கென தனித் துறை அமைக்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், கலப்படம் செய்யும் சமூக விரோதிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்கிட முடியும். உணவுக் கலப்படம் மற்றும் மருந்து கலப்படம் முற்றிலுமாகத் தடுத்து ஒழித்திட முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அவை சார்ந்த 46 மருத்துவ நிலையங்கள், 30 மாவட்டத் தலைமை

மருத்துவமனைகள், 231 வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,506 துணை சுகாதார நிலையங்கள்மூலம் அனைத்து மக்களுக்கும் மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர, மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், காசநோய் கட்டுப்பாடுத் திட்டம், தடுப்பூசித் திட்டம், எச்.ஐ.வி., எய்ட்ஸ் விழிப்புணர்வுத் திட்டம் போன்ற பல்வேறு சிறப்பு நல்வாழ்வுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–45

தரமான சிகிச்சையும், அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் பலனும் மக்களுக்கு முறையாகச் சேர வேண்டுமானால் மருத்துவர்களின் தன்னலமற்ற கடுமையான உழைப்பும், மாவட்ட ஆட்சித் தலைவரின் முனைப்பும் மிக, மிக அவசியம். இதற்காக விருது வழங்கப்படும் என்று கடந்த ஆட்சியிலே வெற்று அறிவிப்பு வெளியிட்டார்கள். "சொல்வதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்" என்றெல்லாம் கூறினார்கள். ஆனால், சொன்னதோடு சரி, எதையுமே செயல்படுத்தவில்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாகச் செயல்படும் மருத்துவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பதக்கம் வழங்கி கௌரவப்படுத்தும் வகையில் ஒரு செயல்திட்டம் உருவாக்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற டாக்டர் சங்கங்கள்; தமிழ்நாடு அரசு டாக்டர் சங்கம், இந்திய மருத்துவச் சங்கம், தமிழ்நாடு டாக்டர் கழகம் என்று மொத்தம் 70 ஆயிரம் டாக்டர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நம்பிக்கையோடும், உண்மையோடும் இருக்கிறார்கள். அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையான டாக்டர் விருதினை அறிவித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் சமுதாயத்தின் சார்பாக நானும் ஒரு டாக்டர் என்ற முறையிலும், தமிழ்நாடு அரசு டாக்டர் சங்கத்தின் முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர் என்ற முறையிலும் என் சிரம் தாழ்த்தி, கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரைக் கோடி தமிழ் மக்களின் உள்ளங்களில் வசித்துவரும் அம்மாவின் ஆட்சியில், ஆயிரம் நிலாக்கள் ஒன்றாகச் சேர்ந்த பிரகாசத்தைக் கொண்ட எங்கள் அம்மாவின் ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பவர் உள்ளத்திற்கு உற்சாகத்தை அளிக்கும் எங்கள் தர்ம தேவதையின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தடுத்து அறிவித்திருக்கும் அற்புதத் திட்டங்கள் பலவும் தமிழகத்தைத் தலை நிமிர்த்தி இருப்பதோடு அனைவரையும் வியப்படையச் செய்துள்ளன.

இந்தச் சரித்திரப் புகழ்மிக்க மாமன்றத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலுரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை மீண்டும் வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையில் உருவான சிறப்புமிகு அறிவிப்புகளை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் ரூ.6,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தி வழங்குதல்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தைச் சீரமைத்து, ஏழை கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் ஆணைப்படி, 6,000/– ரூபாயாக இருந்த பேறுகால நிதியுதவி இருமடங்காக உயர்த்தப்பட்டு 12,000/– ரூபாயாக வழங்கிட, 596 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**கிராமப்புற வளரிளம் பெண்கள் அனைவருக்கும் இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்குதல்**

வளரிளம் பெண்களின் நல்வாழ்வு கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி,

கிராமப்புறங்களில் வாழும் வளரிளம் பெண்களுக்கு இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் புது திட்டம் இந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் 46 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**நடமாடும் மருத்துவமனைகள்**

தற்போது செயல்படும் 385 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் மருத்துவமனைபோல் உட்புறங்கள் வடிவமைக்கப்பட்டு, தேவையான நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் ஆய்வக நுட்புனருடன், அனைத்து வசதிகளுடன்கூடிய நடமாடும் மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகத்திற்குத் தனியாக ஓர் ஆணையரகம் உருவாக்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தரமான மருந்து மற்றும் சுகாதாரமான உணவு அனைவருக்கும் கிடைக்கும் வகையில், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு ஆணையரகம் 50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆம்புலன்ஸ் சேவை (108)**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 108 இலவச ஆம்புலன்ஸ் சேவை 3.60 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். இதன்படி, ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்கு அவசர கால நோயாளிகளை அழைத்துச் செல்லவும் (Inter–facility Transfer), மலைப் பகுதிகளில் பயன்படுத்தும் வகையில் ஓடுதிறன் கொண்ட சிறப்பு ஊர்திகள் வாங்கவும், பச்சிளம் குழந்தைகளை உயர் சிகிச்சைக்குக் கொண்டு செல்லும் வகையில் அதிநவீன வசதிகளுடன் மாவட்டத்திற்கு ஒரு வாகனமும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11–50

**மாவட்டந்தோறும் மருத்துவக் கருவிகள் பராமரிப்பு அமைப்பு** (Equipment Management System)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மருத்துவக் கருவிகளைப் பராமரிக்க மாவட்டந்தோறும் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சுகாதாரத் துறை கட்டடங்களைப் பராமரிக்க பொதுப் பணித் துறையில் தனிப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்க மருத்துவத் துறைக்கென பொதுப் பணித் துறையில் தனிப் பிரிவு துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவுகள்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 60 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள் 2.20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டட வசதிகள்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 543 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவைகளுக்கேற்ப கூடுதலாக உள்நோயாளிகள் பகுதி, செவிலியர் குடியிருப்புகள், நோயாளிகள் காத்திருப்புக் கூடங்கள் மற்றும் தடுப்பூசிக் கூடங்கள் நடப்பாண்டில் 37.91 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

ஆரம்ப சுகாதார வசதிகள் இல்லாத சிறிய நகரங்களில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் 75 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

ஆணைப்படி, 14.27 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம்**

இல்லந்தோறும் பிறவிக் குறைபாடு உள்ளவர்களைச் சுகாதாரப் பணியாளர்கள்மூலம் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பாம்புக் கடி, தேள் கடி மற்றும் நச்சுமுறிவு முதலுதவி மருத்துவ மையங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் 42 சுகாதார மாவட்டங்களில் 43 இலட்சம் ரூபாய் செலவில் கிராமப்புற மக்கள் பயனுறும் வகையில், பாம்புக் கடி, தேள் கடி மற்றும் நச்சுமுறிவு போன்ற சிகிச்சைக்கு 42 முதலுதவி மருத்துவ மையங்கள் மேம்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப்படும். மேலும், படிப்படியாக, அனைத்து மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் முதலுதவி மையங்கள் ஏற்படுத்தப்படும். நடப்பாண்டில், நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்துகள் தங்குதடையின்றி கிடைத்திட 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்**

கிராமப்புற சுகாதார செவிலியர்கள் பற்றாக்குறையைப் போக்கிட மூன்று துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தேனி, நாமக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் நடப்பாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 15 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பொது சுகாதாரத் துறை நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடம்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னையில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்



தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தின்கீழ் நுண்ணுயிரியல் மற்றும் உயிர்வேதியியல் ஆய்வகம் 1.20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாவட்ட பொது சுகாதார ஆய்வுக் கூடங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஈரோடு, திருவண்ணாமலை, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் கொள்ளை நோய்களைக் கண்டறிய 2.08 கோடி ரூபாய் செலவில் மாவட்ட பொது சுகாதார ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அரியலூர் மாவட்டத்திற்குப் புதிய மாவட்டத் தலைமை மருத்துவமனை**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அரியலூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**எம்.ஆர்.ஐ. மற்றும் சி.டி. ஸ்கேன் வசதிகள் ஏற்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாய் செலவில், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கப்படும். மேலும், பொள்ளாச்சி, கோவில்பட்டி, கள்ளக்குறிச்சி மற்றும் வாலாஜா ஆகிய நான்கு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உள்ள அவசர மற்றும் தலைக்காய சிகிச்சைப் பிரிவுகளுக்கு சி.டி. ஸ்கேன் 7 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை மற்றும் பரிசோதனை வசதிகள் மேம்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை மற்றும் பரிசோதனை வசதிகளை மேம்படுத்த, 79.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மருத்துவப் படிப்பு இடங்கள் அதிகரித்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் தடுப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழகத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் (ART Centres) எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு மையங்கள், சிகிச்சை மையங்கள் போன்றவை 1.51 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

**பாரம்பரிய இந்திய மருத்துவ முறை வைத்தியர்களுக்கான ஓய்வூதியத் தொகையினை ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்குதல்**

பதிவு செய்துள்ள 9,563 பாரம்பரிய இந்திய மருத்துவமுறை வைத்தியர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.500/– ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த உதவித் தொகை 500/– ரூபாயிலிருந்து 1,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தின்போது தெரிவித்த கருத்துகளுக்கு, நான் தெரிவித்துள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறும், இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்களின் ஆக்கபூர்வமான கருத்துகளும், ஆலோசனைகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்று கூறி, மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர்



இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், உட்காருங்கள். இன்றைக்கு மூன்று மானியக் கோரிக்கைகளை முன்மொழிய வேண்டியுள்ளது. மாண்புமிகு அமைச்சர்கள் மூவர் பதிலுரை வழங்க இருக்கிறார்கள். அதன் பிறகு சட்டமுன்வடிவின் மீதான ஆய்வு இருக்கிறது. Now the time is 11.56. நீங்களே யோசனை செய்யுங்கள். இன்றைக்குத் தங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. Please, sit down. (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் பேசிவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை செவிலியர் பயிற்சிப் பள்ளி 5 கோடி ரூபாய் செலவிலே பின்தங்கி இருக்கிற சிவகங்கை மாவட்டத்திற்குக் கேட்காமலேயே அறிவித்த நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துறைகளில் இருக்கக்கூடிய வளர்ச்சியைப் புரிந்துகொண்டிருக்கிற காரணத்தால், மக்களின் தேவை அறிந்து புதிய, புதிய திட்டங்களை மருத்துவத் துறையிலே அறிவித்திருக்கிறார்கள். நேரமில்லாத காரணத்தால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை; அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைக்கென்று ஒரு நெடி இருக்கும். அந்த நெடி எதுவுமே இல்லாமல், நல்ல இலக்கிய வாசனையோடு மிக அருமையாக, தொலைநோக்குப் பார்வையோடு பல திட்டங்களை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், மிகச் சிறப்பாக அமைச்சர் அவர்கள் பதிலுரையை முன்வைத்திருக்கிறார்கள்.

'மருத்துவப் படிப்பு இடங்கள் அதிகரித்தல்' என்ற அறிவிப்பும்கூட இடம்பெற்றிருக்கிறது. இந்த மருத்துவப் படிப்பு தேர்வு நடைபெறக்கூடிய காலங்களில், பல குளறுபடிகள்

நடந்துக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், மாணவிகள் சேர்க்கையின்பொழுது சில சான்றிதழ்கள் விடுபடுகின்றன. இப்படி விடுபட்டதற்கு பிற்பாடு கவுன்சலிங்க்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. நீதிமன்றம்வரை சென்று அதற்கான உத்தரவைப் பெற்று, அதற்கு பிற்பாடும்கூட அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. இதனால் பல தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை மருத்துவக் கல்வியில் இன்றைக்குக் கெட்டுக்கொண்டிருக்கிறது. இதனைக் கடந்த காலங்களில் நாங்கள் பார்த்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** இதுகுறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆணைப்படி உரிய விசாரணை என்பது செய்யப்படவேண்டும். நேரடியாக நான் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவியைப் பார்த்திருக்கிறேன். அவருடைய தந்தை பந்தல் போடக்கூடிய தொழிலாளி. அந்த மாணவியை ஊரெல்லாம் சேர்ந்து படிக்க வைப்பதற்கு விண்ணப்பித்தார்கள். அந்த மாணவி உச்ச நீதிமன்றம் சென்றும்கூட, அந்த வழக்கு நிலுவையில் இருந்தாலும், படிப்பதற்கு அனுமதியுங்கள் என்று நீதிமன்றம் வழிகாட்டியும்கூட, அவருக்கு கவுன்சலிங்கில் இடம்கூடக் கிடைத்துவிட்டது. ஆனால், அவருக்கு Allotment order என்பது கிடைக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு அதைப் பரிசீலித்து அவருடைய கல்வி தொடருவதற்கு வாய்ப்பளிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு அந்தப் பெண் உச்ச நீதிமன்றம் சென்றிருக்கிறார் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவரைவிட அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களெல்லாம் இருக்கின்றார்கள். அது ஒரு காரணம். இதிலே என்ன பிரச்சினை என்றால், அவர்கள் application அனுப்பும்போது எந்தவிதமான சான்றிதழ்களையும் அனுப்பவில்லை. அதைப்போல் 160 பேர் இருக்கின்றார்கள். இந்த ஒரு பெண்ணுக்கு நாம் செய்தோம் என்றால், இவருக்கு



முன்னால் இருக்கின்ற பிற மாணவர்களுக்கும் செய்யவேண்டிய ஒரு நிலைமை இருக்கின்றது. அந்த அளவுக்கு சீட் இங்கு கிடையாது. ஆகவேதான், இந்த ஒரு பெண்ணுக்கு செய்யமுடியவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒவ்வொரு வருடமும் வருகின்ற பிரச்சினை ஆகும். இதை எப்படி solve செய்யமுடியும் என்பது எங்களுக்கே தெரியவில்லை. ஏனென்றால், அவர்கள் application அனுப்பும்போது எல்லாவிதமான சான்றிதழ்களையும் அனுப்பி வைத்தால் எந்தவித பிரச்சினையும் கிடையாது. ஆனால், எந்தவித சான்றிதழ்களையும் அனுப்பாமல் அவர்கள் வந்து விடுகின்றார்கள். ஆகவே, அந்த கவுன்சலிங்கிலே அவர்களைச் சேர்க்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே, இதற்கு, அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்றிருக்கின்றார்கள். உச்ச நீதிமன்றத்திலிருந்து என்ன தீர்ப்பு வருகின்றதோ, அதன்படி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கருணாநிதி ஆட்சியிலே, விழுப்புரம் நகரத்திலே இயங்கி வந்த அந்த மருத்துவமனையை—பொதுவாக ஒரு மருத்துவமனை அங்கிருக்கின்ற மக்களுக்குப் பயன்படுத்துவதற்காக அமைக்கப்படவேண்டும். ஆனால், அப்போது அங்கு அமைச்சராக இருந்த பொன்முடி ஆக்கிரமித்த அந்த நிலத்தின் மதிப்பு ஏறவேண்டுமென்பதற்காக, தன்னுடைய கல்லூரிக்கு அருகிலே 9 கிலோ மீட்டர் தள்ளி, அந்தப் புதிய மருத்துவமனையை அமைத்தார்கள். அப்போது அம்மா அவர்கள் ஆணைப்படி அங்கு ஆர்ப்பாட்டம் செய்து, மீண்டும் நான் ஆட்சிக்கு வருவேன், வந்தவுடனே விழுப்புரத்திலே அந்த மருத்துவமனையை அமைப்பேன் என்று சொல்லியது மட்டுமல்ல, தேர்தல் நேரத்திலே கண்டிப்பாக நான் முதலமைச்சராக வருவேன், வந்தவுடனே விழுப்புரம் நகரத்திற்கு, அந்த விழுப்புரம் நகர மக்கள் மட்டுமல்ல, அதை நம்பியிருக்கின்ற காணை ஒன்றியம், கோலியனூர் ஒன்றியம், கண்டமங்கலம் ஒன்றியம், முகையூர் ஒன்றியம், திருநாவலூர், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே

அந்த மக்களுக்கு உடனடியாக மருத்துவமனை அமைக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்து, இந்த 100 நாட்களுக்குள்ளாகவே அந்த மருத்துவமனையைக் கேட்காமலேயே அறிவித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பாதம் பணிந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. 12–9–2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.





**(ஆ) கோரிக்கை எண் 18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)**

**(இ) கோரிக்கை எண் 17 – கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)**

**(ஈ) கோரிக்கைஎண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

---

## (ஆ) கோரிக்கை எண் 18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை), மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்றால் அன்பு, ஆசான் என்றால் அறிவு, இவை இரண்டும் ஒருசேர பெற்றிருக்கும் எங்கள் குல தெய்வமே, துன்பம் வந்தபோது துன்பத்திற்கே துன்பம் கொடுத்து வெற்றிகண்ட வெற்றி தேவதையே (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணாசையால் அன்று வீழ்ந்தவர்கள் கவுரவர்கள். இது சரித்திரம். இன்று மண்ணாசை கொண்டவர்களைத் தேர்தலில் மண்ணாக்கி, சரித்திரம் படைத்த மகத்துவத் தாய் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சந்தியா தாய் ஈன்றெடுத்த இந்தியத் தாயே, தர்மத் தாய் தத்தெடுத்த புரட்சித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் வரவு–செலவுக் கணக்கை மக்களின்

நலன் ஒன்றையே கருத்தில்கொண்டு, அனைவரும் புகழும் வண்ணம் தயாரித்த நிதி ஆசானே, தங்களின் பொற்பாதங்களை தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.131,44,57,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 43, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,44,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1441, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,44,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1172, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2174, திரு. ப. டில்லி பாபு. திரு. டில்லி பாபு இருக்கையில் அமருங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,44,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2460, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1612, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் விற்பனை மையத்தை அனைத்துப் பேரூராட்சி மையங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,44,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1813, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கிராமத் தொழில்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து, கிராமத் தொழிலை வளப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18

ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,44,57,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 17 – கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை), மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,07,34,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 42, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 492, திரு. ஆர். சுந்தர்ராஜன்.





**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/ — மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1431, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1171, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2099, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2461, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 365, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பஞ்சாலைகளில் சுமங்கலி திட்டம் போன்ற முறைகளைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1026, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மூடியுள்ள கூட்டுறவு நூற்பாலைகளை மீண்டும் திறந்து அரசே ஏற்று நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1708, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் வடக்கு தொகுதியில் கைத்தறித் தொழிலை அதிகம் நம்பியுள்ள தொழிலாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் மத்திய, மாநில அரசின் மானியத்



திட்டத்தின் மூலமாக உதவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1787, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி மற்றும் விசைத்தறியைப் பாதுகாக்க மத்திய அரசு கடைப்பிடித்துவரும் ஆன்லைன் வர்த்தகத்தைத் தடை செய்ய மாநில அரசு தீர்மானம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1899, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி, அண்ணா கைத்தறி நெசவாளர்கள் சங்கம் பெரும் பாதிப்பிற்குள்ளாகி நலிவுற்ற நிலையில் உள்ளது குறித்தும், தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, இலாளிகம், அன்னசாகரம், குமாரசாமிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள நெசவாளர்களைப் பாதுகாப்பது குறித்தும், தமிழகம் முழுவதும் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

குறித்தும் விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2239, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணியில் பட்டு வர்த்தக மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.547,44,58,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,00,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,34,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12—05

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பில், அறிவில், ஆற்றலில், ஆன்மிகத்தில், தியாகத்தில், செயலில், பண்பில், பரிவில், பாசத்தில், கனிவில், துணிவில், கண்துஞ்சா உழைப்பில், சிந்தனையில், பேச்சில், எழுத்தில், ஈடற்ற ஈகைக் குணத்தில் என அத்தனை குணங்களும் இணைந்தே பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் சிறக்க,



தமிழ் மக்கள் வாழ்வு மலர ஓயாமல் உழைக்கின்ற உத்தமத் தாயாக விளங்குகின்ற அமைதி பூமியின் சத்தியத் தாயே, சிந்தனை சிகரமே, சிங்க நிகர் தலைவியே, செந்தமிழ் பெருமையே, எங்கள் அன்னையே, தாங்கள் எடுத்துவைக்கின்ற ஒவ்வொரு அடியும் தமிழகத்தின் முன்னேற்றப்படி என்று நித்தம் கண்துஞ்சாது உழைக்கின்ற எங்கள் உயிர் மூச்சே, உங்கள் பொற்பாதங்களை தொட்டு, வணங்கி, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்கிறேன், அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/—ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 44, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1472, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/— மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1173, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2138, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2458, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 413, திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 989, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள அந்நிய கம்பெனிகளில் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1564, திரு. அ. சவுந்தரராசன்.





**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எந்த வகை தொழிலாளர்களாயிருந்தாலும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.10,000/— என்று நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1642, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1705, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் வடக்கு தொகுதியில் லீ பஜார், செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட், சேலம் பஜார், சின்னக்கடை வீதி பகுதிகளில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் மாட்டு வண்டி ஓட்டும் தொழிலாளர்களுக்கும் தனி நல வாரியம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/— மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1766, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூரில் மூடப்பட்டுள்ள மேட்டூர் ஸ்பின்னிங் மில் தொழிலாளர்களின் துயரங்களைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1782, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளம் பெண்கள், இளைஞர்களின் வேலைவாய்ப்பு நலன் கருதி, அரசுத் துறையில் உள்ள அனைத்துக் காலிப் பணியிடங்களையும் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1881, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிற்சாலை ஆய்வகத் துறையை தொழிலாளர்



துறையோடு இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2066, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துத் துறை நிறுவனங்களிலும் ஏற்படும் வேலைவாய்ப்புகளைப் படித்த மற்றும் படிக்காத இளைஞர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2215, திரு. க. பாண்டியராஜன்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2592, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Diploma in Mechanical Engineering படித்தவர்களுக்கு 1984—க்குப் பிறகு பதிவு மூப்பு உள்ளோரை வேலைவாய்ப்பு மையம் மூலமாக பணி அமர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.515,35,11,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,41,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

---

@ 169 முதல் 212 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று தங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

---

@@ 213 முதல் 276 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@@ 277 முதல் 345 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

***திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறையினுடைய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பை அளித்த ஏழைகளின் தோழர், எங்களுடைய தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று."

என்று திருவள்ளுவர் சொன்னார். ஆனால், இந்த மாமன்றத்திலே ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏதாவது ஒரு விஷயமாவது நல்லது செய்திருப்பார்களா என்று நான் பார்க்கின்றபோது இங்கே அதற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மூலம் ஒவ்வொரு துறையிலும் செய்யப்பட்டிருக்கின்ற கொடுமைகளும், அதிலே ஏற்பட்டிருக்கின்ற நிருவாகச் சீர்கேடுகள் பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதிலேயிருந்து இன்றைக்கு திருவள்ளுவர் இருந்திருந்தால், நிச்சயமாக நன்றல்லது அன்றே மறப்பது என்பதை மாற்றி எழுதியிருப்பார் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே விவசாயத்திற்கு அடுத்து நெசவுத் தொழிலும் அதனுடைய சார்புத் தொழிலான ஜவுளியும்தான் மிக முக்கியமான தொழிலாகும். கடந்த கால தி.மு.க. ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டாலும், மத்திய அரசின் தவறான ஜவுளிக் கொள்கையினாலும், இத்தொழில் கடும் நெருக்கடியைச் சந்தித்து வந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினுடைய கிளைகள் 10 ஊர்களிலே சிறப்பாக இயங்கி வந்தன. ஆனால், கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியிலே 5 கிளைகள் மூடப்பட்டன. அதற்குக் காரணம் என்னவென்றால், கைத்தறித் தொழில் என்றால் என்னவென்றே தெரியாத டீக்கடைக்காரர்களையும், கட்டப்பஞ்சாயத்து செய்பவர்களையும் மத்திய அமைச்சர் மு.க. அழகிரியினுடைய சிபாரிசுமூலம் கைத்தறி



வளர்ச்சிக் கழகத்தினுடைய நிருவாக இயக்குநர்களாக நியமித்தார்கள். நெசவுத் தொழில் அதிக அளவிலே நடைபெறுகின்ற என்னுடைய கொங்கு மண்டலத்திலே இருக்கின்ற கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டத்திலேயிருந்து தொழில் தெரிந்த ஒருவரைக்கூட உறுப்பினர்களாக நியமிக்கவில்லை. அதன் காரணமாகத்தான் இன்றைக்குக் கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினுடைய 5 கிளைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், மாவட்டத்திற்கு ஒருவரை நியமிக்க வேண்டும் என்கிற விதி இருந்தாலும்கூட, அந்த விதி காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கிறது.

கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஜவுளித் தொழிலை வளர்ச்சி செய்வதற்கு ஜவுளிப் பூங்கா, விசைத்தறிப் பூங்கா என்றெல்லாம் அமைக்கப்பட்டதாகச் சொல்லி திறப்பு விழாக்கள் கோலாகலமாக நடைபெற்றன. ஆனால், என்னுடைய ஈரோடு மாவட்டத்திற்கு அருகிலே இருக்கின்ற குமாரபாளையத்திலே இருக்கின்ற ஜவுளிப் பூங்காவிலே சிறு விசைத்தறி உரிமையாளர்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக நாடா இல்லாத தறி என்று சொல்லக்கூடிய "Autoloom"–ஐ அமைப்பதற்காக அந்த இடத்திலே அந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அது தறிக் கிடங்குகளாக, மிகப் பெரிய மில் முதலாளிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கின்ற ஒரு நிலை இந்தக் கைத்தறித் துறையிலே ஏற்பட்டிருக்கிறது. அந்த சிறு விசைத்தறி தொழிலாளர்களுடைய நன்மைக்காக அந்தப் பூங்கா கொண்டு வந்த நோக்கமே மாறி, தனிப்பட்ட நபர்களுடைய தறி குடோன்களாகமாறி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம், நெசவாளர்களுக்கு 15 சதவிகிதம் வட்டியிலே 2 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் கடன் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த 5 ஆண்டுகளாக அந்தக் கடனே வழங்கப்படவில்லை. எனவே, அரசு, இந்தக் கடனை 5 இலட்சம் ரூபாயாக வழங்கவேண்டும் என்றும், அதற்கு 15 சதவிகிதம் என்ற வட்டியை 10 சதவிகிதமாக குறைத்துக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இதற்கு ஈடாக அந்தக் கைத்தறி நெசவாளர்களிடத்திலிருந்து, கடன் பெறுவோர்களிடமிருந்து வீட்டுப் பத்திரங்களையும், தங்க நகைகளும் ஈடாக பெற்றுக்கொள்ளப்படுகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு வழங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தற்போது விலைவாசி உயர்வினைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு 30 சதவிகித கூலி உயர்வினை அறிவிக்க வேண்டும் என்றும், கைத்தறித் துணிகளுக்கு அரசு வழங்குகின்ற தள்ளுபடி மானியத் தொகையை உயர்த்திக் கொடுத்து, அதிலிருந்து ஒரு பகுதியை நேரடியாக நெசவாளர்களைச் சென்றடையும் வகையிலே திட்டங்கள் வகுக்கப்பட்டு, தள்ளுபடி மானியங்கள் ஆண்டு முழுவதும் ஒரே சீராக வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பல நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய தள்ளுபடி மானியத் தொகையை ஏராளமாக கடந்த தி.மு.க. ஆட்சி நிலுவையில் விட்டுச் சென்றுள்ளது. இதனால், பல நெசவாளர் சங்கங்கள் மூடப்படும் அபாயத்தை எட்டியுள்ளன. நெசவாளர்களுக்கு இன்சூரன்ஸ்மூலம் வழங்கப்படும் இறப்புக் காப்பீட்டுத் தொகை 60 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாகவும், கோ–ஆப்டெக்ஸ்மூலம் வழங்கப்படும் நெசவாளர் நலத் தொகை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாகவும், கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் அளிக்கும் இலாபத்தை 14.5 சதவிகிதத்திலிந்து 20 சதவிகிதமாகவும் உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதத்தை 12.75–லிருந்து 7 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும். அதேபோல, 4 சதவிகித வட்டி மானியத் தொகையை மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து இன்னும் பல கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படவில்லை. சங்கத்தின் கடன் கணக்கிலும் வரவு வைக்கப்படவில்லை. இதன்மூலமும், கைத்தறி நெசவாளர் சங்கங்கள் நிதி நெருக்கடியிலே சிக்கித் தவிக்கின்றன. அங்கே இருக்கின்ற பணியாளர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலை உள்ளது.

பிற்பகல் 12–15

ஆனால், கடந்த ஐந்தாண்டு தி.மு.க. ஆட்சியிலே 1,368 நெசவாளர் சங்கங்களில் உள்ள தனி அலுவலர்களுக்கு மட்டும் ஓர் ஆண்டுக்கு சம்பளமாக சுமார் ரூ.650 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதாகத்



தெரிகின்றது. இந்தச் சங்கங்களின் நஷ்டத்திற்கு முக்கியமான காரணமே இதுதான் என்று அந்த நெசவாளர் சங்கங்களில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

அதேபோன்று, நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஜமுக்காளம், பெட்ஷீட், துண்டு, சேலை போன்றவைகளெல்லாம் இன்றைக்கு வெளி மார்க்கெட்டிலே போட்டியிட முடியாமல் சங்கங்களிலேயே தேங்கியிருக்கின்றன. அதை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்மூலம் கொள்முதல் செய்வதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர் சங்கங்களின்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டுச் சேலைகளுக்கு உலக அளவிலே வரவேற்பு இருக்கின்றது. ஆனால், கடந்த ஆட்சியிலே போலியான கைத்தறி சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றின்மூலம் தரம் குறைவாக உற்பத்தி செய்யப்பட்ட பட்டுச் சேலைகள் தமிழகத்தினுடைய பாரம்பரியப் பெருமையையும், தமிழ்நாட்டினுடைய பெயரையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றன. இதை இனம் கண்டு, அப்படிப்பட்ட போலியாக உருவாக்கப்பட்டுள்ள சங்கங்களையும், பட்டுச் சேலையை உற்பத்தி செய்பவர்களையும் இனம் கண்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு 'உழவர் பாதுகாப்புத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதுபோல, நெசவாளர்களுக்கென ஒரு திட்டத்தை அறிவித்து, அவர்களையும் பயன்பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெசவாளர்களுக்குக் குழுக் காப்பீட்டுத் திட்டத்தை மத்திய அரசு அளித்து வந்தது. அதிலே, 4 சதவீத உதவித் தொகை வழங்குவதைக் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியிருக்கிறது. இதைக் கேட்டுப் பெறுகின்ற தகுதிகூட இல்லாமல் கடந்த தி.மு.க. அரசு செயல்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிமூலம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய

சிகிச்சைக்குரிய தொகை ஓராண்டு கழித்தும்கூட அந்தத் தனியார் வங்கியால் இன்னும் கொடுக்கப்படாமல், அதற்காக நடந்து, நடந்தே மீண்டும் அந்த நெசவாளர்கள் நோயாளியாகும் நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இதையும் தமிழக அரசு மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீன அறிவியல் காலத்திலே விஞ்ஞானத் துறையின் வளர்ச்சியால் கைத்தறிகளெல்லாம் நொடிந்துபோய், பவர்லூம் தறிகள் என்று சொல்லக்கூடிய விசைத்தறிகள் கோலோச்சின. ஆனால், இன்று நிலைமை மாறி, விசைத்தறிகள் நொடிந்துபோய், ஆட்டோலூம் என்று சொல்லக்கூடிய நாடா இல்லாத் தறிகளுடைய தாக்கம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஏற்கெனவே கடந்த ஆட்சியின் நிருவாகத் திறமையின்மையால் ஏற்பட்டுள்ள கடும் மின்வெட்டாலும், ஆட்டோலூம்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற ஜவுளித் துணிகளின் அடக்க விலைக்கும், விசைத்தறிகள்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற ஜவுளித் துணிகளின் அடக்க விலைக்கும் ஒரு மீட்டருக்கு ரூ.5/– வரை வித்தியாசம் இருக்கிறது. அதனால் அவர்களுடன் விசைத்தறியாளர்களாலே போட்டி போட முடியவில்லை. ஜவுளி உற்பத்தியாளர்கள் தங்கள் வியாபாரத்தில் மீட்டருக்கு 0.25 பைசா இலாபம் கிடைக்காதா என்று ஏங்குகின்ற நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் சீன நாட்டு ஜவுளித் துணிகளோடு நமது தமிழ்நாட்டு ஜவுளித் துணிகள் போட்டி போட முடியாமல் வியாபாரிகள் தவிக்கின்றனர். இது இன்றைய ஜவுளி வியாபாரிகளின் நிலை. கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையாலும், நிருவாகச் சீர்கேட்டாலும் 3 வருடங்களாகத் தொடர்ந்து ஏறிவரும் விலைவாசி உயர்வை எதிர்கொள்ள முடியாமல், 2008–க்குப் பிறகு 3 ஆண்டுகளாகக் கூலி உயர்த்தப்படவில்லை என்று கூறி, கடந்த 15 தினங்களாக கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள சிறு விசைத் தறி . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறி நெசவாளர்களுடைய ஸ்டிரைக்கை முன்னிட்டு இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. இன்றையதினம் இந்தப் பேச்சுவார்த்தையிலே சுமுகமான முன்னேற்றம் ஏற்படும் என்று நினைக்கின்றோம். அப்படியில்லாத பட்சத்தில், சட்டமன்றம் முடிந்தபிறகு, நானும், அந்த மாவட்டத்தில் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் விசைத்தறி நெசவாளர்களையும், ஜவுளி உற்பத்தியாளர்களையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவை விரைவில் எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இன்றைக்கு விசைத்தறி உரிமையாளர்களுடைய நிலை இப்படி இருந்துகொண்டிருக்கிறது. அதேநேரத்தில், ஜவுளி உற்பத்தியாளர்களாகட்டும், கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களாகட்டும், அவர்களது பொருளாதாரத் தேவையை ஏதேனும் ஒரு வகையில் யாரையேனும் சார்ந்து அதைச் சரிசெய்துகொள்ள முடியும். ஆனால், இதில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், பாவப்பட்டவர்கள் முழுக்க, முழுக்க விசைத்தறித் தொழிலாளர்கள்தான். அன்றாட சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாத அளவிலே அவர்கள் அடுத்தவர்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இல்லையென்று சொன்னால், கந்து வட்டி, மீட்டர் வட்டி கேட்கும் வட்டிக் கடைக்காரர்களிடம் கையேந்தவேண்டும். இல்லையென்று சொன்னால், குடும்பத்தோடு பட்டினி கிடப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாத நிலை இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரோடு நேரடிப் பேச்சுவார்த்தை நடக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். நாங்களும் பத்திரிகைச் செய்தியிலும், தொலைக்காட்சிச் செய்தியிலும் பார்த்தோம். இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதைப்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்பதற்கு முன்பே அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, நிச்சயமாக இன்றோடு இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கும் இருக்கிறது.

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2011 செப்டம்பர் 13

அதேபோல, அரசினுடைய இலவச வேட்டி, சேலைத் திட்ட பிரச்சினைக்கு நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். இருந்தாலும், வேட்டி, சேலையைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலே ஈரோடு, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்கள்தான் பெரும்பான்மையான விசைத்தறி சங்கங்கள்மூலம் உற்பத்தி செய்து வந்தன. அதற்கு பாவு நூல் எல்லாமே கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம்மூலம்தான் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், நான் இந்த இடத்திலே சொல்ல விரும்புவது ஒன்றே ஒன்றைத்தான்.

பிற்பகல் 12–20

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்,
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள். அதைப்போல, தமிழ்நாட்டில் இந்தியாவிலே உள்ளவர்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை கொடுக்கக்கூடிய அளவிற்குத் தொழில் வளமும், அந்த விசைத்தறி உரிமையாளர்கள் அதைச் செய்யக்கூடிய அளவிலேயும் இங்கே நிலைமை இருக்கிறது. அப்படி இருக்கின்றபொழுது ஓர் அதிகாரி அரசினுடைய கொள்கை என்ன என்றுகூடத் தெரியாமல் வெளி மாநிலத்திலேயிருந்து அதை நாங்கள் கொள்முதல் செய்யப்போகிறோம் என்று அறிவித்ததன் காரணமாக 20 நாட்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்ற விசைத்தறித் தொழிலாளர்கள், நெசவாளர்களெல்லாம் மிகப் பெரியதொரு பாதிப்புக்கு ஆட்பட்டு, மன உளைச்சலுக்கு உள்ளாயினர். ஆனால், நேற்று ஒரே அறிக்கையின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைச் சரி செய்து, நிச்சயமாக தமிழ்நாட்டிலே கொடுக்கப்படுகின்ற இலவச வேட்டி, சேலைகள் தமிழ்நாட்டினுடைய நெசவாளர்கள் மூலமாகத்தான் பெறப்படும் என்று சொல்லியிருப்பது எங்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு நெசவாளர்களுக்கு ஓர் ஆறுதலான விஷயம். இதற்காக, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்கின்ற முறையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 2008 ஆம் ஆண்டு இவையெல்லாம் கடந்த தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்றவை விசைத்தறிமூலம் இலவச



2011 செப்டம்பர் 13] [திரு. வி.சி. சந்திரகுமார்]

வேட்டி, சேலை நெய்யப்பட்டது. ஆனால், அதற்குரிய கூலியும், அதற்குரிய இலாபப் பங்குத் தொகையும் இதுவரைக்கும் அந்தச் சங்கங்களுக்குக் கடந்த ஆட்சியாலே வழங்கப்படவில்லை. இவையெல்லாம் அந்தச் சங்கங்கள் நலிந்துகொண்டு செல்வதற்கு காரணமாக இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2006 வரை 72 கோடி ரூபாய் நிலுவையாக இருந்த மானியத் தொகை, கடந்த மைனாரிட்டி தி.மு.க. சர்க்காரிலே 267 கோடி ரூபாயாக நிலுவையை விட்டுச் சென்றுவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் 156 கோடி ரூபாயை ஒதுக்கி இந்த ஆண்டு அந்த மானியத் தொகையை விடுவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எந்தச் சங்கங்களுக்கு அந்த நிலுவைத் தொகை பாக்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினால், நிச்சயமாக அதை அந்தச் சங்கங்களுக்குத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அதே நேரத்திலே ஈரோட்டினுடைய நீண்ட நாள் பிரச்சினையான சாயக் கழிவுநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண, திருப்பூரைப்போல இதற்கும் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஜவுளி ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஈரோடு மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, மத்திய அரசினுடைய அமைச்சகத்தின் கீழே

வருகின்ற இந்திய ஐவுளித் தொழில்நுட்பக் கல்லூரியையும் அங்கே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'கைத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்று சொல்லி ஒரு கவிஞர் பாடியுள்ளார். ஆனால், இன்று பள்ளியிலே படித்துவிட்டு வரும் யாரும், கைத் தொழிலைக் கற்றுக்கொண்டு வருவதாகத் தெரியவில்லை. 12 ஆம் வகுப்பிற்குப் பிறகு படிக்கின்ற உயர் கல்விப் படிப்பைப் படிக்கச் செல்லும் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுடைய எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. 12 ஆம் வகுப்பிற்குப் பிறகு, உயர் கல்விக்குப் போனவர்கள் தவிர, மற்றவர்கள் இன்று என்ன வேலையைச் செய்வது என்றே தெரியாமல் தடுமாறுகின்றனர். கைத் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையிலே, பள்ளியிலே ஏற்கெனவே அதற்கான பாடப் பிரிவுகள் இருந்தன; மீண்டும் அந்தப் பாடப் பிரிவுகளை உருவாக்கி, விவசாயம், நெசவு, மர வேலை, தையல் வேலை போன்றவற்றையெல்லாம் செய்வதற்கு அந்தப் பாடப் பிரிவுகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, கல் உடைக்கும் தொழிலாளர்கள், வேட்டுகளை வைத்து பாறைகளைத் தகர்க்கும்போது விபத்து ஏற்பட்டால் உயிர் பிழைப்பது என்பது அரிது. அதன்மூலமாக அவர்களின் குடும்பங்களின் நிலை கேள்விக்குறியாகிவிடும். கல் குவாரிகளில் வேலை செய்யும் பெரும்பாலான தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் அங்கேயே தங்கி வேலை செய்கின்றனர். அதனால், அவர்கள் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் என எல்லாவற்றிலும் வளர்ச்சி அடையாமல் உள்ளனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தொழிலாளர்களால் உரிய சலுகைகளையோ, சட்டப் பாதுகாப்பையோ பெற இயலவில்லை.

2001 ஆம் ஆண்டு, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்துடன் கல் குவாரித் தொழிலாளர்களும் இணைக்கப்பட்டனர். ஆனால், அதன்மூலம் பெரிய அளவிலே அவர்கள் பயன் அடைந்ததாகத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு அவர்களுக்குத் தனியான ஒரு நல வாரியம் அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கும் அரசினுடைய பாதுகாப்பும்,





அரவணைப்பும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள நல வாரியங்கள் கடந்த 5 ஆண்டுகளிலே நொடிந்துபோன வாரியங்களாக மாறிவிட்டன. அதற்குரிய அலுவலர்கள் இல்லை, பணியாளர்கள் இல்லை, தொழிலாளர்களின் குறைகளைக் களைவதற்கான செயல்பாடுகள் இல்லை. தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய பல்வேறு நல உதவிகள் இன்றுவரை பெரும்பாலான நல வாரிய உறுப்பினர்களுக்குக் கிடைக்கவில்லை. உதாரணத்திற்கு, ஈரோட்டில் இயங்கி வருகிற அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியத்திலே பணியாளர்கள் இல்லை. அதோடு மட்டுமல்ல, தொழிலாளர் நல அலுவலர் என்று சொல்லப்படுகின்ற S.S.S. என்கின்ற அந்த அதிகாரியும் இல்லை. அவருக்குப் பதிலாக இரண்டு ஆண்டுகளாக in–charge அலுவலர் மட்டுமே செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறார்.

அதோடு மட்டுமல்ல, இயற்கை மரணத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய 15,000 ரூபாய் இதுவரையிலும் 3 ஆண்டுகளாக அங்கே வழங்கப்படவில்லை. இதைவிட ஒரு கொடுமை என்னவென்றால் அந்த நல வாரிய உறுப்பினர் ஒருவர் இறந்துவிட்டால், உடனடியாக அவருடைய ஈமச் சடங்கிற்காக 2,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். அந்த 2,000 ரூபாய்கூட, 3 ஆண்டுகளாக அந்த நல வாரியத்தினுடைய உறுப்பினர் இறந்ததற்குக் கொடுக்காத நிலையிலே, அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடந்துகொண்டிருந்தது. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்தில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அதோடுமட்டுமல்ல, கண்காணிப்புக் குழுவின் கூட்டம் 2 வருடங்களாக நடைபெறவில்லை. அந்தக் கூட்டத்தைக் கூட்டி, நொடிந்து போயுள்ள நல வாரியத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்று கேட்டு, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 Minutes ஆகிவிட்டது. Please sit down. (குறுக்கீடு) உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பு அளித்த கேப்டன் அவர்களுக்கும், இங்கே பேசுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற, மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பூங்கா, இப்போது வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அது கடந்த காலங்களில் அவ்வாறு நடைபெற்றிருக்கின்றது. அது தெரிந்து, நானும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் அங்கே சென்று உடனடியாக அவற்றை ஆய்வு செய்து அங்கே LT line–னால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து, உடனடியாக HT line –ல் அங்கே connection கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது யார் யாருக்கு அவை ஒதுக்கப்பட்டதோ அவரவர்களே அங்கே தங்கள் பயன்பாட்டில் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியத்தின்மீதும், கைத்தறி நெசவாளர் மானியத்தின்மீதும் பேசுகிற வாய்ப்பை உருவாக்கித் தந்த தமிழக முதலமைச்சர், தமிழகத்தின் விடிவெள்ளி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னை சிங்காநல்லூர் தொகுதி தேர்தலிலே நிறுத்தி, ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்த



அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைச் சொல்லி, வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். தொழிலாளர் மானியத்தின்மீது, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை மானியத்தின்மீதும் சில கருத்துகளை இங்கே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் தொழிலாளர்களுக்குத் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 4, 5 நாட்களுக்கு முன்னாலே சம்பள உயர்வை தாயுள்ளத்தோடு வழங்கியுள்ளார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) 29,000 டாஸ்மாக் தொழிலாளர்களின் சார்பாகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அண்ணா தொழிற் சங்கப் பேரவையின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியை நான் இங்கே உரித்தாக்கிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது கருணை உள்ளத்தோடு எந்த ஆதாயமும் பெறாமல் அன்றைக்கு 36,000 தொழிலாளர்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டாஸ்மாக்கில் பணியமர்த்தினார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், பணியமர்த்துகிறபோது அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் இளைஞர்களாக, படித்தவர்களாக, திருமணம் ஆகாதவர்களாக இருந்தார்கள். ஆனால், இந்த 7, 8 ஆண்டுகளில் எல்லோரும் திருமணம் செய்து கொண்டு குழந்தைக் குட்டிகளோடு இருக்கிறார்கள். ஆனால், அம்மா அவர்கள் இப்போது அறிவித்த இந்த 500 ரூபாயை உள்ளடக்கி அவர்களுக்கு மொத்தமாகக் கிடைக்கிற ஊதியம் என்பது வெறும் 5,000 ரூபாய்தான். அந்தக் குடும்பங்களையெல்லாம் காப்பாற்றுகிற பொறுப்பு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று தாயுள்ளத்தோடு இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்த அளவில் ஒரு காலத்தில் தமிழகத்திலே பஞ்சாலைத் தொழில்தான் முதன்மைத் தொழிலாக, இருந்து நூற்றுக்கணக்கான பஞ்சாலைகள் இயங்கி வந்தன. ஆனால், இந்தப் பஞ்சாலைத் தொழில் சீர்கெட்டுப்போய் அதில் இன்றைக்கு நிரந்தரத் தொழிலாளர்களே இல்லை என்கிற நிலைமை, உருவாகியுள்ளது. அதற்கு மாறாக பஞ்சாலைகளிலே இளம் பெண்களை கொண்டுபோய் அடைத்து, அங்கே சிமெண்ட் ஷெட்டுகளைப் போட்டு, அவர்களைக் கொத்தடிமைகளாக வைத்து, திருமண உதவித் திட்டம் என்கிற பெயரால் 3 ஆண்டுகள் அவர்கள் பணியாற்றினால், அவர்களுக்கு 50,000 ரூபாய் கொடுத்து, ஒரு நாளைக்கு 40 ரூபாய், 50 ரூபாய் சாப்பாட்டையும் போட்டு 3 ஆண்டுகள் கழித்து அவர்களை வெளியேற்றுகிற அவல நிலைமை தமிழகத்திலே 15 ஆண்டு காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12–30

கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலேயும் சட்டமன்றத்திலே நான் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுகிறபோது மைனாரிட்டி தி.மு.க. அரசைக் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். ஆனால், கையாலாகாத கருணாநிதி அரசு அந்தப் பஞ்சாலைத் தொழிலைப் பற்றி கண்டுகொள்ளவேயில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வினுடைய ஆட்சிக் காலத்தில் 1991 ஆம் ஆண்டு கோவை மாவட்டம், பூலாங்கிணறு என்ற ஊரிலுள்ள பிரிமியர் மில் என்ற நிருவாகம்தான் சுமங்கலித் திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் தற்போது கோவை, திருப்பூர், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் உள்ள பஞ்சாலைகளில் 15 வயது முதல் 22 வயது வரையுள்ள பெண் தொழிலாளர்கள் சுமங்கலித் திட்டத்தின்கீழ்



தொழிலாளர்களின் இணை ஆணையாளரால் சான்றிடப்பட்ட நிலை ஆணையின்படி கம்பெனித் தொழில் பிரமுகராக மூன்று ஆண்டுகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் தவறான முறையில் பல காரியங்களில் ஈடுபட்டிருக்கிற நேரத்தில் இதைப்பற்றி நாங்கள் நேரில் சென்று, பல இடங்களில் ஆய்வு செய்து, இன்றைக்கு அதைக் களைகின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. அந்த பிரிமியர் மில் என்னுடைய உடுமலைப்பேட்டை பகுதியிலேதான் இருக்கிறது. இந்தத் திருமண உதவித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொடங்கியவர்களே அந்த பிரிமியர் மில் நிருவாகத்தினர்தான். தொழிற்சங்கங்கள் பல போராட்டங்களை நடத்தி, பல கோரிக்கைகள் வைத்தும் அந்தப் பிரச்சினை தீரவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறை முதலமைச்சராக வந்திருக்கிறார்கள், தாயுள்ளத்தோடு எல்லா துறைகளிலேயும் இருக்கக்கூடிய குறைபாடுகளையும் இன்றைக்கு நீக்கி—தொழிற்சங்கங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன–அம்மாவினுடைய ஆட்சியிலே தொழிற்சங்கங்கள் வைக்கிற கோரிக்கையை நிறைவேற்றி அவர்களை நிரந்தரம் செய்கின்ற பணியும் தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்த அளவிலே காப்பாற்ற வேண்டும் என்று அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டி, செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இந்த பஞ்சாலையைப் பொறுத்த அளவிலே முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து அமைப்புசாராத் தொழிலாளர்கள். தமிழகத்தில் இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், கட்டுமான, அமைப்புசாரா, உடலுழைப்புத் தொழிலாளர்கள் என

கோடிக்கணக்கான பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் நல வாரியத்திலே உறுப்பினராகச் சேருவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2001–லிருந்து 2006 வரையிலேயும் மிக எளிய முறையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வைத்திருந்தார்கள். ஆனால் கருணாநிதியினுடைய ஆட்சி தொழிலாளர் விரோத அரசு. அந்தத் தொழிலாளர்கள் நல வாரியத்திலே உறுப்பினர் ஆவதற்கு, அதாவது Revenue Department மூலமாக V.A.O.–க்கள் மூலமாகச் சென்று சிரமப்பட்டு உறுப்பினராக்குகிற முறையை மாற்றி, 2001–லேயிருந்து 2006 வரையிலேயும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு எல்லோரும் நல வாரியத்திலே உறுப்பினராக வேண்டும். நல வாரியத்திலே இருக்கக்கூடிய சலுகைகளை சாதாரண, சாமானிய தொழிலாளர்கள் பெறவேண்டும் என்பதற்காக எளிமைப்படுத்தியிருந்தார்கள். மீண்டும் அந்த எளிய முறையைப் பயன்படுத்தி, தொழிலாளர் நல அதிகாரிகள்–ACL, DCL மூலமாகப் பதிவு செய்கிற எளிய முறையை மீண்டும் அம்மா அவர்கள் உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கட்டுமானப் பணிகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு இன்றைக்கு ½ சதவீதம் நல நிதிதான் பிடிக்கப்படுகிறது. இந்தக் கட்டுமானத்திலே, அதாவது Builders–களிடமிருந்து பிடிக்கிற பணம் நல வாரியத்திற்கு போகிறது. அரசிடமிருந்து பிடிக்கிற காரணத்தினாலேயே பணம் இல்லை, சலுகைகள் வழங்கப்படவில்லை என்ற காரணத்தை அதிகாரிகள் சொல்கிறார்கள். அதை ஒரு சதவீதமாக ஆக்கினால் நல வாரியத்திற்கு அதிகப்படியான நிதி வரும், அதை அம்மா அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த அளவில் அதாவது, தமிழ்நாடு பொதுத் துறை சர்க்கரை ஆலை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31–3–2008 ஆம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது. 1–4–2008 முதல் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் அமல்படுத்தப்பட வேண்டும். ஆனால், ஊதிய ஒப்பந்தக் காலம் முடிவடைந்து 3 ஆண்டுகள் சென்ற பிறகும் மைனாரிட்டி தி.மு.க. அரசுடன் பல முறை நாங்கள்



பேச்சுவார்த்தை நடத்தி, பலகட்டப் போராட்டங்கள் நடத்தியும், மைனாரிட்டி தி.மு.க. அரசு அந்தச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள்மீது கருணை காட்டவில்லை. ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு எல்லா துறை, எல்லா தொழிலாளி வர்க்கத்திற்கும் நிதியை வாரி வழங்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஆட்சியில் அதற்குப் பிறகு தொழிற்தாவா மூலம் தமிழ்நாடு அரசு உயர்மட்டக் குழு அமைத்து, 1–3–2011 அன்று ஆணை பிறப்பித்தது. ஆனால், இப்பொருள் குறித்து ஒரு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் அறிவிப்பு வெளியிடப்பட்டு 5 மாத காலம் ஆகியும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரைகள் இருக்கின்றன. கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** இரண்டு பொருள்கள்தான் படித்திருக்கிறேன். இன்னும் 8 பொருள்கள் குறித்து பேசவேண்டியிருக்கின்றது. நான் கடந்த தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னை முழுவதும் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** சரி. ஆகவே, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு இந்த ஊதிய ஒப்பந்தத்தை விரைவாக முடித்துக் கொடுப்பதற்கு சர்க்கரை ஆலை நிருவாகத்திற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை வழங்கி, அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வில், இனிப்பை உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு இனிப்புச் செய்தியாக அந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுத்துச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு, சர்க்கரைத் தொழிலாளர்கள் பிரச்சினையை முடித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த அளவில் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நமது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக்

கல்லூரியில் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை, தொழிலாளர்களின் குழந்தைகளின் நலன் கருதி 60–லிருந்து 100 ஆக உயர்த்திட மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, நடைமுறையில் உள்ள, பேருந்தில் இலவசமாக பயணம் செய்யும் சலுகையை அனைத்துப் பேருந்துகளிலும் செல்லத்தக்க வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணியின்போது இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் காலதாமதம் இல்லாமல் வேலைவாய்ப்பு வழங்கி பாதிக்கப்பட்ட குடும்பத்தைக் காப்பாற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். பணியில் இருக்கும் தொழிலாளி நோய்வாய்ப்பட்டு பணி செய்ய முடியாத சூழ்நிலையில், தானாக விருப்ப ஓய்வில் செல்லும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்குக் குடும்பத்தின் வறுமையைக் கணக்கில் கொண்டு, கருணை அடிப்படையில் பணி வழங்கிட அம்மா அவர்கள் ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட Health Insurance திட்டத்தை இரத்துச் செய்துவிட்டு, தொழிலாளர்களின் தாய், தந்தையர் பயன் பெறும் வகையிலும், அனைத்து நோயாளிகளும் சிகிச்சை பெறும் வகையிலும் சிறப்பான புதிய மருத்துவத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்துவார்கள் என்று நான் ஆசைப்படுகிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் விடுபட்டுப்போன போக்குவரத்துத் தொழிலாளர்களாகப் பணிபுரியும் டிக்கட் பரிசோதகர்கள், ஊக்குநர்கள், ஓட்டுநர் பயிற்சியாளர்கள் மற்றும் போக்குவரத்து ஆய்வாளர்களுக்கு முறையான ஊதிய உயர்வு ஒப்பந்தம் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.





சென்ற தி.மு.க. ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட சீர்கேட்டால் ஆவினிலே அனேக பணியிடங்கள் காலியாக உள்ளன. இம்மாமன்றத்தில் அறிவித்துள்ள 60 ஆயிரம் இலவச கறவை மாடுகள், இலட்சக்கணக்கான ஆடு, மாடுகள் வழங்குதல், இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் என்பதால் இதுபோன்ற திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் விரைந்து செயல்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன்.

பிற்பகல் 12–40

ஆவின் நிறுவனத்தில் பணியில் இருக்கும்போது அகால மரணமடைந்த பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்துள்ள தினக் கூலியாகப் பணிபுரிகின்றவர்களை, அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப பதவி உயர்வு வழங்கிட பரிந்துரை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆவின் தினக் கூலித் தொழிலாளர்கள், உள்ளூர் வேலைவாய்ப்பு, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள அனல் மற்றும் புனல் மின்சார நிலையங்களில் பொது கட்டுமான வட்டங்கள் ஆகியவற்றில் பல ஆண்டுகளாக ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வரும், 1–5–1999 ஆம் ஆண்டு முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்ட பணியாளர்கள் தேர்வு நிலை அடைந்து பல ஆண்டுகளாகியும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. தி.மு.க. ஆட்சியில் பல நேரங்களிலே கோரிக்கை வைத்து போராடியும் கருணாநிதி அந்தப் பிரச்சினையைத் தட்டிக் கழித்து வந்திருக்கிறார். இதன் தொடர்பாக மின்சார வாரியத்தில் கமிட்டி அமைத்து, அதன்மீது அறிக்கை பெறப்பட்டும் பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளது. ஆகவே, தொழிலாளர்களுக்கு நல்ல உள்ளத்தோடு வாரி வழங்கக்கூடிய கருணை உள்ளம் படைத்த அம்மா அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 7–11–2005 ஆம் ஆண்டு அன்று மின்சார வாரியத்தில் 2,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இன்றுவரை

மஸ்தூராகவே பணி செய்து வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்தினால் கடந்த தி.மு.க. ஆட்சியில் இவர்களைப் பழி வாங்கியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இதைக் கருணை உள்ளத்தோடு பரிசீலித்து, அவர்களுக்கு வாழ்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாள் ஒன்றுக்கு 120 ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டு, பணி இடைவெளி இல்லாமல் தொடர்ச்சியாக மின்சார வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்துவரும் சுமார் 3,433 தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்து அந்தக் குடும்பங்களை அம்மா அவர்கள் காப்பாற்றுவார்கள் என்று மனதார நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அமுதம் அங்காடி ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதர அரசுச் சலுகைகள் அனைத்தையும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஊழியர்களுக்கும் வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சுமார் 11,053 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் மூலமாக சுமார் 3 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன், அந்தத் தொழிலைச் சார்ந்த பல இலட்சம் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவிதமான சலுகையும் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர்களின் பதிலுரைகள் இருக்கின்றன.

**திரு. ஆர். சின்னசாமி:** ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இந்தப் பிரச்சினைகளை அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலித்து, கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை ஏற்கெனவே மேற்கொண்டிருக்கிறார்கள். இதையும் சேர்த்து அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது தொகுதிப் பிரச்சினை ஒன்றிரண்டைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். சிங்காநல்லூர் . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள், தொகுதி பிரச்சினைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடலாம்.

**திரு. ஆர். சின்னசாமி:** எனது தொகுதியான சிங்காநல்லூர், கோவை மாநகரத்தில் இருந்தாலும்கூட பல ஆண்டுகளாக அது புறக்கணிக்கப்பட்ட தொகுதியாக இருக்கிறது. அதாவது 1991–லே ஒரு முறை அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றது. அதற்குப் பிறகு 1996–லே நான் வெற்றி பெற்றேன், எதிர்க்கட்சியில். தொடர்ந்து அந்தத் தொகுதியிலே எதிர்க்கட்சி வந்த காரணத்தினாலே அந்தத் தொகுதி முழுமையாக வளர்ச்சி பெறாத தொகுதியாக இருக்கிறது. ஆகையினாலே வளர்ச்சிப் பணிகள் எதுவும் செய்யப்படவில்லை. ரோடு போடவில்லை, லைட் இல்லை, தண்ணீர் இல்லை. 2001–2003 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கோவைக்காக விரிவுபடுத்தினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக மைனாரிட்டி தி.மு.க. அரசு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தாமல் கிடப்பிலே போட்டிருந்தார்கள். ஆனால், மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3–வது முறையாக முதலமைச்சராக வந்ததற்குப் பின்னால் போர்க்கால அடிப்படையில் அந்தப் பணியைச் செய்து இப்பொழுது எங்களுடைய தொகுதிக்குத் தண்ணீர் முழுமையாக வந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் சொல்லி இத்துடன் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் தொழிலாளர் துறை அதன்

பெயருக்கு ஏற்ப நடந்துகொள்ளவில்லை. முதலாளிகளின் சார்புத் துறையாகவே இருந்தது. தொழிற்சாலை ஆய்வகத் துறையும் அந்தப் பெயருக்கு ஏற்ப நடந்துகொள்ளவில்லை. தொழிற்சாலை சாய்வகத் துறையாகவே இருந்தது. இந்த இரண்டு துறைகளின் பலனையும் தொழிலாளிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் கடுமையாக அனுபவித்தார்கள். Comstar Automotive Technologies Private Ltd., என்கிற ஒரு தொழிற்சாலையில் 32 நாட்களாக வேலைநிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. அங்கேயிருக்கும் பிரச்சினை என்னவென்றால், தொழிற்சங்கத்தோடு பேசமாட்டேன், தொழிற்சங்கத்தை ஏற்கவும் மாட்டேன் என்று அந்நிறுவனத்தின் முதலாளி சொல்கிற ஒரு விஷயத்தினால்தான் அங்கு வேலைநிறுத்தம் தொடர்ந்துகொண்டிருக்கிறது. தொழிலாளர் துறை எடுக்கிற எந்த நடவடிக்கையையும் அவர்கள் ஏற்க மறுப்பதால் அங்குப் போரட்டம் நீடிக்கிறது. ஆகவே, அரசு தொழில் தகராறு சட்டம் 10 B–ஐப் பயன்படுத்தி, அந்தத் தொழிலாளிகளுக்கு ஓர் இடைக்கால நிவாரணம் வழங்கி, அந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன்பேரில், கடந்த நாட்களில் அந்த நிருவாகத்தையும், நம்முடைய துறையைச் சேர்ந்த அதிகாரிகளையும் அழைத்து கலந்துபேசி, ஒரு முடிவை நாம் ஏற்படுத்திருக்கிறோம். இந்தப் பிரச்சினையை வருகிற 16 ஆம் தேதி கண்டிப்பாக முடித்துவிடுவோமென்று கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வருகிற 16 ஆம் தேதி கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனையைப்பெற்று இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிக்க முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இதேபோல, சங்கம் வைத்ததற்காகமட்டும்





ஹுண்டாய் கம்பெனியில் 34 பேர் இப்பொழுதும் வேலை நீக்கத்தில் இருக்கிறார்கள். இடை நீக்கம், பொய் வழக்கு போன்ற பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, வேலை வழங்கப்பட்டவர்களுக்குள்ள அதே குற்றச்சாட்டிலிருக்கிற இந்த 34 பேருக்கும் மீண்டும் வேலை வழங்கவேண்டும். இயற்கை நீதியின்படி அரசாங்கம் அவர்களுக்கு வேலை பெற்றுத் தர வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

Foxconn என்ற தொழிற்சாலையிலும் இடைநீக்கம், பொய் வழக்குகள்–Sanmina, Doosan, Ford போன்ற தொழிற்சாலைகளிலும் தொழிற்சங்கத்தை அனுமதிக்கமுடியாது என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். சட்ட உரிமையைத் தொழிலாளிகள் அனுபவிக்க அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லக்கூடியவர்கள் சட்டவிரோதிகள் என்கிற முறையிலே பாவிக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அப்படி நம்முடைய தொழிலாளர் நலத் துறை கடுமையாக நடவடிக்கை எடுக்க கடந்த காலத்தில் தவறிவிட்டது. இப்பொழுதாவது நாம் உறுதியாக நடவடிக்கை எடுத்து தொழிலாளிகளுக்கு இந்தச் சலுகைகளை பெற்றுத் தரவேண்டுமென்று நான் கோருகிறேன்.

Orchid Chemicals என்கிற தொழிற்சாலையில் சங்கம் வைத்ததற்காக 400 பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். இப்படிப்பட்ட 13 கம்பெனிகளின் பட்டியலை என்னால் தரமுடியும். கடந்த ஆட்சியில் இப்படிப் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு நாம் நிவாரணம் வழங்குவதற்கு நம்முடைய அரசு முன் முயற்சி எடுக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அண்ணா தி.மு.க. சங்கம் வைத்தால், சி.ஐ.டி.யு. சங்கம் வைத்தால் அதை ஏற்கமுடியாது என்று சொல்கிற நிருவாகத்தோடு, முந்தைய ஆளுங்கட்சி தலையிட்டு தொ.மு.ச.–ஐ ஆரம்பித்து அவர்களுக்கு எல்லா அனுசரணையும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட வேலை நடந்திருக்கிறது.

போக்குவரத்துத் துறையிலேயே அண்ணா தி.மு.க. மற்றும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்ற நிபந்தனையெல்லாம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே தொழிலாளர் துறை எல்லோருக்கும் உரிய வாய்ப்பு கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். நிறுவனங்களுக்கு நம்முடைய அரசு நிறைய சலுகைகள் தருகிறது.

அது அவசியம் என்றாலும் அந்த நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குச் சலுகைகளைத் தரவேண்டாம்; ஆனால் சட்டப்படியும், இயற்கை நீதிப்படியும் தொழிலாளிகளுக்கு இருக்கிற உரிமைகளை வழங்கவேண்டும். அதையும் வழங்க மறுக்கிறார்கள் என்பதுதான் இங்கிருக்கிற துயரம். ஆகவே, நம்முடைய அரசும், தொழிலாளர் நலத் துறையும், தொழிற்சாலை ஆய்வகத் துறையும் கடுமையாக இந்த விஷயத்திலே தலையிட்டு நடவடிக்கை எடுத்தால்தான் இதுபோன்ற பிரச்சினைகளைப் போக்கமுடியும்.

8 மணி வேலை நேரம் இல்லை, P.F., E.S.I. இல்லை; எந்தக் கடை மற்றும் நிறுவனங்களிலும் இவை இல்லை என்கிற ஒரு துயர நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதன்மீது உறுதியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வேண்டுகிறேன்.

போக்குவரத்து, மின்சாரம், டாஸ்மாக், குடிநீர் வடிகால் வாரியம், உள்ளாட்சி, கூட்டுறவு, சத்துணவு அங்கன்வாடி, கதர் வாரியம் போன்ற அரசு சார்ந்த தொழில்களிலேயே தொகுப்பூதியங்கள் இப்பொழுதும் நீடித்திருக்கிறது. கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஏற்கெனவே அவற்றையெல்லாம் போக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அதற்கு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் உடனடியாக அந்தத் தொகுப்பூதிய முறைகளை இரத்து செய்து அவர்களுக்கு காலமுறை ஊதியமும், பணி நிரந்தரத்தையும் வழங்குவது என்பதுதான் இந்தக் கால் நூற்றாண்டு பிரச்சினைக்குப் பெரிய தீர்வாக அமையும். எல்லோரும் இன்றைய மானியக் கோரிக்கையில் அறிவிப்பு வருமென்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சத்துணவு, அங்கன்வாடி உட்பட எல்லாத் துறைகளிலும் புதிய பணியாளர்களை அமர்த்துவதற்கு அறிவிப்பை நாம் ஏற்கெனவே செய்திருக்கிறோம். அவ்வாறு பணி அமர்த்துகிறபோது ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பட்டியலிட்டதைப்போல மிகப் பெரிய முறைகேடுகள் ஒவ்வொரு பகுதியிலும் நடந்திருக்கின்றன. கீழ்மட்டத்தில் அந்த நிலைமை மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது. இந்தப் பணி நியமனத்தில் வெளிப்படைத் தன்மை பின்பற்றப்படுவதற்கும் மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறையில் செய்ததைப்போல, சரியான ஏற்பாட்டைச் செய்தால் ஏழையெளிய மக்களுக்கு பலனுள்ளதாகயிருக்கும்.

பிற்பகல் 12–50

தொழிலிலே, தொழில்வழி நோய் என்பதும் அதற்கான மருத்துவம் என்பதும், பாதுகாப்பு என்பதும் மிக முக்கியமான பிரச்சினை. அதற்கான படிப்பு இப்போது தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே இருக்கிறது. தொழிலாளர் நலத் துறைதான் அதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறது. எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திலேயே இந்தத் தொழில்வழி நோய் மருத்துவம் மற்றும் பாதுகாப்பு குறித்த ஒரு பட்டயப் படிப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும். தொழில் வளர்ந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழலிலே அதற்கென்று ஒரு துறையை நம்முடைய மருத்துவப் பல்கலைக்கழத்திலே உருவாக்குவது பயனளிக்குமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒப்பந்தக் கூலிமுறை என்பது புற்றுநோயைப்போல மிகப் பெரிய அளவிற்கு புரையோடிப் போய் இருக்கிறது. நிரந்தரத் தன்மையுள்ள தொழிலில் ஒப்பந்தக் கூலிமுறையை வைப்பதற்குச் சட்டத்திலேயும் இடமில்லை, வேறு வழிகளிலும் இடமில்லை. ஆனால், அந்த முறையை பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவரை சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதியாக அமல்படுத்தவேண்டும்.

குறைந்தபட்சக் கூலி ரூபாய் 10 ஆயிரம் என்பதை நாம் உறுதிப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால், சாதாரண ஏழைத் தொழிலாளிகள் வாழமுடியாது என்கிற நிலை இருக்கிறது. வாடகையே 3 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய் என்று இருக்கின்ற காலத்தில், சம்பளமும் அவ்வளவுதான் என்றால் எப்படி வாழ்வது என்கிற நிலை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நாம் அறிவித்துக்கொண்டிருக்கிற பல்வேறு சலுகைகளைப் பார்க்கிற தொழிலாளிகள் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

பீடித் தொழிலாளிகளுக்கு இருக்கின்ற ஒப்பந்தத்தை குறைந்தபட்சக் கூலியாக அறிவிக்கின்ற வழக்கம் இங்கு உண்டு.

ஆனால் 8 மாதகாலமாக கடந்த ஆட்சியிலே அதைச் செய்யவில்லை. நம்முடைய ஆட்சியிலே செய்யவேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் பீடித் தொழிலாளிகள் கடுமையாகப் பாதித்திருக்கிறார்கள். வழக்கமாகச் செய்கின்ற அந்த வேலையை—குறைந்தபட்சக் கூலிச் சட்டத்திற்கான கமிட்டியை constitute செய்து—உடனடியாக அமல்படுத்தப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல தொழிற்சாலைகளில் தொழிலாளிகள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்க 12–10–2010 அன்று, 1947 ஆம் ஆண்டு 96–வது சட்டப் பிரிவு 12(3)–ன்கீழ் ஒப்பந்தம் போடப்பட்டது. இதை நான்கு மாதம் காலம் தாழ்த்தி, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் 4–2–2011–ல் அரசிதழில் முதல்நிலை அறிக்கை–Preliminary Notification வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், அதை உறுதி செய்யாமல், முன்னாள் மைனாரிட்டி தி.மு.க. அரசு கைவிட்டு பீடித் தொழிலாளர்களுடைய வயிற்றிலே அடித்தது. ஆனாலும்கூட, இன்றையதினம் அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமானால், குறைந்தபட்ச (மாநில) ஊதியக் குழு அமைத்து, அந்தக் குழு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாயிலாக, அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில் உடனடியாக ஏற்படுத்தப்படும் என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. கீழ்க் கோர்ட்டுகளிலே தொழிலாளிகள் தங்களுக்குச் சாதகமாகப் பெறுகிற தீர்ப்புகளைப் பொதுத் துறைகளிலேயே எதிர்த்து, அப்பீல் செய்து உச்ச நீதிமன்றம்வரை போகிறார்கள். பகுதிநேர ஊதியம் 900 ரூபாயை 4 ஆயிரம் ரூபாயாக ஆக்க



வேண்டுமென்று வைத்த அந்தக் கோரிக்கைக்குக்கூட உச்ச நீதிமன்றம்வரை போகும் நிலை கடந்த ஆட்சியிலே இருந்தது. அப்படியிருக்கிற எல்லா வழக்குகளையுமே தொழிலாளிகளுக்குச் சாதகமாக நாம் திரும்பப்பெற்று கீழ்க் கோர்ட்டு தீர்ப்புகளை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் பல்லாயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் மத்தியிலே மிகப் பெரிய மகிழ்ச்சி உருவாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லா பொதுத் துறை நிறுவனங்களிலும் 10 சதவிகிதம் போனஸ் இருக்கிறது. ஆனால், குடிநீர் வடிகால் வாரியத்தில் அதைக்கூட அமல்படுத்த மறுக்கிறார்கள். அதற்கு வழக்கு, அப்பீல் என்று போய்க்கொண்டே இருக்கிறார்கள். 1.67 சதவிகித போனஸ் தருவதற்கு இத்தனை ஆண்டுகள் என்ன பிரச்சினை என்று எனக்கு இப்போதும் புரியவில்லை.

அதைப்போல், நல வாரியங்கள் என்பது நம்முடைய மாநிலத்தில் இருக்கிற முறைசாராத் தொழிலாளிகளுக்கான ஒரு சிறந்த ஏற்பாடு. அந்த ஏற்பாடும் கடந்த ஆட்சியில் மிகப் பெரிய குளறுபடிக்கு ஆளானது. கிராம நிருவாக அலுவலர்கள் V.A.O. சான்றளிப்புத் தேவை என்கிற ஒரு ஏற்பாட்டைச் செய்ததன் மூலமாக மிகப் பெரிய அளவில் பின்னுக்கு இழுத்துவிட்டார்கள். ஆகவே, V.A.O. கையெழுத்து தேவை என்பதை உடனடியாக இரத்து செய்யவேண்டுமென்று நான் வேண்டுகிறேன். அதை Labour Inspector மூலமாக நாம் செயல்படுத்த முடியும். நல வாரிய பயனாளிகளுக்கு—மற்றவர்களுக்கு முதியோர் பென்சன்போல, விதவைப் பென்சன்போல—ஆயிரம் ரூபாய் பென்சன் என்பதை அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பயனைப் பெறுவதற்காக, முறைசாரத் தொழிலாளர்களிடமிருந்து ஒரு சிறு தொகையை பெற்றுக்கொள்வதில்கூட எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தனித் தனி நல வாரியம் அமைப்பதுதான் அந்தந்தத் தொழில்களிலே உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேட்பு மனுக்கள் அளித்து 8, 10, 12 மாதங்கள் காத்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு மாதத்தில் அவர்களுடைய கேட்பு மனுக்கள் பைசல் செய்யப்படவேண்டுமென்பதை நம்முடைய அரசு உறுதிசெய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நம்முடைய தொழிலாளர் நலத் துறையிலும் சரி, நல வாரியத்திலும் சரி, தொழிற்சாலை ஆய்வகத் துறையிலும் சரி, மிகப் பெரிய அளவில் பணியாளர் பற்றாக்குறை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெண் தொழிலாளிகளுக்கு 50 வயதில் பென்சன் என்பதை நாம் உறுதி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் S.S.S. பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அதற்குப் பதில், தோட்டத் தொழிலில் வேலை பார்க்கின்ற ஒரு I.L.—ஐப் பொறுப்பாக்கி மிகப் பெரிய கொடுமையை அவர் அங்கு செய்து கொண்டிருக்கிறார். தொழில் அமைதி அங்கே பாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வழங்குவதில் 3 சதவிகிதம் ஒதுக்கீட்டை கறாராக அமல்படுத்த வேண்டும். இதைத் தொழிற்சாலை ஆய்வகத் துறை கண்காணிக்க ஒரு ஏற்பாட்டை செய்வது உதவியாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறித் துறையிலே ரூ.400/—ஆக இருக்கிற ஓய்வூதியத்தை ரூ.1,000/—ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கோ—ஆப்டெக்ஸ்சிலே V.R.S—ல் தொழிலாளர்கள் போனதாக அறிவித்தார்கள். ஆனால் உண்மையிலே அது கட்டாய வெளியேற்றம். அப்படி வெளியேற்றும்பொழுது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.400/—ஆக என்று இருந்த ஓய்வூதியத்தை ரூ.1,000/—ஆக உயர்த்தி வழங்கப்படுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு



உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கோ—ஆப்டெக்சிலே விருப்ப ஓய்வு என்ற பெயரிலே கட்டாயமாக தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இன்றுவரை அவர்களுக்கு எந்தவிதப் பணப் பலனும் கிடைக்கவில்லை. உண்மையிலேயே அந்தத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்பதை இந்தச் சபையிலே நான் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு மீண்டும் புதிய அடிப்படையில் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்தால்தான் கடந்த ஆட்சியில் அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்க முடியுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கதர் துறையிலே, காகித ஆலையில் பணியாற்றக்கூடியவர்களை இங்கிருந்து ஊட்டிக்கு இடமாற்றம் செய்வது என்பதெல்லாம் நடந்துக்கொண்டிருக்கின்றன. அவர்கள் எங்கே இருக்கிறார்களோ, அதற்கு அருகிலே அவர்களுக்கு வேலை தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சோப்பு அலகிலேயும் பணி நிரந்தரம் செய்வதற்கு நடவடிக்கை இல்லை. வைப்பு நிதி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. அ. சவுந்தரராசன், உரையை விரைவாக முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** உரையை விரைவாக முடித்துவிடுகிறேன். இதுவரை எனக்கு 8 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் தலையீடுகள் எல்லாம் இருந்தன. இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அதேமாதிரி, சோப்பு அலகு மற்றும் நூற்பாளர் அலகு இவை அனைத்தையும் பரவலாக்க வேண்டும். அதில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பணி நிரந்தரம் செய்து, மற்றும் வைப்பு நிதி போன்றவற்றையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'இந்த அளவிற்கு தேன் கொண்டு வந்தால்தான் உங்களுக்கு ஊதியம்' என்ற நிபந்தனைகள் எல்லாம் இருப்பதாக சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் தீர்ப்பு வந்தும் பணி நிரந்தரம் செய்யப்படாதத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டு வளர்ச்சித் துறையிலே உள்ள இளநிலை பட்டு ஆய்வாளர்கள் மற்றும் ஊழியர்கள் 25 ஆண்டுகளாகப் பதவி உயர்வில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு Grade Pay–ம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு அதை வழங்கி, பட்டுத் தொழிலாளர் பிரச்சினையிலே இன்னும் விரிவான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியம் என்று வலியுறுத்துகிறேன்.

இலவச வேட்டி, சேலை உற்பத்தியிலே ஈடுபடக்கூடிய நெசவாளர்ளுக்கு இப்போது ரூ.50/–தான் ஊதியமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. 100 நாள் வேலைத் திட்டத்தில் வேலை செய்கிறவர்களுக்கு ரூ.119/– என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அந்த அளவிற்குக் கூலி கிடைப்பதையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோ–ஆப்டெக்ஸ்–லேயிருந்து மற்றவர்களுக்குப் பணம் வழங்காமல் இருக்கிறார்கள். Spinning mill–க்கு பணம் வழங்கவில்லை. சொசைட்டிக்கும் பணம் வழங்கவில்லை. பட்டு சொசைட்டிகளுக்கும் பணம் வழங்கவில்லை. ஏற்கெனவே நான் முறையிட்டேன். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மிக வேகமாக அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். இப்போதும் தறிகள் இயங்காமல் நிற்கின்றன என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கைத்தறி கூட்டுறவுச் சொசைட்டிகளுக்கு கடன் தள்ளுபடிக்காக மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற ரூ.600 கோடியை உடனடியாகப் பெற்று நாம் அதைப் பயன்படுத்துவதன் மூலமாக, குறைந்தபட்சம் 1,100 கூட்டுறவுச் சங்கங்களிலே ஒரு பெரிய விடிவை நாம் உண்டாக்க





முடியும். அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சொசைட்டிகளுக்குத் தேர்தல் நடத்தி அதன் உறுப்பினர்களிடம் சொசைட்டிகளை ஒப்படைக்க வேண்டும். தனி அலுவலர்களின் சம்பளம் என்பது சொசைட்டிகளைத் தின்று கொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றில் எல்லாம் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோ–ஆப்டெக்ஸ் மற்றும் spinning mill–க்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முன்பணம் கொடுக்கிற அந்த முறையை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை ஏற்கெனவே இதே மாமன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கிற காரணத்தால், அது குறித்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆராய்ந்து முடிவெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

சர்க்கரை ஆலைகளிலே மூன்றாண்டு ஊதிய ஒப்பந்தம் நிலுவையிலே இருக்கிறது. நம்முடைய தொழிலாளர் நலத் துறை முயற்சித்தும் முடியாமல் இருக்கிறது. ஆகவே, அதிலேயும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். SLAB போன்ற முத்தரப்புக் குழுக்களை முறையாகக் கூட்டி குறிப்பிட்ட இடைவெளியிலே நடத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

ஏற்கெனவே கடந்த 5 ஆண்டுகளில் நடந்த தொழிலாளர் போராட்டங்களில் ஏராளமான பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பிரச்சினைகள் தீர்ந்தப் பிறகும்கூட, வழக்குகள் நீடிக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று, தொழிலாளர்களின் மனதிலே நிம்மதியை உண்டாக்கி அவர்களுக்கு உதவிட வேண்டுமென்று நான் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** கண்டிப்பாக, நன்றிக்கு முன்னால் ஒன்றைச் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். தொழிலாளர் பிரச்சினைகளில் தொழில் துறையும், தொழிலாளர் நலத் துறையும் பல நேரங்களிலே மோதிக்கொள்வது போன்ற ஒரு நிலைமை இருக்கிறது. இந்த இரண்டு துறைகளும் அரசுத் துறைகள் என்கிற வகையிலே தொழிலாளர்களுக்குரிய நியாயங்கள் கிடைக்க இரண்டு துறைகளும் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைத் தீர்வு தொழிற்சங்க அங்கீகாரச் சட்டம் நிறைவேற்றுவதில்தான் இருக்கிறது என்பதை வலியுறுத்துகிறேன். இந்த வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை நிறைவுச் செய்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

*__திரு. என்.வி. காமராஜ்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

“மக்கள் தொண்டே மகேசன் தொண்டு” என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் மணிமொழிக்கேற்பவும், “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று கூறிய வள்ளலார் வழியில் ஆட்சி செய்த ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அசைக்க முடியாத அரசியல் வாரிசு, கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தைக் காத்துவரும் கருணைக் கடலே!



“தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு.”

என்ற வள்ளுவன் வழியில் அஞ்சாது, கண் துஞ்சாது ஆட்சி நடத்தும் அருட்கடல் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மிக, மிக சாதாரண எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கழகத்தின் பொதுக் குழு உறுப்பினராகவும், வேதாரண்யம் தொகுதி மக்கள் எல்லோருக்கும் பணியாற்றும் ஒரு வாய்ப்பை அளித்த என் இதயத் தாய்; ஜனநாயகம் காத்திடும் தருமத் தாய்; இந்தியத் திருநாட்டின் அரசியல் சக்ரவர்த்தி; எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட இணையற்ற ஆட்சி நடத்தும் ஏழைகளின் ஏந்தல், புரட்சித் தாய்; அரசியல் களத்தில் அற்புதம் நிகழ்த்தி அவனி புகழ் சரித்திரம் படைத்திடும் அருமைத் தாய்; நினைத்துக்கூட பார்க்காத நிலையிலிருந்த என்னை இன்று மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேச வைத்துப் பார்க்கிற பாசத் தெய்வத்திற்கு என் தொகுதி மக்களின் சார்பில் பல ஆயிரம், பல ஆயிரம் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் தாயின் வள்ளல் தன்மைக்கு என் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் பறைசாற்றி மகிழ்கின்றேன்.

மாண்புமிக்க அமைச்சர் பெருமக்கள், மாண்புமிக்க உறுப்பினர்கள் அனைவருக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற வேதாரண்யம் தொகுதி, கடந்த 30 ஆண்டுகளுக்குப் பிறகே எதிர்க்கட்சிகளின் பிடியிலிருந்து விலகி, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் எஃகுக் கோட்டையாக இன்று மாறியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்து, என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த வேதாரண்யம் தொகுதி மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் ஆகியும், கல்லூரிப் படிப்புக்கு வாய்ப்பே இல்லாமல் இருந்த வேதாரண்யத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, கல்லூரி

வழங்கி ஆணையிட்ட எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை வணங்கிக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேதாரண்யம் அருகில் புஷ்பவனம் ஜெயக்குமார் என்ற மீனவர் சிங்கள வெறியர்களால் நடுக் கடலில் கொலை செய்யப்பட்ட செய்தி அறிந்து, அம்மா நீங்கள் ஓடோடி வந்து ஆறுதலும், நிதியுதவியும் அளித்தீர்கள். அத்தகைய தாயுள்ளம் கொண்ட தங்களுக்கு என் தொகுதி மீனவக் குடும்பங்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிற திட்டங்களைப் பக்கத்து மாநிலங்கள் அண்ணாந்து பார்த்து, வியந்து பாராட்டுகின்றன. விவசாயம், விவசாயத் தொழிலாளர்களின் நலன், வளம் பெருக்கும் திட்டம், விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கி அவர்கள் விழி நீரைத் துடைத்த தருமத் தாயே, கிராமப்புற ஏழைகளுக்கு இலவச கறவை மாடுகள், இலவச ஆடுகள் தந்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய கலங்கரை விளக்கமாக, தமிழகத் தாய்மார்களுக்கு இலவச மிக்சி, இலவச கிரைண்டர், இலவச மின்விசிறி வழங்கி, ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரையும் சமமாகப் பார்க்கும் எங்கள் தருமத் தாயே, உங்களுக்கு எங்களின் இலட்சோப இலட்ச நன்றியைக் காணிக்கையாக்குகிறோம் அம்மா!

“வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்
கோலுயரக் கோனுயர் வான்”

என்ற ஔவையார் பாடலுக்கேற்ப இந்த மாநிலம் முன்னேற விவசாயம், திருந்திய நெல் சாகுபடித் திட்டத்திற்கும், நவீன கரும்பு உற்பத்தித் திறனுக்கும், நுண்நீர் பாசன முறைகள் அனைத்திற்கும் அம்மா நீங்கள் அள்ளி, அள்ளி பல ஆயிரம் கோடி ரூபாய்களை வழங்கியிருக்கிறீர்கள்.

வரலாற்றுத் திருத்தலங்களின் வளர்ச்சிக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி வாரி வழங்கிய ஆன்மிக வள்ளலே! கோயில்களில் குடமுழுக்கை குன்றேறி செய்ய ஆணையிட்டுள்ள மாண்புமிகு



அம்மா அவர்களே, பள்ளி, கல்லூரி கல்வி வளர்ச்சிக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய்; மக்கள் நல்வாழ்விற்கு மகத்தானத் திட்டங்கள்; ஊரக–நகர்ப்புற வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நிதி ஆதாரங்கள்; மின்சாரம், கால்நடை பராமரிப்புத் துறைகளுக்குப் பரிவோடு பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள்; சாலை மேம்பாடு, பராமரிப்பு, பாலங்கள், மிகச் சிறு பாலங்கள் என சாலைப் போக்குவரத்திற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களே, உலகளவில் தகவல் தொழில்நுட்பத் துறை தலைநிமிர்ந்து வளர்ந்திட பல திட்டங்கள் தந்துள்ள எங்கள் இதய தெய்வமே! மருத்துவத் துறையின்மூலம் நோய் நாடி, நோய் முதல் நாடி, மக்கள் நலம் நாடி நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்களே! இப்படி ஒட்டுமொத்தத் தமிழ்ப் பெருமக்களின் வாழ்விற்காக, வளர்ச்சிக்காக, நலத்திற்காக அயராது பாடுபடும் எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–05*

நீங்கள் சிந்தித்துத் தீட்டிய திட்டங்களை, இன்று அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து, இந்த ஆட்சியையும், அம்மா உங்களையும் பாராட்டி மகிழ்வதைக் காண்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

‘தமிழாண்டுப் பிறப்பு சித்திரையில் போயிற்றே’ என்று எல்லா தரப்பு மக்களும் ஏங்கித் தவித்து, நித்திரையின்றியிருந்த நிலை மாற்றி, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று அறிவித்த எத்தர்களின் மூக்கை உடைத்து, மீண்டும் சித்திரைதான் தமிழாண்டுப் பிறப்பென்று அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழரை கோடி தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களே! உங்களுக்கு ஆயிரம், ஆயிரம் நன்றிகள்.

இலங்கையில் தமிழினம் சிந்திய கண்ணீரையும், செத்து மடிந்த இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிரையும், துச்சமென மதித்தக் கொடுங்கோலன் இராஜபக்சேவைக் கண்டித்து இந்த மாமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்ததன்மூலம், இன்று அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கும் அளவிற்கு வித்திட்ட எங்கள் அன்னையே, இதய தெய்வமே! நீங்கள்தான் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே தாய்! (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத் தீர்மானத்தின்மூலம் கொடுங்கோலன் இராஜபக்சே—கோத்தப்பய இராஜபக்சேவைக் குலை நடுங்க வைத்துள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களின் "குலதெய்வம்" எங்கள் அம்மா. உங்களுக்குத் தமிழ் மக்களின் சார்பாக ஆயிரம், ஆயிரம் நன்றிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி மக்களின் சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களிடம் பணிவான சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன்.

தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தியில் வேதாரண்யம், தூத்துக்குடிக்கு அடுத்ததாக உள்ளது. இந்த உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வரும் பல ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு வாழ்வு தரும் வகையில், உப்பை மூலப்பொருளாகக் கொண்ட "காஸ்டிக் சோடா" தொழிற்சாலை துவங்கிட கேட்டுக் கொள்கிறேன்.

தலைஞாயிறு ஒன்றியம், அரிச்சந்திரா நதி கடலில் கலக்கும் முகத்துவாரத்தில், கடல் நீர் மீண்டும் உள்ளே புகாதவாறு முதலியப்பன் கண்டியில் ஷட்டருடன்கூடிய தடுப்பணை அமைத்திடவும், விவசாய நிலங்களில் கடல்நீர் புகுந்துவிட்டதால் உவர்நிலம் ஆகி, விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்க நிலவள வங்கிக்கு உத்தரவிட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வெங்காய தாமரை, நெய்வேலி காட்டாமணக்கு செடிகள் ஆறுகளில், வடிகால் வாய்க்காலில் படர்ந்துள்ளன. இதனால் தண்ணீர் செல்ல முடியாமல் தடுக்கப்படுகிறது. இதனால் வெள்ளச்சேதம் அதிகமாகிறது. இதை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களின் துயரம் போக்கும் தோணியாகத் திகழும் எங்கள் அம்மாவே, மீன்பிடித் தொழிலில் சிறந்து விளங்கும் ஆறுகாட்டுத் துறையில் கடல் அலை தடுப்பு (Breakwater), மீன்பிடித் துறைமுகம் அமைத்திட எனது கோரிக்கையை சமர்ப்பிக்கிறேன்

பல நூற்றாண்டுகளாக தலைமுறை, தலைமுறையாகக் குடியிருந்துவரும் வேதாரண்யம் பட்டணமனை இனாம் கிராம குடியிருப்புவாசிகள் 900 குடும்பங்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிட உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





விவசாயிகளின் விளை பொருள்களைச் சேமித்து வைக்கக்கூடிய குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு மற்றும் அதிகமாக மாம்பழம் விளையும் எங்கள் பகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

நாகப்பட்டினத்தில் இருந்து வேளாங்கண்ணி வேதாரண்யம் வழியாக திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வரை செல்லும் சாலையை, கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு (E.C.R.) இணையாக மேம்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் கடைமடைப் பகுதியான தகட்டூர் வருவாய் கிராமம் முற்றிலுமாகப் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த வெள்ள நீரை முள்ளியாறு, தென்னடார் வழியாக கடலில் கலக்க ஆவன செய்ய கோருகிறேன்.

மேலும், காவிரியாற்றின் உபரி நீர் மானங்கொண்டான் ஆற்றின் வழியாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, ஆதனூர் வருவாய் கிராமத்தில் நீர்த்தேக்கம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

மான்கள், பறவைகள் மற்றும் மூலிகைச் செடிகள் நிறைந்துள்ள, உள்ள கலங்கரை விளக்கத்துடன்கூடிய கோடியக்கரையைச் சுற்றுலாத் தலமாக மாற்றிட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் பணித்து சமர்ப்பிக்கிறேன்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு".

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்த நான்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இயற்கையாக அமைந்துள்ளதைக் கண்டு, நீங்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைவேண்டி, அம்மா

'நீங்கள் நல்லாயிருக்கணும் நாடு முன்னேற,
இந்த நாட்டிலுள்ள ஏழரை கோடி மக்களின் வாழ்வு
முன்னேற, (மேசையைத் தட்டும் ஒலி) என்றும்
'நல்லவங்க எல்லோரும் உங்க பின்னாலே,
நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும் அம்மா உங்க கண்ணு
முன்னாலே!'

என்று கூறி, இந்தப் பொன்னான வாய்ப்பை நல்கிய தங்கள் பொற்பாதங்களுக்கு மீண்டும், மீண்டும் என் நன்றியைக் காணிக்கையாக்கி, தாங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, அமர்கின்றேன் தாயே". (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை மானியக் கோரிக்கை கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை ஆகியவற்றின் மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளை முன்வைக்கலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1—10

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நான் சார்ந்திருக்கக்கூடிய கோவை மாவட்டத்தினுடைய தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த 5 ஆண்டுக் காலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றபோது, தமிழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய சுமார் 1¼ இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வுப் பிரச்சினையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு, குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின்கீழ் ஓர் அவசர உத்தரவைப் பிறப்பித்தது.

தோட்டத் தொழிலில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 134 ரூபாய் சம்பளத்தை வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கத்தால், அவர்கள் கொண்டுவந்த அந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தையே அமல்படுத்த முடியவில்லை. மாறாக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. கோவை தங்கம் அவர்கள், அரசு அறிவித்திருந்த 134



ரூபாய் என்ற அந்தக் குறைந்தபட்ச சம்பளத்தைக் குறைத்து, 104 ரூபாய் என்று ஓர் ஒப்பந்தத்தைப் போட்டு, தோட்டத் தொழிலாளர்களாகப் பணிபுரியக்கூடியவர்களுக்கு 25 ரூபாய் பணப் பயன்கள் கிடைக்காத அளவிற்கு நடவடிக்கை எடுத்தார்கள்.

மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, நான் அவரிடத்திலே இதுகுறித்து கோரிக்கை வைத்தேன்; தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடத்திலேயும் கோரிக்கை வைத்தேன். அப்படிக் கோரிக்கை வைத்தவுடனேயே, 15 நாட்களில் பணப் பயன்கள் இழப்பு என்று ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த 25 ரூபாயை, மீண்டும் கொடுக்க வேண்டுமென்ற அந்த முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) 2—7—2011 ஆம் தேதி, கோவை இணை ஆணையர் திரு. ஜெய்சிங்கன் அவர்கள் முன்னிலையில், அதற்கொரு ஒப்பந்தம் போடப்பட்டது.

வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநிலத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தினுடைய தலைவர் திரு. ஹமீது அவர்களும் எடுத்த முயற்சியின் காரணமாக, இப்படியொரு ஒப்பந்தம் ஏற்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் இழந்திருந்த 25 ரூபாய் சம்பளத்தை, மீண்டும் அவர்கள் பெறுகின்ற வகையிலும், Gratuity, P.F., Bonus, Maternity leave, Casual leave, Annual leave with wages போன்றவற்றை உள்ளடக்கிய முறையிலும், தொழிலாளர்களுக்கு அந்தப் பணப் பயன்களைப் பெற்றுக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களையும் நான் இந்த நேரத்திலே பாராட்டி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியக் கோரிக்கை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்பு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சங்க உரிமை அங்கீகாரம் என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் முழுமையாகப் பறிக்கப்பட்டுவிட்டது. அரசியல் சாசனம் அங்கீகரித்துள்ள தொழிற்சங்க உரிமை, அண்மை ஆண்டுகளில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. நான் இப்போது ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர்களைப் பற்றிச் சொல்லவில்லை; தவறாக

எடுத்துக் கொள்ளக்கூடாது. கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பறிக்கப்பட்டவற்றைப்பற்றித்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

தொழிற்சங்கத்தைத் தொடங்க நினைத்தாலே, அப்படி நினைத்த தொழிலாளியின் வேலை பறிக்கப்பட்டது. தொழிற் சங்கத்தை அனுமதிக்க முடியாது என்று சொல்லி, பன்னாட்டு, உள்நாட்டு பெரும் முதலாளிகளுக்குப் பகிரங்கமாக ஆதரவு கொடுத்தார்கள். தொழிற்சங்கச் சட்டத்தில், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தை, வேலையளிப்போர் அங்கீகரிப்பதற்கான சட்டத் திருத்தத்தைச் செய்ய வேண்டும். ஒரு நிறுவனத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் இருந்தால், இரகசிய வாக்கெடுப்பின்மூலம், பெரும்பான்மை வாக்குகள் பெறும் சங்கம், அங்கீகரிக்கப்பட வழிவகை செய்யப்பட வேண்டும். தொழிற் தகராறு சட்டம் 2(b) பிரிவில் தொகை வசூலித்தல், தொழில் தாவாக்களில் தொழிலாளிகளுக்குப் பண நலன்கள் (Monetary benefit) வழங்குமாறு தொழிலாளர் நீதிமன்றங்களும், தொழிலாளர் தீர்ப்பாயமும் உத்தரவிட்ட பின்பும், தொகையை வேலையளிப்போர் வழங்காவிட்டால், வருவாய்த் துறைமூலம், நில வரி பாக்கி போலக் கருதி, அத்தொகையை வசூலிக்கும் முறை முன்பிருந்தது. ஆனால், காலதாமதம் ஏற்படுவதால், துரிதமாக வசூலிக்கப்பட சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கே அதிகாரம் அளிக்க அரசு முடிவு செய்து, தொழில் தகராறு சட்டத்தில் 11(b)–பிரிவு உருவாக்கப்பட்டது. அதன்பின், வருவாய்த் துறைமூலம் வசூலிக்க, அரசு சான்றிதழ் தருவது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால், 11(b)–பிரிவின்கீழ், தொகையை வசூலிக்க இதுவரை நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பிக்கவில்லை. இந்தப் பணியைச் செய்ய பணியாளர்கள் இல்லை என்றும், 11(b) பிரிவிற்கு விதிகள் வகுக்கப்படவில்லை என்றும் காரணம் சொல்லப்படுகிறது. இதனால், 11(b) பிரிவின்கீழ், தாக்கல் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான மனுக்கள், நடவடிக்கையின்றி நீதிமன்றங்களில் கட்டி வைக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகள் வழக்குகள் நடத்தி, தீர்ப்பு பெற்ற பின்பும், அதன் பலனை அடைய முடியாத நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டது சரியல்ல; இதனைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு நிதி வழங்குவதற்காக மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ள Textile



Workers' Rehabilitation Fund Scheme என்ற திட்டத்தின்கீழ், நம்முடைய தொழிலாளர்கள் நிதியுதவி பெறமுடியாத நிலையுள்ளது. ஆலை மூடப்பட்டதாக மாநில அரசு தொழில் தகராறு சட்டப்படி அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசு நிபந்தனை விதித்ததும், அவ்வாறு அறிவிக்க சட்டத்தில் இடமில்லை என்று சொல்லி, இதற்கு முன்பு இருந்த நம்முடைய மாநில தொழிலாளர் துறை கூறியதும் பெரும் தாமதத்தை ஏற்படுத்தியது. தற்போது ஒருவாறாக மூடப்பட்ட சில பஞ்சாலைகளின் தொழிலாளர் பட்டியலை மத்திய அரசின் ஜவுளித் துறையிடம் மாநில அரசு தந்துள்ளது. இன்னும் 300–க்கும் மேற்பட்ட மூடிய பஞ்சாலைகள் உள்ளன. அவற்றின் நிர்வாகங்களையும், தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசி, தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு நிதி மத்திய அரசிடமிருந்து கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

புனர்வாழ்வு நிதி பெற மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளியின் சம்பளம் 3,500/– ரூபாய்க்குமேல் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், இப்போது தொழிலாளர்கள் 8,000/–, 9,000/– ரூபாய் அளவில் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சம்பள வரம்பை உயர்த்த வேண்டுமென்பதற்கான முறையிலே பேசப்பட்டு, அவற்றை 7,500/– ரூபாய் என்ற அளவில் உச்ச வரம்பை உயர்த்துவார்களேயானால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க, தொழிலாளர் சட்டங்கள் தொழிற்சாலை ஆய்வகத் துறை, தொழிலாளர் நலத் துறை அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. தொழில் நிறுவனங்களின் நிருவாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஏற்படும் தொழில் தாவாக்கள் 1947 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் தொழிலாளர் நலத் துறையால் சமரசமாகத் தீர்த்து

வைக்கப்படுகின்றன. தொழிலாளர் சட்டங்களில் அந்நிய நிறுவனங்களுக்கென விதிவிலக்கு ஏதும் அளிக்கப்படவில்லை. எனினும், மாண்புமிகு அம்மாவின் அரசு தொழிலாளர்களின் நலனைக் கண்டிப்பாகப் பாதுகாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தொழிலாளர்களுடைய அங்கீகாரம் பற்றி சட்டம் இயற்ற வேண்டுமென்று சொன்னார்கள். 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்க சட்டப் பிரிவு 4(1)–ன்படி தொழிற்சங்கத்தை உருவாக்க 7 நபர்கள் போதுமானது. ஆனால், தொழிற்சங்கத்தைத் தொழில் சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமானால் அத்தொழிலில் அல்லது அந்நிறுவனத்தில் ஈடுபட்டுள்ள, பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களில் 10 சதவீதமோ அல்லது நூறு தொழிலாளர்களோ, இதில் எது குறைவோ அந்த எண்ணிக்கையில் அந்தச் சங்கத்தில் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

தற்போது 12,044 நபர்களை உள்ளடக்கி, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் தமிழகத்தில் உள்ளன. மேலும், தொழிற்சங்க சட்டத்தின்கீழ் தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வது குறித்து எந்தவிதமான சட்டமும் தனியாக இல்லை. தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கும்பொருட்டு, 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்ய வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள்மீது எங்களுக்கு நல்ல நம்பிக்கை உண்டு. நிச்சயமாகச் செய்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதைப் பொறுத்தவரையில், அது மாநில அரசின் பொறுப்பல்ல; மத்திய அரசாங்கம் சம்பள



உச்ச வரம்பை ரூபாய் 7,500/– என்று உயர்த்தித் தருவார்களேயானால், நிச்சயமாக அந்த மறுவாழ்வு நிதியிலிருந்து மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அது கிடைக்கும். அதனைச் செய்வதற்கு மாநில அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலையான சட்டத் திருத்தம்; தொழிற்சாலைகளின் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்குமேல் நிரந்தரமற்ற தொழிலாளர்கள் இருக்கக்கூடாது என்றும், ஓராண்டுக்குமேல் ஒருவரைப் பயிற்சியாளரென பணியிடத்தில் அமர்த்தக்கூடாது என்றும், நிலையான சட்டத் திருத்தத்தைச் சென்ற ஆட்சியின்போது இந்தச் சட்டப் பேரவையில் திருத்தங்களைச் செய்தனர். ஆனால், அது பல ஆண்டுகளாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக காத்துக் கொண்டிருக்கின்றது. தாமதத்திற்கான காரணம் தெரியவில்லை. சென்ற அரசும் அதுகுறித்து அக்கறை எடுக்கவில்லை. இந்த அரசு அச்சட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்று அமலாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுமங்கலி திட்டம். தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளில் சுமங்கலி திட்டம் என்ற பெயரில் இளம் பெண்கள் Camp கூலிகளாக அமர்த்தப்படுவதைப்பற்றி ஆய்வு செய்ய, சென்ற அரசு ஒரு குழு அமைத்தது. அந்தக் குழு அறிக்கையைச் சமர்ப்பித்ததா, அது விவாதிக்கப்பட்டதா என இதுவரை எந்தத் தகவலும் இல்லை. இதற்கு முன்னால் இருந்த அரசு அதைச் செய்யவே இல்லை கை, புண்ணுக்குக் கண்ணாடி தேடிய பழைய நிலையை மாற்றி, நமது இளம் பெண்களை நவீன கொத்தடிமைகளாக வைத்துள்ள இந்தச் சமூக அவலத்தைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் வருத்தத்தோடு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாண்டு கால ஆட்சியில் தொழிலாளர் நலத் துறை செயலிழந்து போய்விட்டது. இந்த மூன்று மாதங்களாகத்தான் எழுந்து நின்றிருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுதான் தூண்டுகோல் போட்டு அந்தத் துறையை எப்படிச் செயல்படுத்த வேண்டுமோ, அதைச் செயல்படுத்துவதற்கான முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும்,

நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வேகத்திலேயே போக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலை ஆய்வகத் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஐந்தாண்டு காலத்தில் தொழிற்சங்கத்தில் இருக்கக்கூடியவர்கள் யாராவது ஒரு புகார் அனுப்பிவிட்டால் அந்தத் தொழிற்சாலை ஆய்வகத்தில் பணியாற்றக்கூடிய Inspector – Implementation Authority அந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடம் காட்டிவிட்டு திரும்பி வந்துவிடுவார்கள். அந்தத் துறையின் செயல்பாடுதான் தொழில் தகராறுகளை அங்கே உருவாக்குவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிறது.

பிற்பகல் 1–20

எனவே, தொழிற்தகராறு எழுப்பி, தொழிலாளர் துறை சமரசப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணும் வழக்கம் அரிதாகிவிட்டது. அரிதினும், அரிதாக முத்தரப்பு ஒப்பந்தங்கள் ஏற்படுகின்றன. அவற்றிலும் பெரும்பாலானவை தனித் தொழிலாளியின் கணக்கை முடித்து வீட்டுக்கு அனுப்புபவையாகும். உலகமயமாக்கலின் பெயரால் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை வேடிக்கைப் பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாத துறையாகிவிட்டது என்று நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதையும்விட அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது தொழிற்சாலை ஆய்வகத் துறை. தொழிற்சட்ட நியதிகளை நிர்வாகங்கள் வெகு இயல்பாக மீறி வருகின்றன. இதுபற்றி ஆய்வகத் துறையில் புகார் கொடுக்கக்கூட தொழிற்சங்கங்கள் தயங்கும் அளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கின்றது.

தொழிலாளர் துறையில் பெரும் ஆள் பற்றாக்குறை உள்ளது. 2, 3 பணியாளர்களின் வேலைகள் ஒருவர்மீது சுமத்தப்படுகிறது. இதைப் போக்க வேண்டும்.

நல வாரியங்களில் உறுப்பினர் பதிவு. கட்டடத் தொழிலாளர், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான நல வாரியங்களில் உறுப்பினர்களைப் பதிவு செய்யும்போது கிராம நிருவாக அதிகாரியிடம் மனுவை அரசு அனுப்பி சரிபார்க்கும் எனக்



கூறப்பட்டது. ஆனால், வாங்கப்பட்ட மனு மாவட்ட ஆட்சியரால் பெறப்பட்டு, அது கிராம நிருவாக அதிகாரிக்குச் சென்று, சரிபார்க்கப்பட்டு, மீண்டும் பதிவு அதிகாரியிடம் திரும்பி வருவதற்கு பல மாத காலம் ஆகிறது. எனவே, கிராம நிருவாக அதிகாரியிடம் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனையைக் கடந்த ஆட்சி விதித்ததை இந்த ஆட்சி இரத்துசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களின் சம்பள மறு நிர்ணயம். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு சம்பள மறு நிர்ணயம் செய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க தனித் தீர்ப்பாயம் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் அமைக்கப்பட்டது. தமிழகத்தினுடைய வரலாற்றில் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது 1977 ஆம் ஆண்டில் ஊதிய உயர்வு கிடைக்கப்பெற்றது. அதற்குப் பின்னாலே 1984 ஆம் ஆண்டிலே ஊதிய உயர்வு கிடைக்கப்பெற்றது. அதற்குப் பின்னாலே அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஊதிய உயர்வு கிடைக்கப்பெற்றது. அதற்குப் பின்னால், 12 ஆண்டுக் காலம் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வே இல்லை.

தனித் தொழில் தீர்ப்பாயம் அமைத்தார்கள் அம்மா அவர்கள். அந்தத் தீர்ப்பாயம் இப்பொழுது என்ன ஆனது என்றே தெரியவில்லை. அந்தத் தீர்ப்பாயம் செயல்பட வேண்டும், அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைக்கப்பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் சம்பந்தமாக—வட நாட்டிலிருந்து நிறைய பேர் வருகிறார்கள். இரயில்வே ஸ்டேஷனில் பார்த்தால், மூட்டை, முடிச்சை வைத்துக்கொண்டு அவர்கள் யார், என்ன விவரம், ஒன்றும் நிதானமே இல்லாமல் இருக்கிறது. இப்படி அண்மைக் காலங்களில் வட மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமிழகத்திற்கு வரவழைக்கப்பட்டு வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். தமிழகத்திற்கான தலைமைச் செயலகத்தையே அரசு கட்டியபோது, அதில் ஒரு தமிழ்க் கட்டடத் தொழிலாளிகூட வேலைக்கு அனுமதிக்கப்படவில்லை என்பதை இந்த நாடே அறியும்.

இத்தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலியில் 12 மணி நேரம் வேலை வாங்கப்படுகிறார்கள். இவர்களைக்கொண்டு இடைத்தரகர்கள் ஏராளமாக சம்பாதிக்கக்கூடிய கொடூரமான சூழலைத் தடுக்க, புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தைக் கறாராக அமல் நடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வு பற்றி சொல்லிவிட்டேன். ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் (குறுக்கீடு) நீங்கள் சொல்வதற்கு முன்பு, சீக்கிரம் முடித்துவிடுகிறேன் ஒட்டுமொத்தமாக நம்முடைய 7 கோடி ஜனத் தொகையில் 2.79 கோடி தொழிலாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதில் அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை அதிகம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மாநிலத்தின் துரிதமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவது, Policy Note–ல் சொல்லப்பட்டிருக்கக்கூடியது, அருமையான வார்த்தை. மாநிலத்தின் துரிதமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை நிலைநிறுத்துவதில் தொழிலாளர் துறையின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தொழில் நல்லுறவுக்கு பொறுப்புணர்வும், திறமைமிக்கத் தொழிலாளர்களும், முற்போக்கான நடைமுறைகளைப் பின்பற்றும் நிருவாகமும், இன்றியமையாதவையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர் துறை செயலிழந்துவிட்டது என்று சொல்லலாம்.

தோட்டத் தொழிலாளர்களுடைய சட்டம் அமல் நடத்துவது சம்பந்தமாக முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களுடைய குடியிருப்புகள் குடியிருக்க லாயக்கற்றவையாக உள்ளன. குடியிருப்புகளைப் பழுதுபார்ப்பது என்பது இல்லை. எஸ்டேட் நிர்வாகத்திற்குச் சொந்தமான சாலைகள் மோசமான நிலையில் உள்ளன. பல ஆண்டுகளாகச் சாலைகள் பராமரிக்கப்படாமல் உள்ளன. போக்குவரத்து இதனால் பாதிக்கப்படுகிறது. தோட்டத் தொழிலாளர்களுடைய பாதுகாப்பு, உடை, குடிநீர், இலவச மருத்துவ வசதி ஆகியவை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மருத்துவ வசதி போதுமானதாக இல்லை. எல்லா விதமான நோய்களுக்கும் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. வால்பாறை அரசு மருத்துவமனையை



விரிவுபடுத்தி, தேவையான உபகரணங்கள், மருத்துவர்கள், செவிலியர்களை நியமனம் செய்தால், இது தவிர்க்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் கூடுவதே இல்லை. அதை முறைப்படுத்தி, செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** முடித்துவிடுகிறேன். சட்டம், விதிகளை அமல் நடத்துவது பற்றி ஆலோசனைக் குழு கூடுவதே இல்லை. இதை மாற்றியமைக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுடைய குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவிக்கப்பட்டது. அது மறுநிர்ணயம் செய்யப்பட வேண்டும். எனவே, குறைந்தபட்ச ஊதியம் அன்னியச் செலாவணியை இந்திய நாட்டிற்கு, தமிழகத்திற்கு உருவாக்கிக் கொடுக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்கு விலைவாசி உயர்வினை ஈடுகட்டும் வகையில் நாளொன்றுக்கு ரூபாய் 300 தினசரி சம்பளமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பீடித் தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர் முறைகளை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை எந்த அடிப்படையில் பாதுகாக்க வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு நிமிடம்.

பிற்பகல் 1–25

தமிழகத்தில் ஐந்து NTC கூட்டுறவு ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 18 ஆலைகளில் 13 ஆலைகளுக்கு மூடு விழா செய்து விட்டார்கள். ஐந்து ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஐந்து ஆலைகளையும், நல்ல முறையில் நவீனப்படுத்த வேண்டும்; விரிவுபடுத்திட வேண்டும். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்ட சேலம் கூட்டுறவு நூற்பாலை மற்றும் தூத்துக்குடியில் இருந்த கூட்டுறவு நூற்பாலைகளில், இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய கணக்குகள் இன்னும் முடிக்கப்படவில்லை.

[திரு. எம். ஆறுமுகம்] [2011 செப்டம்பர் 13

அந்த ஆலைகளைக்கூட எடுத்து நடத்த முடியுமா என்பதை தயவுசெய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை, கதர் மற்றும் கைத்தறி, துணி நூல் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று, என்னுடைய கருத்துகளையும் பதிவு செய்கிற ஒரு வாய்ப்பு அளித்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, தொழிலாளர் நலத் துறை என்பது நம்முடைய மாநிலத்தின் தொன்மையான துறைகளில் ஒன்று. 1920–லேயே பிரிட்டிஷ் பேரரசு இருந்தபோதே தொடங்கப்பட்ட ஒரு துறையாகும். தமிழகத்திலேயே இன்றைக்கு 100% தொழிலாளர்களில் 92% தொழிலாளர்கள் அமைப்புசாராத தொழிலாளர்களாக இருக்கிறார்கள். ஏறக்குறைய இரண்டு கோடியே 60 இலட்சம் பேர்கள் அமைப்புச் சாராத தொழிலாளர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தனி மனிதனை நெறிப்படுத்துவதிலும், சமூகத்தை நெறிப்படுத்துவதிலும் இந்த அமைப்புசாராத தொழிலாளர்களுடைய பணி மிகப் பெரும் அளவில் இருக்கிறது.

காலுக்குச் செருப்பு வேண்டுமானால், அந்தச் செருப்பைத் தைக்கிறவன் ஒரு இழிவான தொழிலைச் செய்யக்கூடியவனாய், துணியைச் சலவை செய்ய வேண்டுமானால், அந்தத் துணியை சலவைச் செய்கிறவன் ஒரு இழிவான தொழிலுக்குரியவனாய், மிருகங்களிலிருந்து வித்தியாசமாகக் காட்டுகிற வகையில் உங்கள் முடியைத் திருத்திக்கொள்ள வேண்டுமானால், அந்த முடியைத் திருத்துகிறவன் இழிவான தொழிலாளியாய், ஆக தனி மனிதனை நெறிப்படுத்துவதில் ஆகட்டும், ஊரை, உலகத்தைத் தூய்மைப்படுத்துகிற துப்புரவுப் பணி, மனிதன் இறந்தே போகிற நிலைமை வந்தாலும், அதை அடக்கம் செய்கிற, சுடுகாட்டுத் தொழிலிலே ஈடுபடுவதானாலும், . மிருகங்கள் இறந்தால், அதைக் கொண்டு போய் அடக்கம் செய்ய வேண்டுமானாலும், அவனை இழிதொழிலாளியாய்ப் பார்க்கிறோம் தனி மனிதனையும்,



2011 செப்டம்பர் 13] [முனைவர் செ.கு. தமிழரசன்]

சமூகத்தையும் நெறிப்படுத்துகிற, தூய்மைப்படுத்துகிற இந்தத் தொழில்கள் எல்லாம் இதுநாள் வரையிலே ஒரு சமூகமே செய்ய வேண்டுமென்கிற, அப்படிப்பட்ட நிர்பந்தத்தின் பேரில் ஒரு சில நேரங்களிலே தொழில், விஞ்ஞான உலகமாக வளர்ந்தாலும்கூட, அப்படிப்பட்ட நிர்பந்தங்களிலேயே நாம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறோம் என்பது நாம் கவலைப்படத்தக்க ஒன்று. இந்த நிலையில், அந்தத் தொழிலாளர்கள் குறித்து பேசுவதற்கு முன்னால், நான் ஒரு கருத்தை இன்றைக்கு இங்கே பதிவு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வது என் கடமையாக இருக்கிறது.

ஒரு தலித் இந்தியாவின் குடியரசுத் தலைவராகக்கூட வர முடியும், தலைமைச் செயலாளராகக்கூட வர முடியும், உயர் பதவியில்கூட வந்து விடமுடியும். ஆனால், கிராமப்புறங்களிலே மணியக்காரர்களாகக்கூட வந்துவிட முடியாத, அப்படிப்பட்ட ஒரு அவலம் இருந்தது. இதற்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 1980–லேயே ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்து, 3,000–க்கு மேற்பட்டவர்களை அன்று கிராம மணியக்காரர்களாக வருவதற்கான வழியை அன்றைக்குச் செய்தார்கள். அதற்குப் பிறகு, இன்றைக்குத் தேர்வாணயத்தின்மூலம் மீண்டும் அப்படிப்பட்ட ஒரு தேர்வு வருகிற நிலைமை வந்தபோது 1,107 பின்னடைவு வி.ஏ.ஓ.–கிராம நிருவாக அலுவலர்கள் பணி– தலித்துகளுக்குப் பங்கீடாக வரவேண்டிய பணிக்குத் தடை ஏற்பட்டது. அந்தத் தடையை இன்றைக்கு உடைத்தெறிந்து நம்முடைய தமிழக அரசு புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே இன்றைக்குத்தான் அந்தத் தீர்ப்பு வெளி வந்திருக்கிறது. 1,107 கிராம நிருவாக அலுவலர்கள் இன்றைக்கு மீண்டும் மிகப் பெரிய அளவிலே தமிழகத்தில் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். உயர் நீதிமன்றத்திலே அந்த வழக்கைத் துரிதமாக நடத்தி, தீர்வு கண்டிருக்கிற, விடை கண்டிருக்கிற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தர்ப்பத்திலே இரண்டு கோடி தலித்களின். . .

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 நாட்களுக்கு முன்பாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. நஞ்சப்பன் அவர்கள் பேசுகின்றபோதுகூட, ஏதோ நமது அரசு தடையாணை வாங்கியிருப்பதைப்போலப் பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இது தெரிந்தவுடன் உடனடியாக உயர் நீதிமன்றம் என்ன உத்தரவிடுகிறதோ அதற்குக் கட்டுப்படுகிறோம் என்ற அடிப்படையிலே கருத்து தெரிவித்து, நேற்றையதினம் தீர்ப்பு வந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் பேசுகின்றபோது 1,107 என்று சொன்னார்கள், அதை 1,077 என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1,107 என்பதை 1,077 என்று நான் திருத்திக்கொள்கிறேன். அதைத் திருத்தியே அவைக் குறிப்பிலே பதிவு செய்ய வேண்டுகிறேன்.

ஆக, அத்தகைய ஒரு சமூக மறுமலர்ச்சிக்கு இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வித்திட்டிருக்கிறார்கள் என்கிறபோது என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சிலவற்றையும் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். யாரிடம் எங்களுடைய கோரிக்கைகளை வைக்க வேண்டுமோ அவர்களிடம் இந்தக் கோரிக்கைகளை வைக்கிறபோதுதான் எங்களுக்குத் தீர்வு கிடைக்கிறது. இன்று இல்லாவிட்டாலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவரது நினைவிலே கொண்டு என்றைக்காவது ஒரு விடிவை அவர்களால்தான் உருவாக்க முடியும் என்பதாலேதான் இதுபோன்ற சிலவற்றை நான் இந்தப் பேரவையிலே சுட்டிக்காட்டுவதிலே பெருமைகொள்கிறேன்.

தனியார் துறையிலே இட ஒதுக்கீடு என்பது இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற 25 கோடி தாழ்த்தப்பட்ட, தலித் மக்களுடைய ஒரு தலையாய பிரச்சினையாக இருந்து



கொண்டிருக்கிறது. 7 ஆண்டுகளுக்கு முன்னாலே இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, ஒரு கூட்டணி வைத்து பாராளுமன்றத் தேர்தலைச் சந்தித்தபோது, அந்தத் தேர்தல் காலத்திலே அவர்கள் ஒரு வாக்குறுதியை அளித்தார்கள். அந்த வாக்குறுதிக்கு C.M.P. (Common Minimum Programme), குறைந்தபட்ச செயல் திட்டம் என்ற ஒரு பெயரை வைத்து 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தத் தனியார் துறையிலே இட ஒதுக்கீடு என்பதை அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்மூலம் கட்டாயமாக நிறைவேற்றுவோம்' என்று சொல்லி, அதற்குப் பிறகும் ஒரு பாராளுமன்றத் தேர்தல் வந்து, ஏறக்குறைய 7 ஆண்டு காலமாக மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரஸ் தலைமையிலான அந்தக் கூட்டணி ஆட்சி, அவர்களுடைய தேர்தல் கால வாக்குறுதியைக் கிடப்பிலே போட்டுவிட்டது. அதுகுறித்து வாய்ப்பு இருந்தும்கூட, பிரதமரோ, மற்றவர்களோ இதுவரையிலே சொல்வது இல்லை. நாடாளுமன்றத்திலே வற்புறுத்தியபோதும், நாடாளுமன்றத்திலே சில பேர் தனி நபர் தீர்மானங்களைக் கொண்டு வந்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோதும்கூட, அது ஒரு கேட்பாரற்ற நிலையில் தேர்தல் காலத்து வாக்குறுதியாக, அதற்குப் பிறகு ஒரு கேட்பாரற்ற பொருளாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, இன்றைக்கு மென்பொருள் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இன்றைக்குக் கணினித் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. எல்லாமே கணினியுகமாக வந்து கொண்டிருக்கிறது. எல்லாமே தனியார்மயமாக பாதிக்கு மேலே போய்விட்டது. தனியார் தொழில்தான் இன்றைக்கு மேலோங்கி நிற்கிறது. ஆகவே, அவற்றிலே இட ஒதுக்கீடு இல்லாத வகையிலே ஒடுக்கப்பட்ட மக்கள், நலிந்த மக்கள், தாழ்ந்த மக்கள் வேலைவாய்ப்பு பெற முடியாத வகையிலே, அப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தனியார் துறையிலே இட ஒதுக்கீடு குறித்து நீங்கள் பாராளுமன்றத்திலேயே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதைச் சொல்லி, அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை, இந்தியாவில் முன்னுதாரணமாக இருக்கிற முதலமைச்சராகிய நீங்கள்தான் அதை நடைமுறைப்படுத்துவதற்கு, தொடக்க நபராக இருந்து தொடங்கி வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

செருப்பு தைக்கும் தொழிலிலே ஈடுபடுகிறவர்கள் பிளாட்பாரங்களிலேதான் அந்தத் தொழிலை நடத்த முடிகிற ஒரு சூழல் இருக்கிறது. அதிலே குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களிலேயே, மிக, மிக ஒடுக்கப்பட்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட சமூகம்தான் இந்தத் தொழிலிலே தமிழகம் முழுவதிலும் ஈடுபட்டிருக்கிறது. நகர்ப்புறங்களிலே பிளாட்பாரங்களிலேதான் அவர்கள் வாழ்வே தொடங்கி, அஸ்தமனமாகிவிடுகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே மாநகரங்களானாலும், நகரங்களானாலும் செருப்பு தைக்கிற தொழிலாளர்களுக்காக அவர்களுக்குத் தனியாக துறையின் வழியாக சிறிய குடில்கள் அமைத்துத் தருவதற்கான வழியும், வசதியும் இருந்தது. கடந்த கால ஆட்சியில் சிங்காரச் சென்னை என்கிற பெயரிலே அதை முழுக்க, முழுக்க அழித்தொழித்து, இன்றைக்கு அவர்கள் வெயிலிலும், மழையிலும், குளிரிலும் தவித்துக் கொண்டு தொழிலை நடத்த வேண்டிய ஒரு நிலைமை உள்ளது. ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஏழையெளிய, செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்குத் துணை நிற்கிறவகையிலே ஏதோ ஒரு உதவியோடு சில முக்கிய பகுதிகளிலே, ஒதுக்கப்பட்ட இடங்களிலே, அவர்கள் கடை வைத்துக்கொள்வதற்கு அரசாங்கமே நிதியுதவியோடு, தொழில் உபகரணங்களோடு கடை வைத்துத் தருகிற அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அமல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–35*

துப்புரவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே மாநகரத்திலும் (மணியடிக்கப்பெற்றது) நகராட்சிகளிலும் ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள் உள்ளாட்சித் துறையிலே பணியாற்றுகிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தர ஊழியர்களாக வைக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். ஐம்பதிற்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள் எங்கெல்லாம் பணியாற்றுகிறார்களோ அவர்கள் எல்லாம் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்கிற ஒரு சட்டம் இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், உரையை முடியுங்கள்.



**முனைவர் செ.கு. தமிழரசன்:** முடித்து விடுகிறேன். ஆனால் அந்தச் சட்டத்தை 1989–லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது சென்னை மாநகராட்சி நீங்கலாக என்று முதலிலே ஒரு திருத்தம் கொண்டு வந்து, படிப்படியாக எல்லா மாநகராட்சிகளிலும் அந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்து, நகராட்சிகளிலே அந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்து இன்றைக்குத் துப்புரவுத் தொழில் என்பது ஓனிக்ஸ் நிறுவனத்திற்கும் அல்லது நீல் மெட்டல் நிறுவனத்திற்கும், சிங்கப்பூரில் மிகப் பெரிய தொழிலில் ஈடுபட்டிருக்கிற அந்தப் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கிற ஒரு தொழிலாக, வியாபாரத் தொழிலாக மாறிவிட்டது. ஆனால், சிங்கப்பூரிலிருந்தோ அல்லது அமெரிக்காவிலிருந்தோ துப்புரவுத் தொழிலில் பணியாற்றுவதற்கு வேலையாட்கள் வருவதில்லை. இதே துப்புரவுத் தொழிலாளர்கள்தான், இதே ஊழியர்கள்தான், ஆனால் அதை நிருவாகம் செய்கிற அந்தத் தன்மை மாறிப் போய்விடுகிறது. எனவே, இந்தத் தொழிலாளர்கள் நலத் துறையிலே துப்புரவுப் பணியாளர்கள் மீண்டும் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் எங்கேயெல்லாம் பணியாற்றுகிறார்களோ, அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்கிற இந்தச் சட்டத்தை (மணியடிக்கப்பெற்றது) மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் (குறுக்கீடு) முடிப்பது ஒரு நிமிடத்திலா?, ஒரு செகண்டிலேயா, (குறுக்கீடு)

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அதைப்போலவே, சுடுகாட்டிலே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்களே, அதைவிட ஒரு கொடுமையான, மன உறுதிமிக்க தொழில் வேறு எங்கேயும், வேறு எந்தத் தொழிலும் இருக்க முடியாது. பிணங்களோடு பிணங்களாய் வாழ்கிற அப்படிப்பட்ட ஒரு அவலம். மாநகராட்சிகளிலோ அல்லது நகராட்சிகளிலோ, அந்தத் தொழிலையும் ஒப்பந்த அடிப்படையிலே இல்லாமல், ஒப்பந்தத் தொழிலாளர்களாக இல்லாமல், அவர்கள் நிரந்தரமான, பணி நிரந்தரம் பெற்ற Permanent Labourers என்கிற வகையிலே அவர்களையும் பணி நிரந்தரத் தொழிலாளர்களாக, அவர்களும் மிகக் குறைந்த அளவுக்கு இரண்டாயிரத்திற்கும் அல்லது

மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நம்முடைய மாநில அரசில் இருக்க முடியும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், ஒரு செகண்ட் என்றீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) Please sit down, Mr. Tamilarasan.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** எல்லாத் துறைகளிலும் ஆதி திராவிடர் நல ஊழியர் சங்கங்கள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மலைவாழ் ஊழியர் நலச் சங்கங்கள் இருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் அதற்காக அரசாங்கத்திலே ஒரு தனிப்பிரிவு இருக்கிறது. மத்திய அரசிலே ஒரு தனித் துறை இருக்கிறது. எல்லா அலுவலகங்களிலும் அதற்காக ஒரு குறிப்பிட்ட Liaison Officer ஒருவர் இருப்பார். அவர்களுடைய நலன்களைக் காப்பதற்காக, அவர்களுடைய உரிமைகளைப் பேணுவதற்காக Liaison Officer என்று ஒருவரைப் போடுகிறோம். ஆனால், இந்தச் சங்கங்களை மட்டும் நிருவாகங்கள் அங்கீகரிக்க மறுக்கின்றன. ஆகவே, அந்த நல ஊழியர் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையோடு, வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கும் உதவித் தொகையை உயர்த்தி வழங்கிய மாண்புமிகு முதல்வருக்கு என்னுடைய பாராட்டுதல்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். குமரி மாவட்டத்தில் அதிகப்படியான நெசவாளர்கள் தொடர்ந்து நெசவுத் தொழிலையே நம்பி தொழில் செய்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு நெசவுத் தொழிலுக்குத் தேவையான சிட்டா நூல் மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டம், திருப்புவனம் பட்டுக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பட்டு நூல் விநியோகம் குறைவாக உள்ளது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய, மாநில அரசுகளின் தள்ளுபடிக்கான உதவித்தொகை



இன்னும் கிடைக்கப் பெறவில்லை. எனவே, அரசு தக்க நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி நூல், பட்டு நூல், விலையேற்றதால் கைத்தறி நெசவாளர்கள் செய்யும் நெசவுத் தொழில் மிகவும் நலிவடைந்து விட்டது. இதனால் நெசவுத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற ஓட்டல்களில் சர்வர்களாக, கிளீனர்களாக, டாஸ்மாக் பாரில் எடுபிடி வேலையாட்களாக கட்டட சித்தாள் வேலையெனப் பல வேலைகளில் ஈடுபட்டு, ஜீவனம் நடத்தி வருகின்றனர்.

பிற்பகல் 1–40

கடந்த ஐந்து ஆண்டுகளில் கோராப் பட்டு, ஜரிகை போன்ற மூலப்பொருள்களின் கடுமையான விலையேற்றம் மற்றும் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட 11 இரகங்களில் தயாரிக்கப்படும் பட்டுப் புடவைகளை விசைத்தறியாளர்கள் சட்டவிரோதமாகத் தயாரித்து விற்பதன் காரணமாக, பழமை வாய்ந்த, புராதனமான பட்டுக் கைத்தறி நெசவுத் தொழில் பாதிப்படைந்து கைத்தறி நெசவாளர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு அல்லல்படுகின்றனர்.

கடந்த காலங்களில் கைத்தறிப் பட்டு நூல் விலையேற்றத்தால் நெசவுத் தொழில் நலிவடைந்ததால், வங்கிகளில் கடன் வாங்கி பட்டுப் புடவைத் தயாரித்து தொழில் செய்த நெசவாளர்கள், வங்கிகளில் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் தவிக்கின்றனர். இதற்காக மத்திய அரசு நெசவாளர்கள் கடனை இரத்து செய்வதற்காக ரூ.3,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் தொகை நாடு முழுவதும் உள்ள 15,000 கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கும், 3 இலட்சம் பிற கைத்தறி நெசவாளர்களுக்கும் கடன் தள்ளுபடியாகச் சென்றுசேர வேண்டுமென அறிவித்துள்ளது. இவற்றுள் சுமார் ரூ.600/– கோடி தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்தத் தொகை--பிற நெசவாளர்கள்--அரசு வங்கியில் நெசவுத் தொழிலுக்காக அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை கடன் வாங்கியுள்ள சிறு நெசவாளர்களுக்கு அசலும், வட்டியுமாக சேர்த்து முழுமையாக தள்ளுபடி செய்ய, அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தத் தொகை இன்னும் மத்திய அரசால் ஒதுக்கப்படவில்லை. மாநில அரசு அதிலே 600 கோடி ரூபாய் கோரியுள்ளது. அந்தத் தொகை வந்தவுடன் அப்படி பாதிக்கப்பட்டிருக்கின்ற நெசவாளர்களுக்கு நிச்சயமாக ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு கைத்தறி நெசவாளர்களுக்குக் கடன் தள்ளுபடி செய்யும்விதமாக பட்ஜெட்டில் அறிவித்துள்ளதைப் போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் அல்லாத பிற ஏழை கைத்தறி நெசவாளர்கள், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் நெசவுத் தொழிலுக்காக வாங்கியுள்ள அனைத்துக் கடன்களையும், அசலும் வட்டியுமாக தள்ளுபடி செய்து, அந்த நெசவாளர் குடும்பங்களை இன்னலிலிருந்து காப்பாற்ற அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியில் மிகவும் பழமைவாய்ந்த 'கன்யா ஸ்பின்' என்கின்ற அரசு நூற்பாலையை நவீனப்படுத்துவதற்கு ரூ.18 கோடி கேட்டு, அரசுக்கும், N.C.D.C. வங்கிக்கும் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசு, N.C.D.C. வங்கிக்கு ஈட்டுறுதி வழங்கி, 'கன்யா ஸ்பின்' ஆலைக்கு ரூ.18 கோடி கடன் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்நிலையில், இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து பயன்தர இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆகலாம். எனவே, நலிந்த நிலையில் உள்ள ஆலையைக் காக்கவும், தொழிலாளர்கள் நலம் பாதுகாக்கவும் 'கன்யா ஸ்பின்' ஆலைக்கு இடைக்கால நிவாரணமாக ரூ.3 கோடி வழங்க தமிழக அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு அரசு வழங்கும் அனைத்துச் சலுகைகளும், உதவிகளும் தனியார் பட்டுக் கைத்தறி ஏழை நெசவாளர்களுக்கும் வழங்க வேண்டுகிறேன். மேலும், புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள compressor உபகரணத்தைத் தனியார் சிறு நெசவாளர்களுக்கும் அரசு மானியத்துடன் வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மாண்பையும், பெருமைகளையும் கட்டிக் காத்து, பணியாற்றி, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் எம்.எல்.ஏ.–க்கள் தமிழகத்தின் தலைநகரம், சென்னைக்கு வேலை விஷயமாக வரும்போது அவர்கள் தங்குவதற்கு அரசு இல்லங்கள் இல்லை. வெளியே தங்கும் விடுதிகளில் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு இந்த மானியக் கோரிக்கையை எடுக்கப் போகிறோம். நீங்கள் நாளை சட்டசபைக்கு வரப்போவதில்லையா? (சிரிப்பு)

**திருமதி எஸ். விஜயதரணி:** அந்த டிமாண்டில் நாளைக்குப் பேச எனக்கு வாய்ப்புக் கிடைக்காது என நினைக்கிறேன். அதனாலே அட்வான்ஸாக சொல்லிவிட்டேன். அவர்களுக்குத் தங்கும் இடவசதி அமைத்துத் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழில் செய்யும் நெசவாளர்கள் நலன் கருதி கைத்தறிக்குத் தனியாக இயக்குநர் அலுவலகமும், விசைத்தறிக்குத் தனியாக இயக்குநர் அலுவலகமும் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், தங்களது உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இறுதியாக ஒரே ஒரு பாயின்ட் சொல்லிவிடுகிறேன். முந்திரி ஆலைகளில் அதிகமாக பெண்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதால், அவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கும் வகையில் அரசு நிருவாகம் தலையிட்டு, நிறைவேற்றிட வேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.—வின் ஒன்றரை கோடி உறுப்பினர்களின் உயிர் துடிப்பாயும், திக்கெட்டும் பரவிக் கிடக்கும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் நலன் காக்கும் ஒரே தலைவியாய், அ.தி.மு.க. என்ற இமய நிகர் இயக்கத்தின் நிரந்தர கழகப் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்தம் வாழ்வு சிறப்புற, இப்புவிமீது ஆண்டவனின் அருளால் வந்துதித்த உத்தமத் தாய், கடையேழு வள்ளல்களையடுத்து எட்டாவது வள்ளலாக வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் புடம் போட்டு எடுக்கப்பட்ட ஒரே வாரிசு, ஒப்பற்ற வாரிசு, ஒன்பதாவது வள்ளல், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாத மலர் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்டையாக விளங்கும், பொள்ளாச்சி தொகுதியில், மெட்டுபாவி என்னும் கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, ஆரம்பம் முதல் மெட்டுபாவி கிளைக் கழகச் செயலாளராகவும், 1989 முதல் அம்மா பேரவை ஒன்றியத் தலைவராகவும், 1995 முதல் எம்.ஜி.ஆர். இளைஞரணி ஒன்றியச் செயலாளராகவும், 2007 முதல் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் மற்றும்





1996 முதல் தொடர்ந்து மூன்று முறை மெட்டுபாவி ஊராட்சி மன்றத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளைத் தந்து, கழகப் பணியாற்றும் நல்வாய்ப்புகளை அளித்து, 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் பொள்ளாச்சி தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி, சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சுடரொளியாய் வந்து பிரச்சாரம் செய்து வெற்றி பெற வைத்து, இந்தச் சரித்திர புகழ்மிக்க சபையில் பேச வாய்ப்பளித்ததோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிருவாகக் குழு உறுப்பினராகவும் நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாத மலரடியில் எனது கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், இரவு, பகல் பாராமல், எந்நேரமும் உழைத்த கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வரவேண்டும் என்ற நோக்கத்தோடு, இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து மகத்தான வெற்றிதனைக் கொடுத்த பொள்ளாச்சி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஐந்தாண்டு காலம் தி.மு.க. என்னும் தீய சக்தியின், திருட்டுக் கும்பலின் முரட்டுக் கரங்களில் சிக்கியிருந்த தமிழகத்தில், அரிசிக் கடத்தல், ஆள் கடத்தல், கட்டுக்கடங்காத விலைவாசி ஏற்றம், அத்தனைத் தரப்பு மக்களையும் புரட்டிப்போட்ட மின்வெட்டு, திருட்டு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு என சட்டம்–ஒழுங்கைக் குட்டிச்சுவராக்கி, நிருவாகத்தின் அத்தனை துறைகளையும் சீரழித்து, சின்னாபின்னமாக்கி, ஒட்டுமொத்தத் தமிழகத்தின் வளங்களையெல்லாம், வாரிச் சுருட்டி தங்களை வளப்படுத்தி, தமிழ்நாட்டைக் கூறுபோட்டுக் கொடுத்து, தன் வாரிசுகளைக் குறுநில மன்னர்களாக்க முயற்சித்தார் கருணாநிதி.

உலகையே உலுக்கிப்போட்ட யாரும் செய்யாத, இனிமேலும் செய்ய முடியாத 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல்மூலம் உலகப் பணக்காரர் வரிசையில் முதலிடம் பிடிக்க முயற்சித்து, முட்டி ஒடிந்து முக்காடு போட்டது கருணாநிதி அவர்களின் கொள்ளைக் கும்பல். அப்படிக் கொள்ளையடித்த அந்த நோட்டை கொடுத்து, ஓட்டை வாங்கி

மீண்டும் ஆட்சியை அறுவடை செய்ய ஆசைப்பட்டனர். ஆனால், ஒட்டுமொத்தத் தமிழ்நாடும், ஓரணியில் நின்று வெள்ளையர்களிடமிருந்து நாட்டை மீட்ட நல்லோர் அனைவரும் மறைந்துவிட்டனர் தாயே, இந்தக் கொள்ளையர்களிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து தாருங்கள், தாருங்கள் என்று மூன்றாவது முறையாக மாண்புமிகு அம்மா அவர்களை முதலமைச்சராக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக மக்கள் எந்த நோக்கத்தை எதிர்பார்த்து முதலமைச்சராக்கினார்களோ, அந்த நோக்கங்கள் அத்தனையும் நிறைவேறுகின்ற விதத்திலும், திட்டங்கள் நிறைவேற்றி ஆய்ந்து, அறிந்து, தெளிந்து, வகையறிந்து, தொகையறிந்து, அதுவரும் வழியறிந்து, எதிர்பாராத எத்தனையோ ஏற்றம் தந்து, ஏராளமான இலவச திட்டங்களுடன் மனிதவள மேம்பாடும், தொழிற்துறையில் புரட்சியும் அத்தனை துறைகளிலும் புத்துணர்ச்சி ஊட்டி மக்கள் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைத்துள்ளீர்கள் தாயே.

உள்ளபடியே எதிரியும், ஊசிமுனையளவு உள்ளே நுழைந்து வாதம் செய்ய வழியில்லாமல், அத்தனையும் நல்ல திட்டங்கள் ஆயிற்றே என்று பாராட்ட மனமில்லாமல், விவாதம் வரும்போது தங்கள் தலைவர்களின் தரம்கெட்ட தப்பான செயலுக்கு விளக்கம் கொடுக்க வழியே இல்லாமல் விழி பிதுங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் முன்னால் அமர்ந்து முகம் காட்ட முடியாமல், வெட்கித் தலைகுனிந்து வேகமாக ஓடுகிறார்கள். அவர்கள் தலைவர்களோ, ஓடி ஒளிவதற்குத் தகுந்த இடமில்லாமல், காலதேவனின் கட்டளையால், சிறைச்சாலையை நோக்கிச் சென்றவண்ணம் இருக்கிறார்கள். தமிழக மக்களால் ஒதுக்கப்பட்டு, மறக்கப்பட்டு, மறைந்து வாழும் திருடர் கூட்டம் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அடுக்கடுக்கான, ஆக்கபூர்வமான சீரிய திட்டங்கள் •பற்றி கைத்தறி மற்றும் துணி நூல், கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றி சொல்லி, என் உரையை துவங்குகிறேன் தாயே.



பிற்பகல் 1—50

கூட்டுறவு அமைப்பிலும், முறைசாரா பிரிவுகளிலும் உள்ள நெசவாளர்களை நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து ஓய்வூதியம், கல்வி, மருத்துவ உதவி போன்றவற்றை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அரும்பாடுபட்டு வருகின்றது. தனி நபர் ஓய்வூதியமாக ரூ.450/—, குடும்ப ஓய்வூதியமாக ரூ.550/— உயர்த்தப்பட்டு இன்றையதினம் ரூ.1000—மாக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வழங்கி வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து சுரண்டிப் பிழைத்த சுயநலமிக்க தி.மு.க ஆட்சியில் சுருண்டு கிடந்த நெசவாளர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றனர். இதுவரை 1,12,749 நெசவாளர்களுக்கு 24.56 கோடி ரூபாய் அளவில் நலத்திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்தில் பேருவகையுடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, வரும் பொங்கல் தினத்தன்று ஏழையெளியோருக்கு வழங்கப்படும் வேஷ்டி, சேலைகள் நலிவுற்று இருக்கும் கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கம்மூலம் தயாரித்து வழங்க உத்தரவிட்டதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களை நெசவாளர் குடும்பங்கள் வாழ்த்தி, வணங்கி, போற்றிப் பாராட்டுகின்றனர்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் 1994 ஆம் ஆண்டு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, இதுவரை பல்வேறு வகையான தொழிலாளர்களுக்காக 34 நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 17 நல வாரியங்கள் அமைப்புச் சாராத் தொழிலாளர் நலத் துறை நிருவகித்து வருகின்றது. இந்த 17 நல வாரியங்களில் 51.37 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு 13.85 இலட்சம் பயனாளிகளுக்குக் கல்வி, ஓய்வூதியம் விபத்து போன்றவற்றிற்காக 356.59 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் போற்றுதலுக்குரிய திட்டங்கள் ஆகும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திருப்பூர் பின்னலாடைத் துறை தொழில் பாதிக்கப்பட்டது குறித்து அலசி ஆராய்ந்து, அம்மா அவர்களின் தலைமையில் ரூ.200 கோடியை சாயப்பட்டறைகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கியும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக 18.38 கோடி ரூபாய் வழங்கியும், பின்னலாடைத் தொழிலுக்குப் புத்துயிர் கொடுத்துள்ளார்கள்.

இதன்மூலம் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரியும் தொழிலாளர் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்களை மனமுவந்து பாராட்டுகிறார்கள். செய்யும் தொழில் யாவற்றிலும் சீர்தூக்கிப் பார்க்கின்றபோது நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்ற வாக்கிற்கிணங்க மனிதனின் வாழ்வில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கும் துணியின்மேல் விதிக்கப்பட்ட மதிப்புக்கூட்டு வரியை நீக்கி ஏழை மக்களின் வாட்டம் போக்கியுள்ளார்கள். இதன்மூலம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகி எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற அடிப்படையில் கைத்தறியும், தொழிலாளர்களின் வேலைவாய்ப்பையும் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிபடுத்தியிருக்கின்றார்கள்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண ஒப்பற்ற ஆட்சி புரிகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், பொள்ளாச்சி தொகுதி மக்களின் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் கொடுத்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினை முதற்கண் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொள்ளாச்சி நகரில் இயங்கி வரும் அரசு மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனையில் உடுமலை, வால்பாறை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு ஆகிய நான்கு தொகுதிகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள். ஆனால், அந்த மருத்துவமனைக்குப் போதுமான உள் கட்டமைப்பு வசதிகளும், இடவசதிகளும், போதுமான மருத்துவர்களும் இல்லாமல் நோயாளிகள் மிகவும் அவதிக்குள்ளாகி வருகிறார்கள்.

மருத்துவமனைக்கு அருகில் இயங்கி வந்த அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. அதேபோல், பாலகோபாலபுரம் வீதியில் இயங்கி வந்த நடுநிலைப் பள்ளி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

மேற்படி, இரண்டு பள்ளிகளுக்கான இடங்களும் பொது மருத்துவமனையை ஒட்டி காலியாக இருப்பதால், நகராட்சிக்குச்





சொந்தமான காலியான அந்த இடங்களை மருத்துவமனைக்குப் பெற்று 500 படுக்கைகள் கொண்ட அனைத்து ஆய்வுக்கூடங்களுடன் கூடிய மருத்துவமனையாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என்னுடைய ஒட்டுமொத்தத் தொகுதியினுடைய கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன்.

பொள்ளாச்சி மரபேட்டை பள்ளத்தில் சுமார் 5 கி.மீ. தூரத்திற்கு எட்டு வார்டுகளில் 20 ஆயிரம் பேர் இருபுறமும் வசித்து வருகின்றனர். கடந்த 5 ஆண்டுகளாக தி.மு.க ஆட்சிக் காலத்தில் சுத்தம் செய்யப்படாத, தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீர் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கினால், கரையோரங்களில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து உணவுப் பொருட்கள் மற்றும் பண்ட பாத்திரங்களை அடித்து சென்றுவிடுகிறது. மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வரும் அம்மக்களுக்கு சாக்கடையைத் தூர் வாரி தாழ்வாக இருக்கும் குடியிருப்புகளுக்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்துவேண்டுகிறேன்.

போதுமான இடமிருந்தும் பொள்ளாச்சி நகரில் திசைகளுக்கு ஒன்றாக இயங்கி வரும் நீதிமன்றங்களை ஒருங்கிணைத்து, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்து பொதுமக்களின் சிரமத்தைக் குறைக்க மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

பொள்ளாச்சி தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியையும் மற்றும் ஒரு பொறியியல் கல்லூரியையும் அமைக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் 25 ஆண்டுகால கனவாக, கோரிக்கையாக இருந்து வருகிறது. அரசுக் கல்லூரிகளுக்குச் செல்ல 35 கி.மீ. உடுமலைக்கும், 45 கி.மீ. கோவைக்கும் சென்று கற்கவேண்டிய சிரமத்திற்கு ஏழை மாணவர்கள் ஆளாகிறார்கள். ஏழையெளிய மாணவர்களின் நலன் கருதி அம்மா அவர்கள் அருள்கூர்ந்து நகராட்சிக்குச் சொந்தமான போதிய இடம் பொள்ளாச்சி—கோவை பிரதான சாலையில் உள்ளதால், இக்கோரிக்கையைப் பரிசீலித்து அருள்கூர்ந்து நிறைவேற்றித் தரவேண்டுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

பொள்ளாச்சி நகரத்திற்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். பொள்ளாச்சி நகரத்தில் மிகவும் அடர்வான போக்குவரத்தினால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. வால்பாறையிலிருந்து பொள்ளாச்சி வழித்தடம், கேரளாவிலிருந்து பொள்ளாச்சி வழித்தடம், திண்டுக்கல்—பழனி வழித்தடம், திருப்பூர்—பொள்ளாச்சி வழித்தடம், கோவை—பொள்ளாச்சி வழித்தடம் ஆகிய மேற்சொன்ன வழித்தடங்களில் வரும் வாகனங்கள் நகரத்துக்குள் செல்லாமல் புறவழிச் சாலை ஒன்றை அமைத்து பொள்ளாச்சி நகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் செய்து தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

அம்பராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்தகால ஆட்சியில் துவங்கி செயல்பட்ட ஒரே காரணத்தினால், கடந்த 5 ஆண்டுகால சுயநல தி.மு.க. ஆட்சியில் பராமரிக்கப்படாமல், தண்ணீர் குழாய்கள் உடைந்து, அடைப்பு ஏற்பட்டு மாதக்கணக்கில் தண்ணீர் வருவதில்லை.

இந்தப் பிரச்சினையைச் சென்றமிடமெல்லாம் பொதுமக்கள் கோரிக்கையாக வைப்பதால், பொள்ளாச்சி தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் ஒரே சீரான குடிநீர் விநியோகம் அனைவருக்கும் கிடைக்க ஆவன செய்ய மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

மழைக்காலங்களில் நொய்யலாற்று மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வரும் மழைநீர் ராஜவாய்க்கால்மூலம் ஒட்டர்பாளையம் ஏரியைச் சென்றடைந்து, அங்கேயிருக்கும் கழிவு நீருடன் கலந்து அப்பகுதி குடியிருப்புகளில் புகுந்து மாசுபடுத்தி மீண்டும் நொய்யலுக்கே சென்று வீணாகிறது. அதில் ஒட்டர்பாளையம் ஏரியிலிருந்து இடையர்பாளையம் வரை உள்ள ஓடைப் புறம்போக்கில் கால்வாய் வெட்டி, குறைந்த செலவில் அந்த நீரை கோதவாடி குளத்திற்குத் திருப்பி விடுவதன்மூலம் தேவம்பாடிகுளம், புலிப்பாறை அணை போன்றவை நிரம்புவதுடன் அந்த ஓடைப் புறம்போக்கில் உள்ள 25 தடுப்பணைகள் நிரம்பி மழைநீரை நம்பியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாயம் செழிப்படையும், சூலூர், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு ஆகிய பகுதிகளில் குடிநீர் ஆதாரம் பெருகி குடிநீர்ப் பிரச்சினைத்



தீருவதுடன் நிலத்தடி நீர் உயர்வதன்மூலம் வறட்சியையும் தடுக்கலாம்.

எனவே, இந்தக் குளத்திற்குத் தண்ணீரை திருப்பி ஒட்டர்பாளையம் ஏரியிலிருந்து கோதவாடி குளம் செல்வதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பி.ஏ.பி. ஆயக்கட்டுப் பகுதியில் காற்றாலைக்கும், தொழிற் சாலைகளுக்கும் மற்றும் வீட்டு மனைகளுக்கும் விற்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமிகளை இனங்கண்டு ஆயக்கட்டிலிருந்து நீக்கி அதற்கு சமமாக ஏற்கெனவே ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு மதிப்பீடு பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி நிறைவேற்றப்படாமல், விடுபட்ட இடங்களை ஆயக்கட்டில் சேர்த்து பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

விவசாயிகள் மிகுந்த பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் மற்றும் கிணத்துக்கடவு ஒன்றியத்தில் தக்காளி பயிரிட்டு விலை கட்டுபடியாகாத காலங்களில் ரோட்டில் கொட்டியும், அப்படியே பூமியில் அறுவடை செய்யாமல் விடுவதன்மூலமும் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு பொள்ளாச்சி பகுதியில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் உள்ள 39 ஊராட்சிகளையும், கிணத்துக்கடவு ஒன்றியத்தில் உள்ள 34 ஊராட்சிகளையும் மூன்றாகப் பிரித்து ஒரு புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்கித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

பொள்ளாச்சி தாலுகா 131 வருவாய் கிராமங்களைக் கொண்ட தமிழகத்திலேயே பெரிய தாலுகாவாக இருந்ததை மூன்று பிர்க்காக்களைக் கொண்ட கிணத்துக்கடவு தாலுகாவாகப் பிரித்து மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளீர்கள். ஆனால், தற்போதும் பொள்ளாச்சி தாலுகா 97 வருவாய் கிராமங்களைக் கொண்டு தமிழகத்தில் பெரிய தாலுகாவாக இன்றும் திகழ்ந்து வருகிறது. மார்ச்சிநாயக்கன்பாளையம் பிர்க்கா, கோட்டூர் பிர்க்கா

[திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி] [2011 செப்டம்பர் 13

ஆகியவற்றையும் பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில் உள்ள சில வருவாய் கிராமங்களையும் சேர்த்து ஆனைமலையைத் தலைமையிடமாகக்கொண்டு புதிய ஒரு தாலுகாவாக அறிவித்து பொதுமக்களின் நலன் காத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

ஆனைமலை–நல்லாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதாக அம்மா அவர்கள் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அறிவித்தீர்கள். அதனடிப்படையில், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் பி.ஏ.பி. ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் தண்ணீர் கிடைக்க ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு அத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தித் தர தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

பொள்ளாச்சி தொகுதி, சூலூர் மற்றும் பல்லடம் பகுதிகளில் கடுமையான வறட்சியின் காரணமாக, விவசாயம் செய்யமுடியாத நிலங்களில் கோழிப்பண்ணைகள் அமைத்து கோழி வளர்த்து வருகின்றனர். விவசாய மின்னிணைப்பின்மூலம் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து கோழிபண்ணைக்குப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருப்பதால் விவசாயம் சார்ந்த கோழி வளர்ப்போருக்கு மேற்படி விவசாய மின்னிணைப்பிலிருந்து தண்ணீர் எடுத்து பயன்படுத்த ஆவன செய்யுமாறு பணிவுடன் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னை நகரமான பொள்ளாச்சி தொகுதியில் கொப்பரைத் தேங்காய் பருப்பிற்கான ஆதார விலை கிலோவிற்கு ரூ.44.50 என்று இருப்பதை அதிகப்படுத்தி ஆதரவு விலையை உயர்த்திக் கொடுக்கவும், சூரிய ஒளியில் தேங்காய் பருப்பைக் காய வைக்கும் மையங்கள் போதாத காரணத்தால், தேங்காய் பருப்பைக் காய வைக்க அரசு சார்பில் உலர்களங்கள் ஏற்படுத்தித்தரவும், தென்னையை தோட்டக்கலைத் துறையில் சேர்க்கவும் ஆவன செய்ய மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி தொகுதிக்குட்பட்ட சேரிபாளையம், வடசித்தூர், காரச்சேரி, ஜாக்கார்பாளையம், நெகமம், வடக்குகாடு. புரவிபாளையம், காட்டம்பட்டி, கிணத்துக்கடவு போன்ற வழித்தடங்களில் பள்ளி நேரங்களில் மாணவ, மாணவிகளின் நலன் கருதி சிறப்புப் பேருந்துகள் இயக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2011 செப்டம்பர் 13] [திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி]

நெகமம் காவல் நிலைய எல்லை அதிகமாக இருப்பதால், குற்றங்கள் நடக்கின்ற இடத்திற்கு காவல் துறை அதிகாரிகள் விரைந்து வர இயலுவதில்லை. எனவே, பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று வடசித்தூரில் ஒரு புறக்காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வடசித்தூர் கிராமப் பகுதியில் தீ விபத்து ஏற்படும்போது பொள்ளாச்சியிலிருந்து வடசித்தூருக்கு தீயணைப்பு வாகனம் 30 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அதற்குள் சேதாரங்கள் முழுமை அடைந்துவிடுகின்றன.

எனவே, இப்பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்து தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறோம். பொள்ளாச்சித் தொகுதிக்குட்பட்ட வடசித்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கடந்த 1989 ஆம் ஆண்டு இடம் தேர்வு செய்தும், அரசுக்குச் செலுத்தவேண்டிய பொதுமக்களின் பங்குத்தொகை செலுத்தியும் இதுவரை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை கூர்ந்து இந்த ஆண்டு வடசித்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு பணிந்து வேண்டுகிறேன்.

கோவை–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க கோவையிலிருந்து செட்டிபாளையம், வடசித்தூர் வழியாக ஒரு புறவழிச் சாலை அமைத்துத்தருமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சித் தொகுதிக்குட்பட்ட சூலக்கல் கிராமத்தில் பிரசித்திபெற்ற அருள்மிகு மாரியம்மன் கோயில் உள்ளது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான க.ச.எண் 3—ல் 16.01 ஏக்கர் நிலத்தை 1972 ஆம் ஆண்டு முதல் தி.மு.க—வைச் சேர்ந்த தினகரன் என்பவர் ஆண்டுக்கு ரூ.2,350—க்கு குத்தகைக்கு எடுத்து குத்தகையைப் பதிவு செய்து, அந்தக் குறைந்த குத்தகையையும் கடந்த 5 ஆண்டுகளாக கோயிலுக்குச் செலுத்தாமல், கோயில் நிலத்தை தனது ஆக்கிரமிப்பில் வைத்துள்ளார். எனவே, அவரது ஆக்கிரமிப்பிலிருந்து

நிலத்தை மீட்டு கோயிலுக்கு ஒப்படைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி நகரத்தில் முதியவர்களும், சிறியவர்களும் காலை, மாலையில் உலாவச் செல்ல ஒரு பூங்கா அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலகில் உள்ள அத்தனைபேரும் கடைதேறும் வரை பிறவிவேண்டுமென்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் வேண்டினார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ, இந்த ஒரே பிறவியில் எல்லோரும் எல்லாமும் பெறுவதற்கு இங்கே இல்லாமை இல்லாத நிலை உருவாவதற்கும், இந்தியத் துணைக் கண்டத்தில் இணையில்லா மாநிலமாக, தரணி போற்றும் தன்னிகரற்ற மாநிலமாக மாற்றிகாட்டுவேன் என்று சூளுரைத்து தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கக்கூடிய பொற்கால ஆட்சி தரும் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் கைத்தறி மற்றும் துணிநூல், கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப்பொருட்கள், தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

*பிற்பகல் 1–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

**திரு. ஏ.கே.டி. ராஜா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, என்னை இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்புத் தந்த ஏழைகளின் தோழர் இதய தெய்வம் கேப்டன் அவர்களுக்கும், அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறித் தொழிலுக்குத் தேவையான 100 ஆம் நம்பர் நூல், 80 ஆம் நம்பர் நூல், 60 ஆம் நம்பர் நூல் மற்றும் சிட்டா நூல் போன்ற அனைத்து நூல் வகைகளையும் நெசவாளர்களுக்கு மானிய விலையில் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்



சங்கத்தில் வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானியத் தொகைகளை எவ்வித பாக்கியுமின்றி, உடன் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் தினக்கூலித் தொழிலாளர்களை, அரசு ஊழியர்களாக்கி, அவர்களுடைய வாழ்கை வளம்பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Master Weavers என்று சொல்லப்படுகின்ற தனியாரிடம் வேலைபார்க்கும் நெசவாளர்களுக்கு வழங்குகின்ற போனஸ் போன்று கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கும் அதே விகிதத்தில் போனஸ் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கூட்டுறவு நல வாரியத்தின் மூலமாக நெசவாளர்கள் பெற்றுக்கொள்ளும் அனைத்து நன்மைகளும் தனியார்வசம் வேலை பார்க்கும் நெசவாளர்களுக்குக் கிடைக்க வழி செய்து நெசவாளர்கள் அனைவரின் வாழ்வை வளம்பெற ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள நிலையூர், ஸ்ரீநிவாசா காலனி, கைத்தறி நகர், ஆவனியாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டுவதற்குப் பட்டா வழங்கி அந்த இடத்தில் நெசவாளர்களுக்கும் கைத்தறித் தொழிலில் நெசவுக் கூடம் மற்றும் குடியிருப்புக்கான வீடுகள், வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டிக்கொடுத்தால் அவர்களது வாழ்க்கையின் தரம் உயர வழி கிடைக்குமென தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன. ஆனால் கடந்த ஆட்சியில் பல நூற்பாலைகள் மூடப்பட்டன. எனவே, தமிழக அரசு மீண்டும் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை இயக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்போது நிலவி வரும் நூல் விலை ஏற்றத்தின் முக்கியக் காரணம், இந்தியாவில் தயாராகும் பஞ்சுப் பொதிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனால், இங்கு பஞ்சு பற்றாக்குறை உள்ளது. நூல் விலை ஏற்றம் உள்ளது. இதனால், ஜவுளி நிறுவனங்கள் தங்களுக்கு ஏற்பட்டு வரும் இழப்புகள் காரணமாக உற்பத்தி குறைப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. இதனால் பஞ்சு ஏற்றுமதி செய்வதைவிட, நூலை ஏற்றுமதி செய்ய மத்திய அரசை வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுக்கு ரூபாய் 15 ஆயிரம் கோடி ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ள பின்னலாடை ஏற்றுமதியில் மந்த நிலை உள்ளது.

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக திருப்பூரில் சாய ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இத்தொழிலில் முதலீடு செய்த நிறுவனங்கள், இங்கு வேலைபுரியும் பல இலட்சம் தொழிலாளர்களுடைய நிலைமை பரிதாபமாக உள்ளது. இதனால் சாயக் கழிவுப் பிரச்சினையைத் தீர்க்க 200 கோடி ரூபாயை வட்டியில்லாக் கடனாக வழங்க அரசு திட்டம் கொண்டு வந்துள்ளதை வரவேற்கின்றோம்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், வேலைவாய்ப்பு பதிவைப் புதுப்பிக்கத் தவறிய வேலைவாய்ப்பு பதிவீட்டாளர்கள் புதுப்பித்துக்கொள்ளக்கூடிய சிறப்புச் சலுகையை அளித்து, கால அவகாசத்தை நீட்டித் தருவதற்கு, அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடல் நலமின்மை, இயலாமை காரணமாக மருத்துவச் சான்றிதழ் அடிப்படையில் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கும், வாரிசுதாரர்களுக்கும் மற்றும் அரசுப் பணியில் இருக்கும்போது மரணம் ஏற்பட்டவர்களின் வாரிசுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை நிலுவையிலுள்ளவர்களுக்கும் உடனடியாக அமல்படுத்தினால் வாரிசுதாரர்களுக்கு உதவியாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆண்டுக்கு ஒரு முறை பல இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு வெளியில் வரும்போது, அனைவருக்கும் வேலை கிடைப்பது இல்லை. இவை பல ஆண்டுகளாக உள்ளன. எனவே, இந்த அரசு, சுய வேலைவாய்ப்பினை உருவாக்க வகுத்துள்ள திட்டங்களை அனைத்துப் பகுதிகளுக்கும் அமல்படுத்த வேண்டுகிறேன்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிவாரியாக ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தமிழகத்தில் சுமார் 18 இலட்சம் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். வீட்டு வேலைத் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். எனவே இந்த அரசு மேற்கண்ட தொழிலாளர்கள்



நலனில் அக்கறைகொண்டு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஏ.கே.டி. ராஜா:** இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் 10 புதிய தொழிற்பயிற்சி மையங்கள் தொடங்கப்போவதாகக் கூறியுள்ளது. திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் வேலைவாய்ப்பு இல்லாமல் பல இளைஞர்கள் உள்ளதால் எனது தொகுதியில் ஒரு புதிய தொழிற்பயிற்சி மையத்தை நிறுவ ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். எப்போதும் இல்லாத அளவிற்கு புதிய தொழிற்சாலைகள் தமிழகத்தில் வந்துள்ளன, இன்னும் வரவிருக்கின்றன. பல இலட்சம், கோடி ரூபாய் மூலதனம் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் குவிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சில இலட்ச வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருந்தாலும்கூட உரிமைகளுடனான வேலைவாய்ப்பு இல்லை. பல தனியார் நிறுவனங்களில் கைகள் துண்டிக்கப்பட்டு பணி செய்ய இயலாத இளைஞர்களும் உண்டு. ஒரு தனியார் நிறுவனத்தில் விஷ வாயுக் கசிவு ஏற்பட்டு 200–க்கும் அதிகமான தொழிலாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, இத்தகைய தொழிற்சாலைகளை அரசு ஆய்வு செய்து, பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

8 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்கக்கூடாது என்று சட்டம் இருந்தும் 12 மணிநேரம் வேலை வாங்குகின்ற தனியார் நிறுவனங்களும் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து தொழிலாளர்கள்மீதான வேலைப் பளுவைக் குறைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தொழிலாளி ஒருவர் ஒரு ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்தால் அவரை நிரந்தரம் செய்யவேண்டும் என்பது சட்டம். ஆனால், 4 ஆண்டுகள் கடந்த பிறகும் நிரந்தரம் செய்யப்படாமல் ஒப்பந்தம், பயிற்சி என்ற பெயரில் வேலை வாங்கப்பட்ட தொழிலாளர்கள் ஏராளம். அம்மாதிரியான தொழிற்சாலைகளைக் கண்டறிந்து, தொழிலாளர்களுக்கான வேலையை நிரந்தரம் செய்து,

[திரு. ஏ.கே.டி. ராஜா] [2011 செப்டம்பர் 13

தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் ஏதேனும் ஒரு விபத்தைச் சந்தித்தால், உடனடியாக நிருவாகம் தொழிலாளியுடைய கவனக் குறைவே இதற்குக் காரணம் என்று கூறி, தொழிலாளர்கள்மீது பழி சுமத்தி, நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. தற்பொழுது பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை வரவேற்பது வெறும் தொழில் வளர்ச்சிக்காக மட்டும் இருக்கக்கூடாது. மாறாக, தொழில் வளர்ந்து, தொழிலாளர்கள் வளர்ந்து, சமுதாயம் நன்மையடைய வேண்டும்.

எனவே, இந்த அரசு தொழிலாளர்கள் நலன் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்க அனுமதி வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இத்தொழிலில் திருப்பரங்குன்றம் தொகுதியில் தொழிற்சாலை அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்கண்ட மானியத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு இதய தெய்வம் கேப்டன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்துள்ள தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய அனைத்து நிருவாகிகளுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களும் நாளை (14—9—2011) புதன்கிழமையன்று பதிலுரை வழங்குவார்கள்.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (14—9—2011) புதன்கிழமை அன்று வினாக்கள்—விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



2011 செப்டம்பர் 13]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, (14—9—2011) புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, (14—9—2011) புதன்கிழமையன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2011), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

---

@ 12-9-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2011 செப்டம்பர் 13

*பிற்பகல் 2—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின் மீது கருத்துக் கூற விரும்பும் உறுப்பினர்கள் கூறலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்ன? நீங்கள் முதலில் பேச விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) சரி. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் மன்றத் தடைச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வருவதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்பதோடு, தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளின் சார்பிலும் எங்களுடைய மகிழ்ச்சியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த முறை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் நான் உரையாற்றுகிற நேரத்தில் கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட விவசாயிகளுக்கான கறுப்புச் சட்டமான வேளாண் மன்றச் சட்டத்தை, அது தொக்கி நிற்கிறது; எனவே, அதை அறவே ஒழிக்கிற விதமாக அதைத் தடை செய்து ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருந்தேன். அந்த அடிப்படையில், இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை நான் முதலிலேயே வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால், இந்தச் சட்டத்தின் அடிப்படையில், பாரம்பரியமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள், தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதில்கூட, அல்லது விவசாயம் எப்படிச் செய்யவேண்டுமென்ற ஒரு ஆலோசனை வழங்குவதில்கூட, மிகப் பெரிய தடை இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், வேளாண் பல்கலைக்கழகத்தில் படித்த பட்டதாரிகள்தான் விவசாயத்தைப் பற்றிய சிறு, சிறு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்க முடியும். அப்படி வேளாண் பட்டதாரிகள் வழங்காத ஒரு நிலையில், யாராவது வேறு விவசாயிகள் அனுபவ ரீதியாக வழங்கினால், அது கிரிமினல் குற்றமாக மாற்றப்பட்டு, அதற்கு ஆயிரம் ரூபாய் அபராதத்திலிருந்து சிறைத் தண்டனை வரை விதிக்கலாம் என்கின்ற சட்ட ஷரத்துக்களும் அதிலே இருந்தன. எனவேதான், கடந்த ஆட்சியிலே அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் அந்தச் சட்டத்தைத் தடை செய்ய வேண்டும்; அதைக் கொண்டுவரக் கூடாது என்று சொல்லி, அது ஒரு கறுப்புச் சட்டம் என்றே நாங்கள் அறிவித்தோம். அந்த வகையில், அந்தக் கறுப்புச் சட்டம் இதுவரை விவசாயிகளை அச்சுறுத்திக்கொண்டிருந்தது. தலைக்கு மேலே கத்தி தொங்குவதைப்போல, தொங்கிக்கொண்டிருந்தது. இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தக் கத்தியை அறவே அகற்றி, விவசாயிகளுக்கான ஒரு சுதந்திரத்தை இன்றைக்கு தமிழ்நாட்டில் அந்தச் சட்டத்தைத் தடை செய்வதன் மூலமாக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாட்டில் இருக்கிற ஒட்டுமொத்த விவசாயிகளின் சார்பிலே மீண்டும், மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன்.



2011 செப்டம்பர் 13] [திரு. சு. குணசேகரன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியின்போது சட்டமன்றத்திலே அந்தச் சட்டம் முறையாக விவாதிக்கப்படாமல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோதும்கூட அந்தச் சட்டத்தை கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் நிறைவேற்றினார்கள். அது விவசாயிகளுக்குப் பயன்படாது என்பது மட்டுமல்ல, அந்த வேளாண் சட்டத்திலே அரசு அங்கீகரிக்கக்கூடியவர்களைத் தவிர, மற்ற யாரும் வேளாண்மைக்கு ஆலோசனைகளை வழங்கக்கூடாது, அறிவுரைகளை வழங்கக் கூடாது. அப்படி வழங்கினால், அவர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கக்கூடிய அளவிற்கு ஒரு மோசமான கறுப்புச் சட்டத்தை அவர்கள் நிறைவேற்றியதை அன்றைக்கே நாங்கள் எதிர்த்தோம். ஆனால், சட்டத்தை நிறைவேற்றிவிட்டு கடந்தகால முதலமைச்சர், பின்னாடியே எதிர்ப்பு வலுவானபோது, இந்தச் சட்டத்தை நாங்கள் அமலாக்காமல் நிறுத்தி வைக்கிறோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு நிறைவேற்றியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. இன்றைக்கு விவசாயிகளுடைய உணர்வுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, எங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை நாங்கள் notify செய்யமாட்டோம், ஆகவே, அது அமலுக்கு வராது என்றுதான்

முதலிலே தெரிவித்தார்கள். ஆனால், பின்னால் அந்தச் சட்டம் நம்முடைய அரசமைப்பிலே இருப்பதே ஒரு மிகப் பெரிய அவமானம் என்கிற அடிப்படையில் அந்தச் சட்டத்தையே நீக்குவதற்கான சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதனை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள் ஒரு நிமிடம் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறமையானவர்கள், நல்லவர். நல்ல திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது. குறிப்பாக, விவசாயப் பெருமக்களெல்லாம் சிறப்பாக வாழ்வதற்காக முதியோர் பென்ஷன்கூட கொடுக்கிறார்கள். அதைப் பெற்றுக்கொள்ளக்கூடியவர்கள் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 2—10

ஏற்கெனவே விவசாயத் துறையிலே இதுபோன்ற சட்டம் வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு பெருமைதங்கிய நம்முடைய அமைச்சர் அவர்களிடம் வேண்டுவது, வருங்காலத்தில் இந்த வருடம் இல்லையென்றாலும், அடுத்த வருடமாவது எங்கள் மாவட்டத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டுமெனக் கேட்டு, நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல காரியத்தை இங்கே செய்திருக்கிறார்கள் என்கிறபொழுது,





அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதற்காகத்தான் எழுந்து நிற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படியெல்லாம் நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்றுதான் தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்கு இந்த ஆட்சியை இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்களிலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள், ‘நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன, நம்மீது விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி’ என்று. அதைப்போல விவசாயிகளைப் பொறுத்தவரையிலே இந்தத் தொல்லைகள் இல்லாமல் இருந்தாலே போதும் என்கின்ற அளவிற்குத்தான், நம்முடைய நாட்டிலே விவசாயிகள் இருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே அவர்கள்மீது ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து திணித்தார்கள்; அது இன்றையதினம் போக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் மிகவும் அழகாகச் சொன்னார்கள், அப்பொழுதே இது கறுப்புச் சட்டம் என்று. இது விவசாயிகளைப் பொறுத்தவரையிலே கறுப்புச் சட்டம் மட்டுமல்ல வெறுப்புச் சட்டமாகவும் இருந்தது. அதை நீக்கியதற்காக இந்த அரசைப் பாராட்டி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடைக்கோடியிலே இருக்கக்கூடியவர்களுக்குக்கூட உணவு வழங்க வேண்டுமென்று மனித நேயமிக்கத் தலைவியாகத் திகழ்ந்து வருகிறார்கள் என்பதை இன்று நாடே அறிந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ‘நல்லதைப் படித்தால்தான் நல்லதை நினைக்க முடியும்; நல்லதை நினைத்தால்தான் நல்லதைச் செய்ய முடியும்’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் இன்று நல்லதையே படித்து, நல்லதையே செய்து கொண்டிருக்கிற ஆற்றல்மிக்க முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் விளங்கிக்கொண்டிருப்பதன் அடிப்படையிலேதான், போடப்பட்டிருக்கிற சட்டம் விவசாயிகளுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும், விவசாயிகளினுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி உருவாகாது என்கின்ற அடிப்படையிலேதான், 2009 ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோதே அனைத்திந்திய அண்ணா

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2011 செப்டம்பர் 13

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் வலிமையாக எதிர்ப்பு தெரிவித்தன. ஆனால், பிடிவாதமாக, இந்தச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இது ஒரு கறுப்புச் சட்டம் என்று இங்கே இடதுசாரிக் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் குறிப்பிடுவதைப்போல, கறுப்புச் சட்டத்தைப் போட்டவர் இன்றைக்குச் சட்டத்தால் உள்ளே இருக்கிற நிலை தமிழ்நாட்டில் உருவாகியிருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறபோது, சிறந்த வேளாண்மையைச் செய்கின்ற விவசாயிகள், இயற்கை வேளாண்மை விஞ்ஞானிகள், அதுபோன்று தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அது இயலாத ஒன்றாக, அது இந்தச் சட்டத்தில் இடம்பெறவில்லை என்பதும், இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஒருவர் தன்னுடைய கருத்துகளை, பட்டதாரிகள் அல்லாத வேளாண்மைப் பட்டதாரிகள் அல்லாதவர்கள், தங்கள் கருத்துகளைச் சொல்கிறபோது, அந்தக் கருத்துகளுக்காக அவர்கள்மீது தண்டனை வழங்குகிற ஒரு சட்டம் இங்கே உருவாக்கப்பட்டிருந்தது. முதல் தண்டனையாக ஆயிரம் ரூபாய், 6 மாத காலம் தண்டனை. இரண்டாவது தண்டனையாக 10,000 ரூபாய் 2 ஆண்டுகாலம் தண்டனை என்பது வகுக்கப்பட்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் அந்தச் சட்டத்தாலே பிடிக்கப்பட்டு இன்றைக்கு சிறைச்சாலையிலே இருக்கிற நிலைதான் தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிறபோது அந்தச் சட்டம் மனித நேயமிக்க சட்டமா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

ஆனால், புரட்சித் தலைவி அம்மாவைப் பற்றி, நாங்கள் டில்லி மாநகருக்குச் செல்கிறபோது, சில தலைவர்கள் அங்கே சொல்வார்கள், ‘மக்கள் செல்வாக்கு மிக்க தலைமை; அதேநேரத்தில் அறிவும் ஆற்றலும் மிக்க தலைமை, உலக வரலாற்றில் தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மாவைத் தவிர வேறு யாரும் இல்லையென்று, அவர்கள் குறிப்பிடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தலைமை நமக்கு வேண்டுமென்று அவர்கள் கருதுவார்கள். இல்லையென்று சொன்னால், அவர்கள் மக்கள் செல்வாக்கு மிக்கவர்களாக இருப்பார்கள். அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாக இருப்பார்கள். ஆனால், இரண்டும் ஒருங்கே இணைந்திருக்கிற ஆற்றல்மிக்க தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தச் சட்டம் குறித்த கருத்துகளைத் தெரிந்தவுடனேயே, இந்தச் சட்டத்தை அமல்படுத்தியதை நீக்குவதற்கு, வேறொரு



2011 செப்டம்பர் 13] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று முனைப்பாக நின்று செயல்படுத்தியிருக்கிறார்கள். இதனை இந்த மாமன்றத்தில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக ஏற்று, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டம் சரியானது அல்ல என்பதை வலியுறுத்தினார்கள். அத்தனை பேரும் அந்தச் சட்டத்தை வாபஸ் பெறுவதை மனதிலே கொண்டு, அந்தச் சட்டத்தை நீக்குவதற்காக வரவேற்பைத் தந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.

பிற்பகல் 2—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2011 செப்டம்பர் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14–9–2011) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—



2011 செப்டம்பர் 13]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

124. மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

125. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

126. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)

127. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)

128. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)

129. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)

130. மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

131. கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய செயல்முறைத் திட்டம், 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

132. கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)

133. மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

134. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு–செலவுத் திட்ட செயலாக்கம், 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

[2011 செப்டம்பர் 13

*135.* தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய மக்கள் சாசனம், *2011–2012.* (தமிழ், ஆங்கிலம்)

*136.* கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மற்றும் பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2011–2012.* (தமிழ்)

*137.* மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2011–2012.* (தமிழ்)

*138.* பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை. (*2011–2012*)

*139.* பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (*2011–2012*)

*140.* பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (*2011–2012*)